This is a dance Song in which a mother enquires of her young daughter who the imposing personality was that was standing there; and the daughter replies it was the great God Vishnu and describes His different *avatars* and the miraculous exploits performed by Him in each *avatar*, as Rama, Krishna, Vamana (Dwarf), etc.

No. 57. *Kummi Vasantan:* 103

This is the same dance as No. 58; but the song is in praise of God Subramania. His romance with Valli-Devi and his various exploits are sung.

No. 58. *Kummi Vasantan:* 105

This is a dance by a bevy of young girls who stand in a circle and move round and round, alternately bending and raising their body and clapping their hands at regular rhythmic intervals. This is a common favourite pastime of the girls. The words supposed to be spoken by the leader of the group to her companions, describe their gay dress and their sportive movements. This dance is said to be performed in honour of the

page

Deity at Konesar Temple in Trincomalie. The deity is carried in a procession and the group of girls call to each other to see the glorious procession; they are lost in admiration of the deity and start dancing in His honour.

*No. 59. Swing Vasantan:* 106

This dance is in honour of Kannaki-Devi of the shrine at Chettipalayam village in Batticaloa. The Song starts with invocation to the various deities for help to sing the Swing-song and describes the gorgeously constructed swing. Heavenly damsels place Kannaki on the swing seat and move the swing to and fro, singing propitiatory songs in her praise.

*No. 60. Swing Vasantan I:* 108

This represents another pastime of the gay young girls who sit or stand on a seat slung by ropes or chains and swing to and fro, singing gaily about the swing.

*No. 61. Swing Vasantan II:* 109

This is a variant of No. 60.

*No. 62. Kappal Vasantan:* 110

This song is in the style of the boat-man's song, imitating the swinging motion of a boat. The words are in praise of Goddess Parvati or Kamakshi Amman with whom later on Kannaki-devi is identified and her praise sung.

This song is printed in an incomplete form, its concluding portion found missing and not available in any of the manuscripts collected.

From the foregoing account of the Vasantan songs of Batticaloa, it could easily be gathered that the people of Batticaloa were of a gay and simple disposition and imbued with a deep religious spirit. Their religious attitude was free from any narrow sectarion fanaticism. There was no religious antagonism as between Saivites and Vaishnavites. They worshipped with equal zeal all the Hindu deities. There was cordial fellow-feeling between them and the Sinhalese people, regarding both religious culture and politics. They looked upon the Kandyan King as their own king and prayed to their gods for his well-being and prosperity. They were acquainted with the various important Hindu Shrines of South India and with the culture and traditions of Tamilakam.

In conclusion I should like to express my deep sense of gratitude to all those who helped me in collecting these Vasantan Songs by either lending me their own manuscript copies or obtaining them for me from other owners and made it possible for me to bring about this edition. As has already been mentioned by me, the manuscripts obtained in the villages of Karaitive, Periyakallar, Tettative, Kaluthavalai and Vantarumulai were of great help in settling the text of the Songs and my special thanks are due to the owners of those manuscripts.

It is only my anxiety to prevent the Songs from falling into oblivion that has made me to undertake this difficult though pleasant task.

JAFFNA
10-10-40

*J. T. Sadasiva (Iyer)*
*District Inspector of Schools*

# முகவுரை

உலகுக்கு உறுதி பயக்கும் விழுமிய பொருளை இனிய சொற்களால் ஓசை பொருந்த அமைத்துத் தருபவனே கவி யாவான் என்ப. இந் நல்லிசைப்புலவரது கவித்துவம் வாய்ந்த செய்யுட்கள் தமிழ் நாட்டில் பண்டுதொட்டு நின்று நிலவிக் கற்று வல்ல பெரியோரால் போற்றிக் கொண்டாடப்பட்டு வருதலைக் காண்கின்றோம். செய்யுள் இலக்கணம் முற்ற அமைந்த இவ்வுத்தமக் கவிதைகள் ஒருசாரனவாக: இலக்கணக் குறைபாடுடையனவேனும், நாட்டிலுள்ள பல தொழின் மாந்தரும் தம் உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படுத்திப் பாடி மகிழ்தற்கான பாடல்களும் எத்தனையோ பல இத் தமிழ்நாட்டில் வழங்கி வருதல் உண்மையாம். அவையெல்லாம் தொழில் செய்யும்போதும் தொழில் செய்யாது ஓய்ந்திருக்கும்போதும் இளைப்பு நீங்கி மகிழ்ச்சி பெறும் வாயிலாகக் கொண்டு உற்சாகத்துடன் பாடப் படுவன. சில பாடி ஆடுதற்கும் ஏற்றன. இவ்வாறு மக்களிடை வழங்கும் பாடல்களே நாட்டுப் பாடல்கள் (Folk-songs) எனப்படுவன.

நாட்டுப்பாடல் என்பது சாதாரண மக்களின் பாடல். படிப்பு இல்லாத கிராம வாசிகள், வயலில் உழுகிறவர்கள், நாற்று நடுகிறவர், அரிவி வெட்டுகிறவர்கள், கிணறு வெட்டுகிறவர்கள், தண்ணீர் இறைக்கிறவர், மீன் பிடிப்பவர்கள், ஓடம் விடுகிறவர், வண்டி ஓட்டுபவர்கள் முதலிய சனங்கள் பாடுகிற பாட்டுத்தான் நாட்டுப் பாடல் என்பது. எழுத்தறிவில்லாத இத்தகைய தொழின் மாந்தரின் இருதயத்தில் உணர்ச்சி பொங்கி அதுவே ஒரு சமயம் பாட்டாகப் பெருகுவதுண்டு. அத்தகைய பாட்டில் உணர்ச்சி இருக்கும்; ஓசை இன்பம் இருக்கும்; தாளக்கட்டு இருக்கும்; சொல் தொடை அழகு இருக்கும்; எனினும் இலக்கண வரம்புக்கு உட்படாமலும் இருக்கும். இந்நாட்டுப் பாட்டை ஓலையில் எழுத்தாணிகொண்டோ, காகிதத்தில் பேனையினாலோ எழுதியிருக்கமாட்டார்கள். தலைமுறை தலைமுறையாக நாட்டு மக்கள்

இப்பாட்டுக்களைப் பாடியும் ஆடியும் கேட்டுமே அவை வழங்கி வரச் செய்தனர் என்றறிக.

நாட்டுப் பாட்டுக்கள் பழைய காலத்திலிருந்து வழங்கி வருவனவாயும் இருக்கலாம், சமீப காலத்தனவாயும் இருக்கலாம். இவ்வித விளையாடற் பாடல்கள் பழைய தமிழ்க் காவியங்களிற் காணப்படும் வரிப்பாட்டு என்னும் வகையைச் சார்ந்தன என்னலாம். "வரியாவது அவரவர் பிறந்த நிலத் தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையுந் தோன்ற நடித்தல்" என்றும், "வரிப்பாடல், தெய்வஞ் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் (புகழ்ந்தும்) வரும்" என்றும்,

"சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை
கொந்தி கவுசி குடப்பிழுக்கை—கந்தன்பாட்(டு)
ஆலங்காட் டாண்டி பருமணை னெல்லிச்சி
சூலந் தருநட்டந் தூண்டி லுடன்—சீலமிகும்
ஆண்டி அமண்புனவே டாளத்தி கோப்பாளி
பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி—மீண்ட
கடவுட் சடைவீர மாகேசங் காமன்
மகிழ்சிந்து வாமன ரூபம்—விகடநெடும்
பத்திரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண்(டு)
அத்தசம் பாரந் தகுணிச்சங்—கத்து
முறையீண் டிருஞ்சித்து முண்டித மன்னப்
பறைபண் டிதன்புட்ப பாணம்—இறைபரவு
பத்தன் குரவையே பப்பறை காவதன்
பித்தனொடு மாணி பெரும்பிழுக்கை—எத்துறையும்
எத்திவருங் கட்களி யாண்டு விளையாட்டுக்
கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து—மூத்த
கிழவன் கிழவியே கிள்ளுப் பிருண்டி
அழகுடைய பண்ணிவிக டாங்கம்—திகழ்செம்பொன்
அம்மனை பந்து கழங்காடல் ஆலிக்கும்
விண்ணகக் காளி விறற்கொந்தி—அல்லாத

வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன்
சாந்த முடைய சடாதாரி—ஏய்ந்தவிடை
தக்கபிடார் நிர்த்தந் தளிப்பாட்டுச் சாதுரங்கந்
தொக்க தொழில்புனைந்த சோணண்டு—மிக்க
மலையாளி வேதாளி வாணி குதிரை
சிலையாடு வேடு சிவப்புத்—தலையிற்
றிருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்(டு)
இருண்முகத்துப் பேதை இருளன்—பொருமுகத்துப்
பல்லாங் குழியே பகடி பகவதியாள்
நல்லார்தந் தோள்வீச்சு நற்சாழல்—அல்லாத
உந்தி அவலிடி ஊராளி யோகினிச்சி
குந்திவரும் பாரன் குணலைக்கூத்(து)—அந்தியம்போ(து)
ஆடுங் களிகொய்யு முள்ளிப்பூ ஐயனுக்குப்
பாடும்பாட் டாடும் படுபள்ளி—நாடறியுங்
கும்பீடு நாட்டங் குணாட்டங் குணலையே
துஞ்சாத சும்மைப்பூச் சோனக—மஞ்சரி
ஏற்ற உழைமை பறைமைமுத லென்றெண்ணிக்
கோத்தவரிக் கூத்தின் குலம்."

என்றும், சிலப்பதிகார உரையிற் காணப்படுஞ் செய்திகளான் இது அறியப்படும்.

"மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு" என்னும் இந் நூலில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் மேற்குறித்த வரிக் கூத்துப் பாடல் (Folk-dance song) வகையுள் அடங்குவனவாம். மட்டக்களப்பு நாட்டில் வழங்கி வரும் இப்பாடல்களை அம் மக்கள் வசந்தன் என்றே வழங்குவர். வசந்தனை வயந்தன் என்றுஞ் சொல்வர். அதனால், அவ்விதப் பாடல்களைச் சேர்த்துத் திரட்டிய இந்நூல் "வசந்தன் கவித் திரட்டு" எனப் பெயர் பெற்றதென்றறிக. இப்பாடல்கள் பாடி ஆடுதற்கு அமைந்தன. ஆறுபேர், எட்டுப்பேர், பன்னிரண்டுபேர் ஆகச் சேர்ந்து ஆடுவார்கள். ஆடும்போது ஒவ்வொருவரும் கைகளில் இரு சிறு கோல்களைப் பிடித்து அவற்றை ஒன்றோடொன்று தட்டி ஆடுவர்.

இதனால் இவ்வசந்தன் ஆட்டம் ஒரு விதத்தில் கோலாட்டத்தை ஒத்திருக்கும்.

இந்தக் கவிகளுக்கு வசந்தன் என்றும், வசந்தன் பள்ளு என்றும், பள்ளு என்றும், சிந்து என்றும் பெயர் வழங்கும். இவை எக்காலத்தில் யாரால் இயற்றப்பட்டன எனக் கூறுதல் முடியாது. எனினும் அவற்றின் நடை சொற்பிரயோகம் என்பவற்றை நோக்க அவை மிகப் பழைய காலத்தன அல்ல என்பது தெளிவாம். நரேந்திரசிங்கன் பள்ளு, இராஜசிங்கன் பள்ளு (இல. 23, 24.) என்பன இற்றைக்கு 200 ஆண்டு வரை முற்பட்டன என்பது வெளிப்படை. ஏனையவும் காலத்துக்குக்காலம் பலராலும் ஆக்கப்பட்டுப் பரம்பரையாய் அங்கங்கே வழங்கிவந்தன எனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வசந்தனுக்கும் அது பாடவேண்டிய சந்தத்தைக் காட்டும் தரு என்பது முதலிற் குறிக்கப்பட்டிருக்கும். அந்தத் தருவின் ஓசை விதப்படியே அதன் பின்வருங் கண்ணிகள் பாடப்படவேண்டியன. இப்பாடல்கள் தாளம், ஓசைநயம், மோனை எதுகைத்தொடை நயம் உடையனவாய், பக்தி, உவகை, நகை, வீரம் ஆதிய சுவை பொருந்தி இருத்தலை அவற்றைப் படித்து அறியலாம். பாடி ஆடுபவர் செய்யுட்களைத் தொடர்ச்சியாகப் பாடுதற்கு உதவியாகச் செய்யுட்கள் அந்தாதித் தொடையாக அமைந்திருத்தலும் நோக்கத்தக்கது. சரித்திரத் தொடர்புகள், புராணக் கதைச் செய்திகள் நிரம்ப வருதலையுங் காணலாம். இதனால் இக்கவிகளுட் பல கல்வியறிவு படைத்தவர் சிலரால் ஆக்கப்பட்டன எனத் துணிதல் மிகையாகாது.

மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு மிகப் பெருவழக்காயுள்ளது. கண்ணகி தேவிக்கு ஆலயம் எல்லா ஊர்களிலும் உண்டு. அவற்றுட் சில மிக்க பிரசித்தம் பெற்றன. அவற்றை 9. கூவாய் குயில் வசந்தனிற் கூறியிருத்தலைப் பார்த்தறிக. கண்ணகி தேவிக்கு விழாக் கொண்டாடும் நாட்களில் கிராமத்து மக்கள் இவ் வசந்தன் கவிகளைப் பாடி ஆடுவார்கள். வேறு கொண்டாட்டக் காலங்களிலும் பாடி ஆடுவார்கள். அக்

காலங்களில் மக்களிடை மிக்க களிப்பும், வேடிக்கையும், விளை யாட்டும், உற்சாகமும் இருக்கும். கண்ணகி தேவியே மட்டக் களப்பு மக்களுக்குக் குலதெய்வமாகும். அத் தேவியினது வர லாறும், புகழும், பெருமையும் இப்பாடல்களில் அதிகமாக வருதலைக் காணலாம்.

கண்ணகியைப் பத்தினிதேவி என்று வழங்குதலும் உண்டு. சிங்கள மக்களுள்ளுங் கண்ணகி வழிபாடு சாதாரணமாய் இருந்து வருகிறது. அவர்கள் கண்ணகியைப் பத்தினிதெய்யோ (தெய் வம்) என்பர். புத்த பாஞ்சாலையை யடுத்து, விஷ்ணு தேவால யம், பத்தினி தேவாலயம், கதிர்காம தேவாலயம் என்பவற்றுள் ஒன்றும் பலவும் அமைத்து வழிபடுவார்கள். இம் மூன்று தேவாலயங்களும் மட்டக்களப்புக் கிராமங்களில் எங்குங் காணப் படும். மட்டக்களப்பு மக்களுள் சுப்பிரமணியக் கடவுள், கந்த சுவாமி என்னும் பெயர்கள் அதிகம் வழக்கிலில்லை; வேலாயுத சுவாமி, கதிர்வேலாயுதசுவாமி, சித்திரவேலாயுதசுவாமி என்னும் பெயர்களே வழங்குவன என்றறிக. மேலும் அவர்களுள் சைவ வைஷ்ணவ சமயச் சண்டைகள் கிடையா என்பதும், தெய்வ வழிபாட்டில் சமரசக் கொள்கையுடையவர் என்பதும், பத்தினித் தெய்வ வழிபாடும் பொது அரச பத்தியும் காரண மாகச் சிங்கள மக்களோடு ஒற்றுமையாய் வாழும் இயல்பினர் என்பதும் ஈண்டு அறியக்கிடப்பன. நிற்க:

இலங்கையில் கண்ணகி வழிபாட்டை முதலிற் பரவச் செய்தவன் கயவாகு I என்னும் சிங்கள அரசனுவன். இவன் இலங்கையில் கி. பி. 171 முதல் 193 வரையும் அரசாண்ட வன். கண்ணகிதேவிக்கு முதன்முதற் கோயில் அமைத்துப் பிரதிட்டை செய்து வழிபாடு செய்தவன் சேரதேச அரசனுகிய சேரன் செங்குட்டுவன் என்பான். அதனை,

"நன்னு டணைந்து நளிர்சினை வேங்கைப்
பொன்னணி புதுநிழற் பொருந்திய நங்கையை

அறக்களத் தந்தண ராசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழையு நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்(து)
இமையவ ருறையும் இமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவு நாடொறும் வகுத்துக்
கடவுண் மங்கலஞ் செய்கென ஏவினன்
வடதிசை வணக்கிய மன்னவர் ஏறுஎன்."

(சிலப்பதி. 3, 28, 220—234)

என்பதனல் அறியலாம். இவ்வாறு பத்தினிக்கோட்டஞ் சமைத்துப் பிரதிட்டை செய்யுங் காலத்தில் செங்குட்டுவனது நண்பனாகிய இலங்கைக் கயவாகு I வேந்தனும் அங்குச் சமுகமாயிருந்தனன். செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்கு நித்திய பூசை செய்யும்படி சொல்லித் தான் அக்கடவுளை மும்முறை வலம்வந்து வணங்கி நின்றான். அப்பொழுது கயவாகு மன்னனும் அங்கு வந்து அக்கடவுளை நோக்கி "இச் செங்குட்டுவனைப் போல எங்கள் நாட்டில் யாங்கள் உனக்குச் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்திப்ப, "நீங்கள் விரும்பியபடியே வரந் தந்தேன்" என்று அப்பொழுது ஒரு குரல் உண்டாயிற்று. அதனைக் கேட்டு எல்லாரும் மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள் (சிலப்பதி - வரந்தரு. 155 – 165). பின்பு கயவாகு வேந்தன் இலங்கைக்கு மீண்டுவந்து பத்தினி தேவிக்குக் கோயில் பல அமைத்து நித்திய பூசை செய்வித்து ஆடி மாதத்தில் விழாக் கொண்டாடித்

தன் இராஜதானி வீதிவழியாக ஊர்வலஞ் செய்வித்து வந்தான். அதனால் இலங்கைத் தேசம் மழைவளம் பொலிந்து விளைவு பெருகிச் செழிப்புள்ள நாடாயிற்று என்பது (சிலப்பதி. உரை பெறு கட்டுரையால்) அறியத்தக்கது.

இவ்வாறு கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிற் கயவாகு வேந்தனால் இலங்கைக்குக் கொண்டுவரப்பெற்ற கண்ணகிதேவி வழிபாடு சிங்களவர் தமிழர் ஆகிய இருபாலாருள்ளும் பரவி நிலவுவதாயிற்று. சிங்களவர் பத்தினித் தெய்வம் என்றும், தமிழர் பத்தினிதேவி, கண்ணகிதேவி, கண்ணகை அம்மன் என்றும் வணங்குதல் வழக்காயிற்று. கண்ணகியின் உற்பத்தியைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில் யாதுஞ் சிறப்பாகக் கூறப்பட்டிலது.

"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
..........................................பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ."

என்பதுமட்டுங் கூறப்பட்டுளது. பத்தினிதேவி தாயொருத்தி இன்றி மாங்கனியினின்றும் உற்பத்தியானாள் என்னுங் கொள்கை சிங்கள மக்களுள் வழங்குவது. மட்டக்களப்புத் தமிழரும் அதே கொள்கை உடையர். மட்டக்களப்பில் கண்ணகி காவியம், வழக்குரை காதை எனக் கண்ணகிதேவியின் மான்மியத்தைக் கூறும் நூல்கள் உண்டு. அவை வைகாசிப் பூரணை விழாக் காலத்தில் கோயில்களிற் படிக்கப்படும்.

சிங்களவர் திருவிழாவைப் பெரஹிரா என்பர். கண்டி நகரில் வருடந்தோறும் சிங்கள மக்களால் மிக்க ஆடம்பரத்துடன் நடத்தப்படும் பெரஹிரா என்பது கயவாகு மன்னனால் பத்தினி தேவியைக் குறித்து நடத்திவந்த பாடிவிழாவின் தொடர்ச்சியே என்று கொள்ளலாம். இப் பெரஹிரா இன்றும் ஆடிமாதத்தில் தொடங்கி நடத்தப்படுவதும் இக்கொள்கையை வலியுறுத்துமாறு காண்க.



[கண்டிப் பெரஹிராவில் ஒரு காட்சி]

இவ் வசந்தன் கவிகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகக் காணப்படவில்லை. வேளாண்மையைப் பற்றிய வசந்தன்கள் மாத்திரம் ஒருவாறு கோவைப்பட்டு நிற்பன. இப் புத்தகத்தில் 62 வசந்தன்கள் திரட்டிச் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றை, ஒரே தன்மையான பொருள்பற்றிய கவிகளை ஒவ்வொரு பாகமாக்கி, ஆறு பாகங்களாகப் பகுத்திருக்கின்றேன். முதலாம் பாகம் நூலுக்குத் தோற்றுவாயாகிய கட்டியம். இரண்டாம் பாகம் தோத்திர ரூபமானவை சேர்ந்தது. மூன்றும் பாகம் சரித்திர சம்பந்தமானது. நாலாம் பாகம் தொழில் பற்றியது. ஐந்தாம் பாகம் விநோத சித்திரக் கவிகளும் நகைச்சுவை தருங் கவிகளுஞ் சேர்ந்தது. ஆறும் பாகம் கும்மி ஊஞ்சல் முதலிய விளையாட்டுக் கவிகள் சேர்ந்தது. ஒவ்வொரு வசந்தனையும்பற்றி விசாரித்து அறிந்த செய்திகளை அதனதன் இறுதியில் குறிப்பு எனக் காட்டியிருக்கின்றேன். இக்கவிகளிற் குறிப்பிட்ட ஊர்களைக் காட்டும் படமும் ஒன்று இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இவ் வசந்தன் கவிகளைத் திரட்டி அச்சிட்டு வெளிப்படுத்துதற்கண் ஊக்கமளித்து உதவிபுரிந்த மட்டக்களப்புத் தெற்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தாரை வியந்து பாராட்டுகின்றேன். இப்பதிப்புக்கு ஆதாரமாகக் கிடைத்த ஏட்டுப்பிரதிகளுள் காரைதீவு, கல்லாறு, கழுதாவளை, தேற்றாதீவு, வந்தாறுமூலை என்னுங் கிராமங்களிற் கிடைத்த ஏடுகளே கவிகள் அதிகம் உடையனவாய்ப் பாடநிச்சயஞ் செய்தற்குப் பெரிதும் உதவியாயிருந்தன. இப்பொழுதும் இப்பதிப்பிற் காணப்படும் பாடம் முற்றும் வழுவற்றது என்னுமாறில்லை. சிற்சில செய்யுட்களிற் சுத்த பாடங் காணுதல் அரிதாயிருந்தமையின் அவற்றை ஏட்டிற் கண்டவாறே வெளிப்படுத்தலாயிற்று. அவை குறிப்பில் காட்டப்பட்டிருக்கின்றன.

தம்மிடமிருந்த ஏட்டுப்பிரதிகளைத் தந்தும், பிறரிடமிருந்து பிரதிகளை வாங்கித்தந்தும் எனக்குப் பெருந்துணை புரிந்த அன்பர்களது நன்றியை மறவாது போற்றும் கடப்பாடுடையேன்.

மட்டக்களப்பு மக்களது வாழ்க்கையில் பெரும் மகிழ்ச்சிக்குங் கொண்டாட்டத்திற்கும் ஏதுவாய் முன்பு விளங்கியிருந்த இந்தப் பாடல்கள் கால வேறுபாடு காரணமாகக் கைவிடப்பட்டு ஒழிந்து மறைந்துபோகாவண்ணம் இவற்றைக் காப்பாற்றிவைத்தல் வேண்டும் என்னும் ஆசையே என்னினும் வல்லுநராற் செயற்பாலதாய இவ்வேலையில் என்னை ஈடுபடுத்தியது என்பதைப் பணிவோடு விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம்,
10-10-40

தி. சதாசிவஐயர்


திருக்கோணமலை
சம்பூர்
வெருகல்
மகாவலி கங்கை
வந்தாறுமூலை
மட்டக்களப்பு
தாண்டவன்வெளி
செட்டிபாளையம்
களுவாஞ்சி
மண்முனை
பட்டிருப்பு
கல்லாறு
நீலாவணை
பாண்டிருப்பு
மகிளூர்
கல்முனை
வீரமுனை
காரைதீவு
அக்கரைப்பற்று
தம்பிலுவில்
திருக்கோயில்

கடவுள் துணை

மட்டக்களப்பு

# வசந்தன் கவித்திரட்டு

## Part I — பாகம் I

## 1. வசந்தராசன் கொலு

வசந்தராசன் வாசல் கட்டியகாரன் வரவு

விருத்தம்

சிரசில்முண் டாசு கட்டிச் சிறந்திடு கவசம் பூட்டித்
திரண்மிகு மாலை யோடு தெரிவுறு பதக்கம் பூண்டு
வரமிகு வசந்த ராசன் வளம்பெறு வாசல் மேவும்
உரமுறு கட்டிய காரன் உலாசமாய் வருகின் றானே.

தரு

1. ஆசு மதுரஞ் சித்ரவித்
தாரமுதல் யாவுங் கற்ற
போசனும் வசந்த ராசவாசற்
கட்டியந் தோற்றினரே.

2. அட்ட திசைசூ ழரசர்
இட்டமுற வேகடக்கும்
கட்டழ குடைய கட்டிய
காரனுந் தோற்றினரே.

3. ஆத வன்கு லத்ததிபன்
ஆகிய வசந்தராசன்
நீதி லாவா சலின்மேவுஞ்
செய்யகட்டியங் தோற்றினரே

4. கண்ட வர்ப யங்கதுவக்
காலினிற் சிலம்பு கொஞ்ச
மண்ட லம்பு கழ்வசந்த
வாசற் கட்டியங் தோற்றினரே.

5. மார்பி னிற்ப தக்கமின்ன
வச்சிரமணி மாலைதுன்ன
பாரு ளோர்பு கழுங்கட்டியம்
பாங்குடன் தோற்றினரே.

6. சிந்து ரத்தி லதமிட்டுச்
செங்கையிற்பி ரம்புங்கொண்டு
சுந்தர வசந்தன் வாசல்
துன்னுகட்டியங் தோற்றினரே.

## கட்டியகாரன் தரு

1. துண்டப் பிறைநுதல் மானார்களே — அடல்
கொண்டிப் புவனியை யாண்டிடும்
வென்றிப் படைவீரர்கள் சூழவே — விறல்
மேவுவ சந்தராசர் வாரூர்காண்.

2. கண்டொப் பெனமொழி மாதரே — புவி
காக்கும் வசந்தராசன் வாரூர்காண்
குன்ருப் புறுகுயங்கள் குலவவே — நீங்கள்
கூடி நடித்துவிளை யாடுங்கோ.

3. வெற்றிம தனைநிக ரென்னவே — செய
வீரன்வ சந்தராசன் வாரூர்காண்

பத்திபத் தியாய்மாதர் யாவரும் — வந்து
பாங்குட னுலத்தி யேந்துங்கோ

4. அத்திமு கனுடனே யாறுமுகன் — தன்னை
அருளு மும்மைபதத்தைப் போற்றியே
மெத்துவி னையகல என்றுமே — தினம்
விரும்பித் துதித்துவிளை யாடுங்கோ.

5. வாலைப் பருவமட மானரே — ராசன்
கோலப் பவனியிதோ வாருர்காண்
சீலக்க வரிபணி மாறியே — நின்று
சாலப் புனுகுபன்னீர் வீசுங்கோ.

## வேறு தரு

1. பந்தலொடு தோரணங்கள்
பாளைசெறி பூகநடு வீரே — மின்னும்
பாடக நூபுர மோலிட மாதர்கள்
பாடிந டந்துதுடி போலிடை வாடிட வாரீர்.

2. கொந்தவிழு மாலையணி
கோதை யர்க ளானவர்கள் — யாரும்
கொம்மை பொருந்திய செங்கை வளைகள்
குலங்கி யிலங்க நலங்கொடு நம்மெதிர் வாரீர்.

3. பொற்பனைய மாதர்களே
புங்கமுறு மங்கையரே கேளும் — இப்போ
பூரண கும்பமொ டாரமி லங்கவே
போதகம் போனடந் தேதமிலா திங்கு வாரீர்.

**வசனம் :**

அகோ! கேளும் சபையோர்களே! இராசாதிராசன், இராசமார்த்தாண்டன், இராசகோலாகலப் பிரபுடீகன், எங்களை யாளும் வசந்தமகாராசன் கொலுவீதியில் வருகிறுர். சகலரும் மிகுந்த எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

## வசந்தராசன் வரவு

### விருத்தம்

திருமருவு மாணிக்க நவமணி யிழைத்திட்ட
திகழ்மவுலி சிரசி லிட்டுச்
செப்பரிய முத்துமணி மாலையுட னாரமது
திறல்மேவு மார்பி லங்க,
உருமருவு புயகிரியொ டுயர்கன்ன கிரிபணிகள்
ஒளிகுலவ உடையி லங்க
ஓதரிய சிந்துரப் பொட்டழகெ றிப்பவயும்
உடைவாள் கரத்தி லேந்தித்
தருமருவு சரணார விந்தமதி லேவீர
தண்டைக ளசைந்தொ லிகொளச்
சத்தரா கம்பாடி மத்தளந் தாளந்
ததிந்திமி ததிந்தி மியென
மருமருவு மகமாரி திரிசூலி அபிராமி
மலரடி தனைப்ப ணிந்தே
வாகை யுறும்வசந்த ராசன் களரிதனில்
மகிழ்வி னுடன் வருகின் றாரே.

### சபைத் தரு

1. வண்ண மாமணி மௌலிய திலங்க
வாகை சேர்கர வாளது துலங்க
மன்னர் யாவரு மலரடி யிறைஞ்ச
வசந்த ராசனுங் கொலுவில்வந் தனனே.

2. எண்டி சாமுகத் திறைவர்க ளிறைஞ்ச
ஏசி லாமறை வேதியர் இசைப்ப
அண்டர் யாவரும் மலர்மழை பொழிய
அவனி யோர்தொழும் போசன்வந் தானே.

3. வாகு மாலைகள் வகைவகை குலவ
வரிசை யாய்ப்புய கீர்த்திகள் இலக
தோகை மார்கள்வெண் கவரிக ளசைப்பத்
துரந்த ரன்சபை தன்னில்வந் தனனே.

4. தித்தி மத்தள தாளங்க ளிசைப்பத்
திங்கள் நேர்முக மங்கையர் நடிப்பக்
கத்தி வாளயில் கரமதி லிலங்கக்
காவ லன்சபை காணவந் தனனே.

## மறு தரு

1. தேசம்பு கழுங்குண போசன்ப ரிதிகுல
வாசனெ னும்வசந்த ராசன்வந் தானே.

2. சங்குப டகம்பேரி எங்குமு ழக்கங்கொள்ளத்
துங்கன்வ சந்தராசன் இங்குவந் தானே.

3. காலிற்ச தங்கைதுன்னக் கழல்கலீர் கலீரென்ன
வாலம தன்வசந்த ராசன்வந் தானே.

4. எட்டுத்தி சையுஞ்செங்கோல் கிட்டத்து டன்செலுத்தும்
வட்டக்கு டைவசந்த ராசன்வந் தானே.

## வசந்தராசன் தரு

1. அம்புவி யனைத்து மீன்றாய் போற்றி — என்னை
ஆளும் மகமாரி அம்மே போற்றி
தும்பி முகனைப் பயந்தாய் போற்றி — எங்கள்
சுத்த பரிபூ ரணியே போற்றி.

2. நம்பி னரைக்காப் பவளே போற்றி — தூய
நங்கை கிருபா கரியே போற்றி
இம்ப ருறுநோய் தவிர்ப்பாய் போற்றி — என்றும்
ஏழை களையஞ்ச லென்பாய் போற்றி.

3. பத்தினி கண்ணகை அம்மே போற்றி — இந்தப்
பாரிலுள் ளோர்நோய் தொலைப்பாய் போற்றி
உத்தமபத் திரகாளி அம்மே போற்றி — எந்தன்
ஊழ்வினை தீர்த்து அருள்வாய் போற்றி.

## விருத்தம்

கட்டிய காரனே யான் கருதுமோர் வசனங் கேளாய்
மட்டிலாக் கருணை யாதி மாதங்கி பாதம் போற்றித்
திட்டமாய் வசந்தன் கூத்துச் சிறப்புடன் நடிப்போர் தம்மை
இட்டமாய்க்களரிதன்னில்என்முன்பாயழைத்திடாயே.

**வசனம் :**

கேளும், கட்டியகாரா! நம்மை இரட்சிக்கிற தெய்வங்களைக் குறித்து வசந்தன்கூத்து விளையாடும் பிள்ளைகளைச் சீக்கிரமாய் அழைப்பீராக.

**கட்டியகாரன் வசனம் :**

அப்படியே அழைத்துவருகிறேன், ஐயா! சுவாமி!

## வசந்தன் பிள்ளைகள் வரவு

### விருத்தம்

சென்னியில் தலைப்பா வைத்துத் தெரிவுறு கவசம் பூண்டு
மன்னிய கழல்ச தங்கை வயங்கிடத் திலத மிட்டுத்
துன்னுமார் பினிற்ப தக்கந் துலங்கிட இலங்கு கீர்த்தி
வன்னமாய் வசந்த னட் வாலிபர் வருகின் றாரே.

---

1. குறிப்பு :

**சோலு** என்பது இராச சமுகம்; இராசாக்கள் பரிவாரங்களுள் சூழ வீற்றிருக்குஞ் சபை.

**கட்டியகாரன்** அரசனது வரவைக் கூறுதல், அரசனது புகழ்கூறுதல், அவனது கட்டளைகளைப் பிரசித்தப்படுத்துதல் முதலிய பணிகளைச் செய்யும் சேவகன் ; a herald. கவசம் - சட்டை.

1. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பன கவிவகைகள். இவற்றுள் ஆசு என்பது ஒருவர் ஒரு குறிப்பைக் கொடுத்துப் பாடுக என்றவுடனே பாடுதல். மதுரம் என்பது சொல் பொருள் ஓசை முதலிய இனிமை பொருந்தப் பாடுங் கவி. சித்திரம் என்பது சொல் அலங்காரங்கள் அமைத்துச் செய்யுங் கவி. வித்தாரம் என்பது விரித்துப்பாடுங் கவி, அல்லது காப்பியம். போசன் - தாரா நகரத்து அரசுசெய்த ஓர் அரசன், அவன் கல்வி கேள்விகளிற் சிறந்த பண்டிதனாக இருந்தான். போசராசனைப்போற் பாண்டித்தியம் படைத்தவன் என்பது கருத்து.

3. ஆதவன் குலத்து அதிபன் - சூரியவமிசத்தில் உதித்த தலைவன்.
4. பயங் கதுவ - பயங்கொள்ள.

1. துண்டம் - துண்டு. 2. கண்டு ஒப்பென - கற்கண்டுபோல.
4. அத்திமுகன் - விநாயகக்கடவுள். 5. கவரி - சாமரை.

6. பூகம் - கமுகு. பாடகம் - காலில் அணியுங் காப்பு. நூபுரம் - காற்சிலம்பு; துடி - உடுக்கு.

7. கொந்து - வாசனை. கொம்மை - குவிவு. சத்தராகம் - எழிசை.

# Part II — பாகம் II

## 2. பிள்ளையார் வசந்தன்

### தரு

தெந்தின தினனத் — தினதின தினனத்
தினதின தினனத் — தினனு.

1. சிந்துர முகனென வந்தாய் சரணம்
சீருல வொற்றை மருப்பாய் சரணம்
2. அந்தமு மாதியு மானய் சரணம்
ஆறணி வேணிய னருளே சரணம்
3. இந்தைச் சடைதனில் வைத்தாய் சரணம்
ஈறும் வேறும் இல்லாய் சரணம்
4. உந்திய குடவயி றுடையாய் சரணம்
ஊறிய மதசல முடையாய் சரணம்
5. எந்திர தந்திர மானய் சரணம்
ஏக பரப்ரம மானய் சரணம்
6. ஐயா அடியவர் மெய்யா சரணம்
ஒன்ருய்ப் பலவாய் நின்ருய் சரணம்
7. ஓதிய பாட லுகந்தாய் சரணம்
ஔவுஞ் சவ்வும் ஆனய் சரணம்
8. அஃகரம் யாவும் அணிந்தாய் சரணம்
கரிமுக னெனவினை களைவாய் சரணம்
9. ஙகரம் போல்மழு வுடையாய் சரணம்
சந்தி யுகந்து இருந்தாய் சரணம்
10. ஞயம்படு தேவர்கள் நாதா சரணம்
(இ)டம்படு மறைமுத லானய் சரணம்

11. (இ)ணங்கிய சண்முகன் முதல்வா சரணம்
தண்டை சிலம்பணி பாதா சரணம்

12. நன்மைக் கொருவழி யானுய் சரணம்
பண்டசு ரேசனை வென்ருய் சரணம்

13. மலைமகள் மகனென வந்தாய் சரணம்
யதுகுல ராகவன் மருகா சரணம்

14. (இ)ரத்தின மௌலி அணிந்தாய் சரணம்
(இ)லகிய வடநிழ லுறைவாய் சரணம்

15. வஞ்சக மில்லா மறையே சரணம்
(அ)ழகிய வலவை மணுளா சரணம்

16. (இ)ளமையு முதுமையு மில்லாய் சரணம்
(அ)றமுந் திறமும் உடையாய் சரணம்

17. (அ)னந்தமு மடியனை யாள்வாய் சரணம்

---

2. குறிப்பு:

1. சிந்துரமுகன் - யானைமுகத்தை யுடையவன். மருப்பு - தந்தம், கொம்பு.

2. ஆறு அணி வேணியன் - கங்கையைத் தரித்த சடையையுடைய சிவபெருமான்.

5. எந்திரம் - யந்திரம், மந்திர சக்காம். தந்திரம் - ஆகமசாத்திரம்.

8. கரிமுகன் என - கரிமுகனே என்று சொல்ல. கரி - யானை.

9. சந்தி யுகந்து இருத்தல் - பல வழி கூடுமிடங்களில் தெருவோரத்தில் பிள்ளையார் உருவம் வைக்கப்பட்டு, அதில் அக்கடவுள் மகிழ்ந்திருந்து அருள் செய்தல்.

12. பண்டு - முற்காலத்தில். அசுரேசன் - யானைமுகத்தையுடைய ஓர் அசுரத்தலைவன். இது, விநாயகக்கடவுள் கயமுகன் என்னும் அசுரனைச் சங்கரித்த செய்தியைக் குறிப்பது.

13. யதுகுலத்திற் பிறந்தவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி. ராகவன் - ரகுகுலத்திற் பிறந்த ஸ்ரீ ராமன். இருவரும் திருமாலின் அவதாரங்கள் ஆதலின் இரு வேறுகுலங்களையும் ஒருசேரக் கூறித் திருமாலைக் குறிப்பிட்டார் என்றறிக.

14. வடநிழல் - ஆலமரநிழல்.

15. வலவை - வல்லபை; வல்லபை தேவிக்குக் கணவர் என்பதாம்.

# 3. பிள்ளையார் வசந்தன்

வேறொன்று

தரு

தெந்தின தினனாத் — தினதின தினனா
தினதின தினனாந் — தினனானா.

1. திக்கிட தரிகிட கணபதி சரணம்
சீரிய யானைக் கன்றே சரணம்

2. விக்கின விநாயக கணபதி சரணம்
மைக்கரு மேனியன் மருகா சரணம்

3. வாரண மதமுள கணபதி சரணம்
அன்புடை யமரர்கள் நாதா சரணம்

4. ஆபத் துணையே கணபதி சரணம்
இண்டைச் சடைமுடி இறைவா சரணம்

5. ஈசன் றன்திரு மகனே சரணம்
உன்னிய கரும முடிப்பாய் சரணம்

6. ஊர்பல சந்தி உகந்தாய் சரணம்
எம்பெரு மானே இறைவா சரணம்

7. ஏழுல குந்தொழ நின்றாய் சரணம்
ஐயா கணபதி நம்பீ சரணம்

8. ஒற்றை மருப்புடை வித்தக சரணம்
ஓங்கிய பிள்ளைகள் தலைவா சரணம்

9. ஔவிய மில்லா தவனே சரணம்.

# 4. செவ்வாய்ப் பள்ளு

தரு

தினனுனத் தெனனுன
தென்னு நாதின தென்னுன
தினனுதென் னுதினதெந்தின
தென்னு நாதின தென்னுன.

1. சீர்பொ ருந்துஞ் சிறிமுகனைத்
தெண்டனிட் டேயொரு சிந்திசைக்க
கார்பொருந்துங் கரிமுகனை
கணபதி பாதம் மறவேனே.

2. மறவாது னைப்புகழ்ந் தேதினம்
வாழ்த்தொலி செய்ய அருள்புரியும்
திறமேவு சிவன்மக வான
சிறீமுக னேயருள் செய்யுமையா.

3. ஐயா கவுரிபங்கா நல்ல
அச்சுத னர்தமக் குற்றநண்பா
வெய்ய வினையகற்றி யுந்தன்
மெய்ப்பத மேயருள் வித்தகனே.

4. வித்தாய் முளைத்தவ ளேயிந்த
மேதினி யாவையும் பெற்றவளே
சத்தா பரணம் புனைந்திடும்
சங்கரியே யுன்றன் தாள்துணையே.

5. துணையாகிய பார்வதி யேநல்ல
தூயவளே துயர் தீருமம்மா
இணையாகிய நாமகள் பூமகள்
எந்தன் மனத்தி லிருந்தருளே.

6. அருள்சேரு மிராகவனே எங்கள்
ஆரணனே பரி பூரணனே
இருள்மாயை தவிர்த்தெளி யேனுக்
கிடையூறு வாராமற் காத்தருள்வாய்.

---

4. குறிப்பு:

கண்ணகை தேவிக்கு விழாச் சிறப்புச் செய்து கொண்டாடுங் காலத்தில் செவ்வாய்க்கிழமையில் பாடி ஆடப்படுவதால் இது செவ்வாய்ப் பள்ளு எனப் பெயர்பெற்றது என்பர்.

1. சிறீ என்பது சிறி எனக் குறுகி நின்றது. சிறீமுகன் - அழகிய (மங்களமான) முகத்தையுடையவன். சிந்து – ஓர்வகை இசைப்பாட்டு.

3. கவுரி - பார்வதி. கவுரிபங்கன் - சிவன்.

4. வித்தாய் முளைத்தவள் - உலகந் தோன்றுதற்குக் காரணமானவள்.

---

## 5. தானைப் பள்ளு

### தரு

தானை தானை தன
தானை தந்தனத் தானை
தானைதன் னைதன தந்தன
தானைதந்தன தானை.

1. சிவகாம சவுந்தரி யாகிய
தேவி பதப்புக ழேயுரைக்கத்
தவஞான பரப்பொரு ளாகிய
தந்திமு கத்தவன் தாள்துணையே.

2. துணையான கலைமக ளே!
தூயவளே தமிழ் சொல்லுதற்கு
இணையாக என்னாவில் நடந்திசை
யேற்றிடஉந்த னிருபதந் தா.

3. பதமே யருள் புரியும்
பத்தினி கண்ணகை யானவளே
இதமாக உனைத்தொழ வேயுன்
இணைப்பத மான தெமக்கருளே.

4. தேவர்க ளானவர் சூழ்ந்துவரத்
தெய்வமின் னார்கள் மலர்சொரியப்
பாவலர் நாவலர் பாடிய கண்ணகை
பங்கயப் பாதம் மறவேனே.

5. பம்பை தவில்முர சார்ப்பரிக்கப்
பாடக நூபுர மோலமிட
சம்பிரம மான பரம்பொரு ளாகிய
சங்கரி பாதந் துணையாமே.

6. கொம்பு குழலொடு தாரைசின்னங்
கூடியே நாகசின் னந்தொனிக்க
இம்பர் செழித்திட வென்றுவந்த
ஈஸ்வரி தன்புகழ் யான்மறவேன்.

---

5. குறிப்பு:
இப்பள்ளைப் பாடுதற்கு ஆகிய தரு 'தானனே' என்று தொடங்குவதால் இது தானனைப் பள்ளு எனப் பெயர் பெற்றது என்பர்.
5. சம்பிரமம் - சிறப்பு. பம்பை - ஒருவகைப் பறை.
6. கொம்பு - ஊதப்படுங்கொம்பு, வாத்தியம். குழல் - புல்லாங்குழல்.

# 6. களரி வசந்தன்

### தரு

தானதன் னதன தானதன் னதன
தானதன் னதன தானதன்ன.

1. சீரணி காஞ்சிதில் லைப்பதி மாறன்
திகழும் மதுரைப் பதியமர்ந்த
காரணி கண்ணகை யம்மைதன் பேரிற்
களரி வசந்த னிசைபாட.

2. வாரணி கொங்கை வலவைக் குரிய
மதசல மாறென வேயிழியும்
தாரணி தந்திமு கத்தவனுஞ்
சரசோதியு நாவிற் றமிழ்புரிய.

3. அந்தர துந்துபி ஆர்ப்பரிக் கத்தே
வரம்பைய ராலத்தி யேந்திவர
இந்திர விமானத்து வந்திடு மாதின்
இணைப்பத மென்றுந் துணையாமே.

4. அம்பிகை சூலி சவுந்தரி யாகி
யரனிடப் பாகம மர்ந்தருளும்
தும்பி முகனை அருள்புரி தேவிதன்
தூயம லர்ப்பதம் யான்மறவேன்.

5. மாவின் கனியென வந்துதித் துமக
வாகிநற் பேழையில் வாரிதியில்
தேவின் பெருமையி னலடை யச்சிவ
தெய்வீக மானகர் கண்டெடுத்து

6. தேசம் புகழ வளர்த்துமா சாத்தனர்
சிறுவற்கு நன்மண மேமுடிக்கப்
பாசம் பெருகிய மாறன்ப திமேய
பத்தினி பாதத்தை யான்மறவேன்.

7. கோவலன் றன்னைக் கொலைவிளைத் திட்ட
கூடற்பதி மேவிய கைதவனை
யாவருங் காண அழித்து மதுரை
அனலிடுங் கன்னியை யான்மறவேன்.

8. பொன்செய் கொல்லனை யும்வதைத் தேசின்ம்
பொங்க இடைச்சியர் போந்துசென்று
வன்கண் தணிந்தனல் மாற்றிடு வாயென்று
மாது பதத்தை வணங்கினரே.

9. வெண்ணெ யிடைச்சியர் வேப்பிலை கொண்டு
மிகுநறுந் தீர்த்தமிட் டேதுதிக்க
கண்ணகை யம்மன் குளிர்ச்சி யீடைந்த
கடாட்ச மெப்போது மறவேனே.

---

6. குறிப்பு :

களரி - கூத்துப் பயிலும் இடம். களரி அமைத்து அதனிடத்தில் ஆடப்படுவதனல் இது இப்பெயர் பெற்றதுபோலும்.

1. காஞ்சி - காஞ்சீபுரம். தில்லை - சிதம்பரம். மாறன் - பாண்டியன்.

7. கூடல் - மதுரை. கைதவன் - பாண்டியன்.

8. வன்கண் - கொடுமை, கோபம். 9. கடாட்சம் - கடைக்கண் பார்வை, அருட் பார்வை.

இவ் வசந்தனில் ஐந்தாம் செய்யுளில் தொடங்கிக் கண்ணகையின் தோற்றம், வளர்ப்பு, விவாகம், கணவனது பிரிவு, அதனல் எழுந்த கோபம், குளிர்த்தியினல் கோபம் மாறி அருள் செய்ததாகிய வரலாறு கூறப்பட்டுள்ளது.

---

## 7. களரி வசந்தன்

வேறு வகை

### தரு

தானன தானன தான தானின
தான தந்தனத் தானனை.

1. பூமகள் நாமகள் போற்றுஞ்சம் பூர்வதி
பூவை பராபரப் பாவைநல்லாள்
சாமளை யாமளை வெங்கரி தங்குரி
தன்புடை தங்கிய சங்கரிமேல்

2. கோமள மேவுயர் பால மனேகரக்
கோல வசந்த னிசைபாட
மாமத மாறென ஊறும் மகாசல
வாரண மாமுக வன்றுணேயே.

3. வேத புராண புராதனி சம்பூர்
மேவிய பத்திர காளிதன்மேல்
மாதவ மோடியல் நாடக மாடிய
வந்து வசந்த னிசைபாட

4. சூலிகிரு பாகரி மாலினி மாதரி
தோகைசம் பூர்வரு மேகநிற
நீலி கபாலினி வல்லி அம்மைக்கு
நிகழ்த்து வசந்த னிசைபாட

5. மந்தரி யந்தரி சம்பூர் மேவிய
வல்லிஅம் மேயருள் வில்லியம்மே
சுந்தரி வேத துரந்தரி மேற்புகழ்
சொல்லும் வசந்த னிசைபாட

6. எந்தனுடை துன்பம் தீவினை யெல்லாம்
இப்போ தகற்றி யிடவேணும்
அந்தரி யேயெங்கள் சம்பூர் வாழருள்
அம்மே யுந்த னடைக்கலமே.

7. நாரணி யேயுல கேழுடைய
நாயகி யேயயன் மாலறியா
ஆரணி யேயெங்கள் சம்பூர் வாழருள்
அம்மே யுந்த னடைக்கலமே.

## மறு தரு

தானதன்ன தனத் தானதன்ன தனத்
தானதன்ன தனத் தானதன்ன.

1. காதாடப் பணி தானடக் குழற்
காராடக் குழை யேயாட
வாதாடிச் சிறு மானரிப் படி
மாதா வுக்குமுன் னடினரே.

2. தொய்யிற் றுணைமுலை மீதணிந்து அம்மன்
தொங்க லெழும்ப அசைந்தாடி
தெய்வத்து ரைப்பெண்ணே வல்லியம் மேயென் று
தேன்மொழி மங்கையர் ஆடினரே.

3. அம்பே யும்விழி யாளே நல்ல
ஆலைக் கரும்பு மொழியாளே
சம்பூர் வாழ்எங்கள் வல்லியம்மே
தாயே உந்த னடைக்கலமே.

---

7. குறிப்பு:

சம்பூர் என்பது திருகோணமலைப் பிரிவில் கொட்டியாரப் பற்றிலுள்ள ஓர் ஊர். இங்குள்ள காளிஅம்மன் பேரிற்பாடியது இக்கவி என்றறிக.

1. வெங்கரி தங்குஉரி தன்புடை தங்கிய - யானைத் தோலைத் தன் மேற் போர்த்த.

2. மகா அசலம் - பெரியமலை. மறு தருவில் வரும் 2-ம் கண்ணி-பாடம் சுத்தமில்லை.

---

# 8. முத்தமிழ் வசந்தன்

## தரு

தின தென்னுனத் தின தென்னுனத்
தின தென்னுனத் தினதென்ன
தின தென்னுனத் தின தென்னுனத்
தின தென்னுனத் தினதென்ன.

1. சீர்பொருந் துங்கய மாமுகத்தோனே
சிந்துசொல்லக் ருபை தாவென்னுவிற்
செழிப்பு டன்கவி பாட வேயருள்
செந்தி மாநகர்க் கந்தனே.

2. வார்பொ ருந்துங்கலை மாமக ளாரே
மாதும ணேன்மணி யேயென்னுவில்
வழுத்தி யேகவி மாலை பாடிட
வந்தருள் செய்யும் சந்ததம்.

3. அந்தி வண்ணனை, ஆறு சூடியை
ஆறு மாமுகற் கையனை
பந்தி பந்திய தாக யாவரும்
பாடியே துதித் தாடுவோம்.

4. சந்த்ர சேகர நாத னாகிய
தாது மாமலர் சூடியை
தந்தி யீருரி போர்த்த சங்கர
சாமியைத் துதித் தாடுவோம்.

5. கொந்து லாவு குழலி பங்கனைக்
கூற்றை யுதைத்த பாதனை
கோல மாகிய நீல கண்டனைக்
கூடிப் பாடி யாடுவோம்.

6. நந்தி தேவனை விந்தை மேவிய
நாதனைத் துதி கூறியே
பந்த னைகெட வந்தி யாவரும்
பரவ சத்துடன் பாடுவோம்.

7. ஆடு பாதனை மாட தேறிய
ஐயனைப் பணிந் தேத்தியே
அஞ்சலி செய்து சஞ்சலங் கெட
அனைவரும் புகழ்ந் தாடுவோம்.

8. நீடு காலனைச் சூல பாணியை
நிருத்தனைப் பணிந் தேத்தியே
நெஞ்ச கந்தனில் வந்தி டுந்துயர்
நீங்க வேதுதித் தாடுவோம்.

9. தேவி பார்வதி மாது சுந்தரி
செங்கண் மாலவன் தங்கையைச்
சீத நாண்மலர் மாலை தாங்கிய
செல்வி யைப்புகழ்ந் தாடுவோம்.

10. ஆவியா யெங்கு மேவு கண்ணகை
அம்மை யைப்புகழ்ந் தேத்தியே
அடிய ராகிய படியு ளோர்தினம்
அன்பு டன்பணிந் தேத்துவோம்.

11. செட்டி மாநகர் மேவு கண்ணகைத்
தேவி யைப்புகழ்ந் தேத்தியே
துட்ட நோய்பிணி தீர்ந்தி டும்படி
சோதி யைத்துதித் தாடுவோம்.

12. மட்டு லாவிய மாலை தோளணி
வையை மேவிய மாறனை
அட்ட கண்ணகை யம்மை யைப்புகழ்ந்
தனைவ ருந்துதித் தாடுவோம்.

13. ஆதி யாகிய சோதி கண்ணகை
அம்மை யாகிய செம்மையை
ஆடிப் பாடிக் கூடித் துதித்து
அனைவரும் புகழ்ந் தாடுவோம்.

14. சோதி யாகிய மாது சுந்தரி
தோகை யாகிய மாயையைத்
தூய காரணி நேய பூரணி
துணையெனச் சொல்லிப் பாடுவோம்.

---

8. குறிப்பு :

இயல் இசை நாடகம் ஆகிய மூன்றினையுந் தழுவி இருத்தலினாலே இது முத்தமிழ் வசந்தன் எனப்பட்டது எனலாம். கற்றவர்களும் படித்து மகிழத்தக்க சொல்நயம் பொருள்நயம் பொருந்தி விளங்குதலும், சந்த இன்பமும் தாளக்கட்டும் உடையதாய் இசைவல்லார் பாடும்போது இன்பம் பயத்தலும், பாடி ஆடுதற்கு ஏற்றதாதலும் ஆகிய இம் முத்தமிழ்த் தன்மைகளும் இதிற் பொருந்தி இருத்தல் காண்க.

## 9. கூவாய் குயில் வசந்தன்

தரு

தெந்தென்ன தென்னதின தெந்தென்ன தென்ன தெய்,தெய் தென்னன தென்னதின தெந்தென்ன தென்ன.

1. திங்களொடு சங்கரவு கங்கைசடை மீதுலவு
தேவாதி தேவரென்று கூவாய் குயிலே.
துங்கமுறு கொன்றையுட னங்கைமழு மானேந்தும்
தூயசிவ சோதியென்று கூவாய் குயிலே.

2. அண்டபகி ரண்டங்வ கண்டபிர தாபனென்றும்
ஆதரவ தாகவேநீ கூவாய் குயிலே
தண்டலைசெ றிந்தசயி லத்தினிலமர்ந் தவெங்கள்
தற்பரனை நித்தமும்நீ கூவாய் குயிலே.

3. செட்டிநக ரத்துலவு தேவிகண் ணகையைநிதம்
தேடியே நினைந்து கூவாய் குயிலே
பட்டிநகர் தம்பிலுவில் பாடல்புகழ் காரைநகர்
பத்தினிகண் ணகையென்று கூவாய் குயிலே.

4. வெற்றிபுனை வீரைநகர் மேவரிய கல்முனையும்
மேவியகண் ணகையென்று கூவாய் குயிலே
உற்றபாண் டிருப்பினோ டுலவியநீ லாவணையில்
ஓதரியகண் ணகையைக் கூவாய் குயிலே.

5. மட்டுறுகல் லாறுமகி ழூரெருவில் வாசமுறு
மாதுபரா சக்தியென்று கூவாய் குயிலே
செட்டிபாளையம் மண்முனை சேர்ந்ததாண் டவன்வெளியும்
சென்றமர்ந்த கண்ணகையைக் கூவாய் குயிலே.

6. அங்கொணமை மற்றுமுள்ள எங்குமாய் நிறைந்த
அகிலோகபரா சக்தியென்று கூவாய் குயிலே

துங்கமுறுகண்ணகையின் பங்கையமலர்ப்பதத்தை
சோடசோப சாரத்தோடு கூவாய் குயிலே.

9. குறிப்பு:

தெய்வங்களின் சிறப்பையும் புகழையுங் கூறிக் கூவும்படி குயிலுக்குச் சொல்வதாக அமைந்ததனால், இக்கவி இப்பெயர் பெற்றது. இதனைப் பாடி ஆடும்போது 'கூவாய் குயிலே' என்பதனைப் பாடி 'கூஇ' என்று குயில் கூவுவதுபோன்ற ஒலிக்குறிப்புச் செய்தல் வழக்கமென்பதும் அறிக.

2. பிரதாபன் - மகிமையுடையவன். தண்டலை - சோலை. சயிலத்தினில் - (கைலை) மலையில். தற்பரனை - பரம்பொருளை.

3—6. இச்செய்யுட்களில் கண்ணகைதேவிக்குரிய ஆலயங்கள் அமைந்துள்ள ஊர்கள் சொல்லப்படுகின்றன. தம்பிலுவில், காரைதீவு, வீரைமுனை, கல்முனை, நீலாவணை, பாண்டிருப்பு, கல்லாறு, மகிழூர், எருவில், செட்டிபாளையம், மண்முனை, தாண்டவன்வெளி என்பன மட்டக்களப்பிலுள்ள ஊர்களாம். அங்கொணமை (அங்கொணமைக் கடவை) என்பது யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் ஊர். சோடசோபசாரம் - 16 வகை உபசாரங்கள்.

# 10. ஆறுகம்பு வசந்தன்

தரு

தத்தன தனத்ததன தத்தன தனத்ததன
தத்தன தனத்த தனதானின.

1. சித்திரவி மானமீதில் முத்துமாலை மார்பிலங்கத்
தெருவீதியில் வருவதிவ ரார்மின்னே?
வெற்றிவடி வேலவர்க்குச் சொந்தமா துலனை
விந்தைசெறி யிராமரிவர் காண்மின்னே.

2. காதினிற்குண் டலமின்னக் கையினிற்க டசந்துன்னக்
கந்தரம்போல் வருவதிவ ரார்மின்னே?
பூதனை முலையினுட னுவியு மருந்திமுன்பு
பூபாரந் தீர்த்தகண்ணர் காண்மின்னே:

3. சங்குசக் கர்மிலங்கத் தண்டாயு தந்துலங்கச்
சங்கையுடன் வருவதிவ ரார்மின்னே?
மங்கைபதி னுயிரவர் தங்களை யொருநொடியில்
மாலையிட்ட ராமச்சந்த்ரரிவர் காண்மின்னே.

4. அஞ்சனநி றத்திநெடு பங்கயமா துந்துலங்க
ஆடல்புரி தேவரிவ ரார்மின்னே?
கஞ்சனெனு மாதுலனை எஞ்சிடவ தைபுரிந்த
காயாம்பூ வண்ணரிவர் காண்மின்னே.

5. ம்ஞ்சுலவு செங்கருட னுந்தியதன் மேலிவர்ந்து
வாசமுடன் வாறதிவ ரார்மின்னே?
பஞ்சவருக் காய்விசயன் பாகனென வந்துதவு
பாரளந்த மாயனிவர் காண்மின்னே.

6. ராமா ராமா கோவிந்தா, அரி
ராம கிருஷ்ண கோவிந்தா
அரி ராமா கோவிந்தா, அரி
ராம கிருஷ்ண கோவிந்தா.

---

10. குறிப்பு:

ஆறுபேர் சேர்ந்து நின்று பாடி ஆடி நடித்தற்கு உரியதாகலின் இது ஆறுகம்பு வசந்தன் எனப்படும். இது விஷ்ணுமூர்த்தியைப் புகழ்ந்து பாடிய பாட்டு. விஷ்ணுவின் அவதாரங்களாகிய இராமர், கிருஷ்ணன் என்பவர்களைத் திருமாலாகவே உபசரித்துப் புகழ்ந்து இரு தோழிப் பெண்கள் தம்முள் சம்பாஷித்ததாக அமைந்துள்ளது.

1. மின் - பெண்.

2. கந்தரம் - கார்முகில்.

4. அஞ்சனம் - கருமை, மை.

5. மஞ்சு - வலிமை, அழகு. பஞ்சவர் - பாண்டவர் ஐவர். விசயன் - அருச்சுனன். பாகன் - தேர் செலுத்துவோன், சாரதி.

# 11. தேவி வசந்தன்

## தரு

தாந்திமிக்க திமிக்க திமிக்கத்
தத்திமி தொங்கத் தாவென்ன

1. ஆந்த ரங்க மனத்துள தேவனை
அகண்ட மெங்கும் அநாதியு மான
வாய்ந்த மத்த சலஞ்சொரி கின்ற
வாரண னைப்பணிந் தேத்திடு வோம்.

2. பாந்த ளிற்பதம் வைத்து நடித்த
பச்சை நிறத்தரி பாதம் நினைந்தே
ஆய்ந்த அர்ச்சனை அஞ்சலி செய்தே
யாவரு மேதுதித் தாடி டவாரீர்.

3. வேய்ந்த உற்பல மாமலர் குல்லை
விளங்கு வெற்றிவே லாயுதர் தம்மை
சாந்த னைக்கு மனத்தினி லுன்னி
சந்ததமும் புகழ்ந் தாடிட வாரீர்.

4. ஏந்தி டுங்கர மஞ்சலி செய்தே
ஏக பராபரை தன்புக ழோதி
காய்ந்தி டுந்துய ரானது நீங்கக்
கண்ணகை யைப்புகழ்ந் தாடிட வாரீர்.

5. அல்லி மலர்க்குழ லாளபி ராமி
அம்மைப தந்தனை யேதொழு தேத்தி
சொல்லிய துன்ப வினைக்கடல் நீங்கத்
தூய்மை யுடன்துதித் தாடிட வாரீர்.

6. வாரி ருக்குந்தன மாமயி லாரே
மாது பராபரை யம்மையைப் போற்றி
சீரி ருக்குந் தண்மண மலர்சிந்தித்
தேவி தனைப்புகழ்ந் தாடிட வாரீர்.

7. வாரு முன்பு வழுதியை வதைத்த
மாது பராபரை தன்புக ழோதிக்
கூரு மன்பொடு கூடியெல் லோரும்
கோதை தனைப்பணிந் தாடிட வாரீர்.

8. ஆடு கின்ற பதத்தனை யெங்கள்
அம்மையை யென்று மகத்தினி லுன்னி
நாடு கின்ற அருட்கதி யெய்த
நம்பி யர்ச்சனை செய்குவம் வாரீர்.

11. குறிப்பு:

1. ஆந்தரங்கம் - உற்ற துணைவன், இரகசியம். அகண்டம் - பிரிக்கப்படாதது. அநாதி - தொடக்கம் இல்லாதது. வாரணன் - யானை முகத்தையுடைய விநாயகக் கடவுள்.

2. பாந்தள் - பாம்பு. அஞ்சலி - கை குவித்து வணங்கல்.

3. உற்பலம் - கருநெய்தல்பூ. வேய்ந்த - சூடிய. குல்லை-வெட்சிப்பூ.

4. பராபரை - பரம்பொருளாகிய சத்தி.

7. வழுதி - பாண்டியன். கோதை - பெண்; இங்கு பத்தினிதேவி

8. ஆடுகின்ற பதத்தன் - நடராசமூர்த்தி.

# 12. கிறுகு வசந்தன்

## தரு

தெந்தின தினனத் தினதின தினன
தினதின தினனத் தினனனை.

1. சிந்துர வதனச் சுந்தர முலவு
தேவர்க் கொருமுத லானவனைப்
பந்தனை யகலச் சிந்தனை மகிழப்
பாடிந டந்திட வாருமடே.

2. வாருமடீ மலை மாதுதன் மைந்தனை
வாசமு டன்துதி கூறிடவே
கூறுமடீ மன நேசம தாயெங்கள்
தும்பி முகன்சிவன் மைந்தன்றனை.

3. மைந்தனை ஆகெனும் வாகன மேறிமுன்
மாபெல முள்ள கயமுகனைச்
சிந்தை குலைந்திட வேவதை செய்திடு
தேவுத னைப்புகழ்ந் தாடுமடீ.

4. வடவரை மீதிலொர் பாங்கரி லன்றுமா
பாரத மாகிய வசனமதைத்
திடமுட னேவரைந் தெழுதிய தெய்வ
சிகாமணி யைப்புகழ்ந் தாடுமடீ.

5. மத்தள தாளந் தத்திமித் தாவென
வலவைக் குரியம ணுளனென்று
தித்தா தித்திமி திமிதா தித்திமி
திந்தோ மென்றிட வாருமடீ.

---

12. குறிப்பு:

கிறுகு வசந்தன் என்பது இந்த ஆட்டத்தை ஆடுபவர்கள் சுற்றித் திரும்பித் திரும்பி ஆடுவதனுல் இதற்கு வந்த பெயர். கிறுகுதல் என்பது திரும்புதல் என்னும் பொருளில் மட்டக்களப்பில் வழங்குஞ் சொல்.

1. சிந்துரவதனம் - யானைமுகம். பந்தனை - கட்டு, ஆணவம் முதலிய குற்றங்கள்.

3. ஆகு - பெருச்சாளி (எலி).

4. வடவரை - மகாமேருமலை.

# 13. கிறுகு வசந்தன்

(சித்ரவேலர்) இன்னொரு வகை

1. கொடியிடை யாகிய கோதையரே நீங்கள்
கூடுமடி யெங்கள் வேலவர்முன்
அடியுமடீ நல்ல பரத விதங்களை
அங்கண ஞரருள் மைந்தனென்றே.

2. வேல்நிக ரொத்த விழியா ரேசித்ர
வேலவ ரைப்பணிந் தாடுமடீ
கோலமி டக்குளிர் சந்தன முங்குழன்
மாலையு மேதரு வார்தோழி.

3. தத்துவ மிஞ்சிய வித்தக மானே
தாழ்குழ லேபணிந் தாடுமடி.
முத்துடன் மாலை கழுத்தி லணிந்திடு
மொய்குழ லேபணிந் தாடுமடி.

4. கப்பக ஞர்நித மர்ச்சனை செய்யக்
கரிமிசை வாறவர் ஆர்தோழி
முப்புர நீறெழச் செய்த சிவனருள்
முருகவே ளாமடி மானரே.

5. திட்டம தாகவே தென்வெரு கற்பதித்
தேசிக னைப்பணிந் தாடுமடி
பட்டுட னற்பவ ளக்கோ வைபல
ஆபர ணந்தரு வார்தோழி.

---

13. குறிப்பு:

சித்திரவேலாயுதசுவாமி என்பது வெருகல் என்னும் பதியில் இருக்கும் முருகக்கடவுளுக்குப் பெயர். வெருகல் என்பது மட்டக்களப்புப் பிரிவுக்கும் திருக்கோணமலைப் பிரிவுக்கும் இடையில் எல்லையாயிருக்கும் வெருகல் ஆற்றங்கரையில் உள்ள ஒரு சிற்றூர்.

1. பரதம் - நாட்டியம். அங்கணர் - சிவபெருமான்.

3. தத்துவம் - உண்மை, பலம்.

4. கப்பகனர் - பூசாரி. இது மட்டக்களப்பில் வழங்குஞ் சொல். கரிமிசை - யானையின்மேல். மானர் - பெண்கள்.

# 14. ஆள் கண்டு மீண்டான் வசந்தன்

தரு

தந்தத்தாந தநதன தந்தத்தாந தநதன
தந்தத்தாந தநதன தந்தத்தாந

1. செந்திச்சேவ கன்றன்னை யெந்தப்போ தாகிலும்நீர்
சிந்தித்தே யர்ச்சனைசெய் தேத்துவீர்.
2. முந்திச்சூ ரானபேரை யந்தத்தோ டேயறுக்கச்
சிந்தித்தே வேல்விடுத்த தேவதேவன்.
3. தேவாதி தேவன்சிறீ ராமற்கு மருகனை
செந்தியம் பதியமர்ந்த கந்தமூர்த்தி.
4. மூவாதி முண்டகனைத் தானே சிறையில்வைத்து
மூலகாரண முரைத்த முக்கணன் மைந்தன்.
5. கோழிக் கொடிகுலவக் கோலமஞ்ஞை மீதில்வந்த
குஞ்சர முகற்கிளைய தம்பியானவன்.
6. ஆழியில் மகரமாகி யண்டர்க் கருள்புரிந்த
ஆறுமுகனைத் துதித்துப் பாடியாடவே.
7. வேலாயுதஞ் செலுத்தி மிக்ககிர வுஞ்சனைமுன்
வேரறுத்த வேலவரைப் போற்றுவோமே.
8. ஆலகாலத்து நஞ்சை யன்றுகண்ட மீதடக்கும்
அரனருள் சண்முகனென் றுடல்புரிவீர்.
9. வள்ளியைத் தினைப்புனத்தில் வந்துசிறை தானெடுத்த
வாலசுப்ர மணியர்பாதம் போற்றுவோமே.

---

14. குறிப்பு :

ஆள்கண்டு மீண்டான் என்பது, இந்த ஆட்டத்தில் ஆடும் ஒவ்வொருவரும் எதிரே ஆடிவருபவரைக் கண்டபின் மறுபக்கமாகத் திரும்பி ஆடிச் செல்வதனல் வந்த பெயர் என்பது. இந்தக் கவி தென்னிந்தியாவிலுள்ள

திருச்செந்தூர் என்னுந் தலத்து இருக்கும் முருகக்கடவுள் பேரிற் பாடியது. அவரது வீரத்தையும் புகழையுஞ் சிறப்பித்துச் சொல்வது. செந்தி என்பது திருச்செந்தூர்.

1. சேவகன் - வீரன்.

4. முண்டகன் - பிரமா. மூல காரணம் உரைத்த - வேதங்களுக்கு முதலாகிய பிரணவத்தின் பொருளை உபதேசித்த.

6. ஆழி - சமுத்திரம். மகரம் - சுறுமீன்.

இது முருகக்கடவுள் சமுத்திரத்தில் மகரமீனைத் தோற்றி உலாவிய சரித்திரத்தைக் குறிப்பது. அண்டர் - தேவர்கள்.

---

# 15. பல்லக்கு வசந்தன்

### தரு

தானா தனத்ததன தானா தனத்ததன
தானா தனத்த தன தானினா

1. சீராருந் தென்கதிரைச் செவ்வேள் தனைப்புகழ்ந்து
செய்யபல்லக்கு வசந்தன் சிந்துசொல்லவே
வாராருங் கும்பத்தன வாலசர சோதியுடன்
மத்தகய மாமுகனை வந்தனை செய்வாம்.

2. கந்தமலர் மாலைதுன்னக் காதினிற்குண் டலமின்ன
கனகப்பல் லக்கேறி வருவதார் மின்னே?
அந்தமுறு வேல்செலுத்தி அன்றுகிர வுஞ்சனுடன்
அசுரரை வேரறுத்த வடிவேலர் காண்.

3. தத்தா திமித்தியென்று தானவர்கள் பாடிவரத்
தங்கப்பல் லக்கேறி வாறதார் மின்னே?
வித்தார மாகஅன்று வேடுவவள் ளியைமணந்த
வெற்றிவே லப்பரிவர் காண் மின்னே.

4. முத்தா பரணமொடு முன்கையில் முதாரிதுன்ன
முத்துப் பல்லக்கேறி வாறதார் மின்னே?
சித்தாதி தேவர்களுஞ் செங்கணெடு மாலயனுஞ்
சென்றடி பரவுந் தேவுகாண் மின்னே.

5. சேவற் கொடிதுலங்கச் செய்யமஞ்ஞை மீதிவர்ந்து
சித்திரப் பல்லக்கேறி வாறதார் மின்னே?
பாவல்ல வாணருக்கும் பத்தருக்கும் மெய்ப்பொருளாம்
பச்சைமயில் வேலரிவர் காண் மின்னே.

6. முத்துச்சிவிகைதன்னில் மொய்குழலார்சூழ்ந்திருக்க
மோகமுடன் வாறதிவ ரார் மின்னே?
அத்திமுக வற்கிளைய ஆறுமுக வேலரென்னும்
அச்சுதன் மருகரிவர் காண் மின்னே.

7. பஞ்சாயு தந்துலங்கப் பாவாணர் பாடிவர
பவளப்பல் லக்கேறி வாறதார் மின்னே?
அஞ்சாத சூரர்கிளை எஞ்சவடி வேல்விடுத்து
அன்றழித்த வேலரிவர் காண் மின்னே.

8. ஆறுவத னந்துலங்க ஆரணம் பரிமளிக்க
அஞ்சனப் பல்லக்கேறி வாறதார் மின்னே?
தாறுமா மலரிதழி நீறுமதி வேணியணி
சங்கரன்றன் மைந்தன் முருகேசன் காண்.

9. தாரணி புகழ்பரவத் தற்பரனை முன்னிறுத்தித்
தங்கப்பல் லக்கேறி வாறதார் மின்னே?
வாரணியுங் கும்பத்தன மங்கையுமை பெற்றெடுத்த
வடிவேற் சுப்பிர மணியர்காண் மின்னே.

---

15. குறிப்பு:

இக் கவி, கதிர்காமத்து இருக்கும் முருகக்கடவுளைப் புகழ்ந்து அவரது சிறப்புக்களை வருணித்துச் சொல்வது. கதிரை என்பது கதிர்காமம். கதிர்காமத்தையன் பல்லக்கில் ஏறிப் பவனி வருதலைக் கண்ட இரு தோழிப்பெண்கள் தம்முள் சம்பாஷித்ததாக அமைந்து, முன்னிரண்டு அடிகள் வினவும் பின்னிரண்டு அடிகள் அதற்கு விடையுமாக இருப்பது. இதனால் இது பல்லக்கு வசந்தன் எனப்பட்டது.

1. கயமாமுகன் - விநாயகக்கடவுள்.

2. கந்தம் - மணம், வாசனை. கனகம் - பொன்.

4. முதாரி - முன்கை வளையல், காப்பு.

5. பா வல்ல வாணர் - பாவாணர், புலவர்.

8. ஆரணம் - வேதம். அஞ்சனப் பல்லக்கு - நீலரத்தினம் பதித்து விளங்கும் பல்லக்கு. தாறு - குலை, பூங்கொத்து. இதழி - கொன்றை.

9. தாரணி - பூமி, பூமியிலுள்ள மக்கள். தற்பரன் - சிவன்.

# 16. வசந்தன் பள்ளு

தரு

தந்தானந் தனந் தானத் தானினு—தந்தானந்தானின
தந்தானந் தனந் தானத் தானினு.

1. சீரி லங்கிய செட்டி நகரில்வாழ்—கண்ணகைதன்பேரிற்
சிறந்த வசந்தன் பள்ளிசை பாடவே
காரி லங்கிய கருணை யைங்கரக்—கரிமுகன்றன்னைக்
கருத்தி லுன்னியுச் சரித்துப் போற்றுவாம்.

2. தாரி லங்கிய சடையிற் பிறையணி—சயிலவில்லுடைச்
சங்கரன் பங்கயப் பாதம் போற்றியே
ஏரி லங்கிய இசைகள் பாடவே—இனியநாமகள்
எனது நாவில்முத் தமிழ்தந் தருள்செய்வாய்.

3. அருள்தங்கும் வெள்ளிக் கயிலை மீதுறை—அரனிடப்புறத்
தமர்ந்த பார்வதி யம்மையைப் போற்றுவாம்
பொருள்தங்குந் தேவி புகழைப் பாடவே—நெடியமாலினைப்
போற்றி யஞ்சலி யேற்றிப் புகழுவாம்.

4. புகழும் வள்ளிதெய் வானை பங்கனை—மனத்திலேத்தியே
புதிய செந்தமிழ்க் கவிதை பாடவே
இகலில் தேவர்கள் எவருங் கூடியே—எளியனாகிய
எந்தனைச் சந்ததம் வந்துரெட் சித்தருளீர்.

5. அருளுங் காரணி யமலை பூரணி—அடியார்நோய்பிணி
அகற்றுங் கண்ணகை யம்மையை யேத்துவாம்
இருளும் மனத்தி லிடர்கள் நீங்கிட—எவருங்கூடியே
இனிய கண்ணகை பதத்தைப் போற்றுவாம்.

6. போற்றுங் கைதவன் மாற்றஞ் செய்தலின்—அவனையழித்துப்
புதிய மதுரைப் பதியை யனலிடும்

மாற்றம் பெரிய மாது கண்ணகையை—மனத்திற்றுதித்து
வாழ்த்தி யேத்தி மகிழ்ந்து பாடுவோம்.

9. பாடும் பாவலர் தேடுந் தேவர்கள்—அறியொணுத
பத்தினி கண்ணகை பாதம் போற்றுவாம்
கூடுங் கவிதை பாடி யாடியே—வினைகள் தீரக்
கூடியே நிதந் தேடிப் புகழுவோம்.

---

16. குறிப்பு:

இது வசந்தன் ஆட்டத்தில் ஒருவகை. செட்டிபாளையம் என்னும் ஊரில் இருக்கும் கண்ணகை அம்மை பேரிற் சொல்லியது.

6. கைதவன் - பாண்டியன். மாற்றஞ் செய்தலின் - நீதிக்கு மாறுபாடு செய்ததனுல். மாற்றம் பெரிய - பெரிய வஞ்சினமொழி கூறிய.

# 17. அபய வசந்தன்

### தரு

தந்தனத் தந்தாஞ தெய், தந்தனத்தந் தாஞ,
தந்தனத் தந்தாஞ தெய், தந்தனத்தந் தாஞ.

1. சிந்துரத்தின் வதனமுறுந் தேவேயுனக் கபயம்
சிவனூர்தம் மகவான செல்வாவுனக் கபயம்
கொந்திருக்குங் குழலுமையாள் குமராவுனக் கபயம்
கூற்றுறையுதைத் தோன்மகனே குஞ்சரனே யபயம்.

2. ஆறணியும் வேணியனே அமலாவுனக் கபயம்
ஆலமுண்ட கண்டரெனும் ஐயாவுனக் கபயம்
நீறணியு மேனியனே நிமலாவுனக் கபயம்
நெடுமாலின் றங்கையொரு பங்காவுனக் கபயம்.

3. அண்டமுழு தீன்றருளும் ஆயேயுனக் கபயம்
ஆதிசிவ ஞரிடத்தில் அமர்ந்தவளே யபயம்
கொண்டல்வண்ணன் றங்கையரே கோதையரே யபயம்
குலதில்க மலையரையன் குழவீயுனக் கபயம்.

4. சத்திசிவ காமியெனும் உத்தமியே யபயம்
சண்முகனர் தாயான சங்கரியே யபயம்
கத்துகடல் சூழுலகு காத்தவளே யபயம்
கண்ணகையே யெண்ணரிய காரணியே யபயம்.

5. வெற்றிவடி வேலேந்தும் விமலாவுனக் கபயம்
வேடரெதிர் வேங்கைமர மானவனே யபயம்
அத்திமுகன் றம்பியெனும் உத்தமனே யபயம்
ஆறுமுக வேலவனே அபயமுனக் கபயம்.

6. அண்டருக்கா அசுரர்கிளை அழித்தவனே யபயம்
ஆதிசிவ ஞர்மகனே ஐயாஉனக் கபயம்
கொண்டல்நெடு மான்மருகா குழகாஉனக் கபயம்
கோலமயில் வாகனனே குமராஉனக் கபயம்.

7. அஞ்சனநேர் தருராமச் சந்திரனே யபயம்
ஆதிநெடு மாலவனே அழகாஉனக் கபயம்
பஞ்சவரைக் காத்தவனே பரனேயுனக் கபயம்
பரவைதனி லரவிற்றுயில் பவனேயுனக் கபயம்.

8. குன்றெடுத்து மழைதடுத்த கோவேயுனக் கபயம்
கோவியர்முன் கூத்தாடுங் கோபாலனே யபயம்
கன்றெறிந்து கனியுதிர்த்த கண்ணவுனக் கபயம்
காளியனில் நிருத்தமிடுங் காரணனே யபயம்.

# 18. போற்றி வசந்தன்

## தரு

தனனந்தன தனனந்தன தனனந்தன தனனு
தனனந்தன தனனந்தன தனனந்தன தனனு.

1. சீராரு மைங்கரனே சிவபரனே யரன்மகனே
சீதநாண்மலர் மார்பிலங்கிய தேவனேக்ருபை தாருமே
காரார்மத கயமாமுகக் கன்றேயருட் குன்றே
கணபதியுந்தன் கழல்தந்தெமைக் காப்பாய்வினை தீர்ப்பாய்.

2. ஆறுநீறர வம்புனைந்திடும் ஆதியேபரஞ் சோதியே
ஆலகால மமர்ந்தகண்டநின் அபயப்பதம் போற்றி
ஏறதேறிடு மீசனேயெமை ஆளுமேமைபங் காளனே
இந்துவேணி யிசைந்திலங்கிய ஏகநின்பதம் போற்றி.

3. கொந்துலாவிய கோடையோடலர் குல்லைமேவிய கந்தனே
குஞ்சரமுகன் றம்பியேயுந்தன் குலவும்பதம் போற்றி
செந்திமேவிய தேவனேசெய வேலனேயுமை பாலனே
தெய்வயானை மணாளனாகிய தேவநின்பதம் போற்றி.

4. அண்டமாயிரத் தெட்டுமாண்டடல் அமரர்தமை வருத்தும்
அசுரர்கிளை தொலைத்தவா றுமுகநின்பதம் போற்றி
பண்டுசண்டனை மிண்டிவைதுமார்க் கண்டனுக்கருள் புரிந்த
பரமற்கொரு பாலாவுந்தன் பதநாண்மலர் போற்றி.

5. கயல்போல்விழி வள்ளிதனைக் கரந்தேமனங் கவர்ந்த
கதிராபுரிக் கந்தாவுந்தன் கனகப்பதம் போற்றி
மயில்வாகன மிவர்ந்தேவடி வேலேவிய முருகா(என்)
மனத்திற்றுயர் தீர்த்தேகதி உதவிக்ருபை புரியே.

6. ஆழிதனில் மகரமென அமர்ந்தஅறு முகனே
அமரர்பதி குடியேற்றிய அபயாபதம் போற்றி
கோழிக்கொடி குலவக்குல்லை கோங்கம்மல ரிலங்கக்
கொந்துலவிய செந்திமேவிய குகநின்பதம் போற்றி.

# 19. அம்மன் பள்ளு 'வசந்தன்

தரு

தந்தனத் தான தனதன தந்தன
தந்தனத் தானன—தன
தந்தனத் தான தனதன தந்தன
தந்தனத் தானன.

1. சீர்கொண்ட செட்டி நகருறை கண்ணகைத்
தேவிதன் ருள்பணிந்து—நல்ல
ஏர்கொண்ட காதை யிசைத்திட வேயருள்
யானைமுகத் தோனே.

2. தார்க்கொன்றை போகி யிளம்பிறை யாறு
தரித்த சடையவனே—உமை
சேர்கின்ற பங்கனே சங்கர னேபதம்
தந்துரெட்சித் தருளே.

3. ஏது மறியாத ஏழை கவிதை
இசைத்திட எண்ணியதால்—உந்தன்
பாத கமலமெப் போது முதவிப்
பரிந்தெனைக் காத்தருள்வாய்.

4. காத்தரு ளுங்கரு ணைகர னேகம
லாசனி காவலனே—வையங்
காத்திட மாவலி தன்னை யடக்கிய
கஞ்சமலர்க் கண்ணனே.

5. ஏற்றரி தாகிய கூற்றை யுதைத்தவற்(கு)
இன்புறு மைத்துனனே—நல்ல
பூத்திரு வோடு புவிமங்கை மேவிய
பூவைவண்ண வருள்தா.

6. தாது செறிந்த மலரயன் றன்னிடம்
தங்கிய நாமகளே—உந்தன்
பாத கமல மென்னுவில் நடித்துநற்
பாமொழியக் க்ருபைதா.

7. தாருகன் றன்னைத் தடிந்திடு சண்முகன்
தன்னைப் பயந்தவளே—சிவ
சாரூப மாகிய சங்கரியே பதந்
தந்தெனை யாளுமம்மா.

8. ஆளும் பரனிடப் பாக முறைந்திடும்
அம்பிகை யானவளே—எந்த்
வேளையும் வந்தடி யேன்முன்பு நின்று
வினைதடிந் தாண்டருளே.

9. ஆண்டகை மஞ்ஞையி லேறியே சூர்கெட
அன்றயி லேவிவிட்ட—நல்ல்
பூண்டகு வள்ளிபங் காகுகனே யுந்தன்
பொன்னடி தாருமையா.

10. ஐயனே மெய்யனே ஆறிரு கையனே
அம்பிகை பாலகனே—அன்று
ஆரணன் றன்னை முனிந்தவனே யெந்தன்
அல்லலகற்றுமையா.

11. மையமர் நோக்குடை வள்ளிதெய் வானை
மலரடி தெண்டனிட்டேன்—எந்தன்
மெய்யிற் கவலை விலக்கியெப் போதும்
வினைதடிந் தாண்டருள்வீர்.

12. தாருடன் ஆர மிலங்கிய மீனவன்
தன்னை முனிந்தவளே—இந்தப்
பாரக மேவிய பத்தினியே யுந்தன்
பாதம் மறவேனே.

13. மாயிச வுந்தரி தூய பராபரை
மாரிஉ னைப்பணிந்தேன்—உந்தன்
நாய்டி யேன்வினை யாவு மகற்றி
நயம்புரிந் தாளுமம்மா.

14. பாதக மாகிய நோய்பிணி யான
பறவைவை சூரியதும்—மற்றுந்
தோதக மானவினைகெட உந்தன்
துணைப்பதந் தாருமம்மா.

15. மாநகர் மீதுறு நோய்பிணி தீர்த்தென்
வறுமை தடிந்தருள்ி—உந்தன்
ஆனன மீதுறு .........................
அருட்கதி தந்தருளே.

16. தந்தரு ளும்தர மங்கையர் சூழுற
சங்கரி யானவளே—எங்கள்
பந்தனை யான பவக்கடல் தீர்த்துன்
பதமலர் தாருமம்மா.

17. அம்மையென் றும்மை யருச்சனை செய்யும்
அடியரைக் காத்தருளி—என்றும்
உம்மிரு பாத தரிசனை தந்தே
யுதவி புரியுமம்மா.

# 20. பாங்கி வசந்தன்

தரு

தாந்தி மித்திமி தத்திமி தத்திமி
தத்திமி தொங்கத் தாவன்ன

1. ஆனை முகனே யரனே பரனே
ஐந்து கரத்துக் கணபதியே
பானை போலப் பெருத்தவயிற் றோனே
பாங்கி வசந்தனைப் பாடுதற்கு.

2. கானக மீதிலே வள்ளிக்கு முன்போய்க்
காரிடி போலே முழங்கியவா
வானவர் மெச்சும் வலவைக் குரிய
மணாளனே நாவிற் குடியிருப்பாய்.

3. நாறு மலர்சூடி ஆறுத ரித்தருள்
நாதா சிவனே யெனக்கருள்தா
வேறு மொருவினை வாராம லேநாவில்
விமல னேகுடி கொண்டருள்வாய்.

4. பாறுவ தியேயென் நாவினி லேநின்று
பாங்கி வசந்தன் புகழ்பாட
நாறு மலர்கொண் டருச்சனை செய்வேன்
நங்கையே நாவிற் குடியிருப்பாய்.

5. செங்கம லந்திகழ் தில்லை நகரில்
தேவ னதிசயங் கண்டிடுவோர்க்கே
பொங்கிய செல்வ மிகுந்து வளர்ந்திடும்
போர்செய் சமனெதிர் நிற்பதுமில்லை.

6. தத்திமி தாதிமி தோதிமி தோமெனத்
தாண்டவ மேபுரி தில்லைதன்னில்
கர்த்தனைப் போற்றி நினைந்திடு வோர்க்குக்
கால னெதிர்கொண்டு நிற்பதுமில்லை.

7. பூங்கரும் பேபசும் பொற்கொடி யாரே
பூவைய ரேயெனைப் புல்லிக்கொள்ளாயோ
தாங்கரும் சோகமும் தாகமு மாகிக்கண்
தான்தெரி யாதேடி பாங்கியரே.

8. மாவலி யைச்சிறை வைத்தவன் தங்கையே
மானகர் மகளாக வந்தகன்னகையே
ஆவ லுடனே யுனைத்துதிப் பேனிந்த
அண்ட முழுதையுங் காத்தருளே.

---

## 21. எச்சரிக்கை வசந்தன்

தரு

தனனதன தனனதன—தனனதன தனன
தனனதன தனனதன--தனனதன தனன

1. ஒருமாங்கனிக் காகஉல கேரேழ்வலம் வந்த
உமைதன்னருண் மகனேகண பதியே யெச்சரிக்கை

2. திருமால்மரு கோனேயனு கூலாவுனைப் பணிந்தேன்
சிவனார்திரு மகனேகண பதியே யெச்சரிக்கை

3. மேலோர்துதி மூலாஅனு கூலாமிளிர் கோலா
வேலாகட கரியூர்வெற்றிக் கந்தா எச்சரிக்கை

4. காலாயுதத் துவசாவச்ர கவசாவிறற் குலிசா
கதிராபுரி வாசாசெக தீசா எச்சரிக்கை

5. கரிமாமுகன் துணைவாவள்ளி கணவா எச்சரீக்கை
கதிர்காமசந் நிதிவாழ்க்ருபைக் கந்தா எச்சரீக்கை

6. காலன்வருங் காலம்வந்து காப்பாய் எச்சரீக்கை
கதிர்காமசந் நிதிவாழ்க்ருபைக் கந்தா எச்சரீக்கை

7. துதிமேவுகைச் சரியார்வள்ளி துரையே எச்சரீக்கை
சுடர்வேல்விடுத் தடலார்வரை குடைவாய் எச்சரீக்கை

8. கதியாநவ மணிசேர்மணி நதியாய் எச்சரீக்கை
கதிர்காமசந் நிதிவாழ்க்ருபைக் கந்தா எச்சரீக்கை

9. பணிவார்கள்தம் துணையேகுரு பரனே எச்சரீக்கை
பதுமத்திரு முகத்தெய்வானை கணவா எச்சரீக்கை

10. கணவீரர்கள் துணைவாசர வணனே எச்சரீக்கை
கதிர்காமசந் நிதிவாழ்க்ருபைக் கந்தா எச்சரீக்கை.

---

## 22. ஞானவேதியர் பள்ளு

### தரு

தந்தனத் தான தனதான தன
தந்தனத் தந்தன தானனை.

1. சீறுந்த வில்தாரை மூதண்ட கூடஞ்
செவிடு படமுழங்க—அரன்
ஏறு மிடபக் கொடிபல வாச்சியம்
எங்கு மிகமுழங்க.

2. எங்கு முழங்க இரண்டுவெண் சங்கும்
இசைந்தமுத் தின்குடையும்—வீறு
தங்கு மெண்ணும் இலங்காபுரி மண்முனை
தன்மம் தழைத்தோங்க.

3. தன்மம் மிகுந்த தபோதன ருஞ்சில
தானவ ரும்போற்ற—வெகு
வன்ன மிகுந்திடு மன்னமன் னார்சில
மாதர் சிறந்தாட.

4. ஆடுந் திருக்கதிர் காமந்த ழைத்திட
அம்புவியோர் வாழ
நீடுங் குவளைசெந் தாமரை மாலையும்
நீள்கொன்றை யும்வீழ.

5. வீறு பெருந்துறை வாழவெண் ணீறு
விளங்கி மிகுந்தோங்க—நல்ல
நாறுங் களபம் விரைதீப மேற்ற
நல்லட்சுமி சூழ்ந்துவர.

6. சூழுங் கவரிவெண் சாமரை வீசத்
துரைக ளடிபணிய—எம்மை
ஆளுங் குருநாதர் சித்தர கத்தி
லகத்தியனைப் போல.

7. போலவே மாதவக் கோலம தாகவே
பூமாரி பெய்துவர—நல்ல
சீல மிகுந்த சிவஞான வேதியர்
செய்யபவனி வந்தார்.

8. வந்தாரே வீதியில் மாதர்கள் கண்டு
மயங்கி விழுவாரும்—சிவ
சிந்தனை செய்து திருப்பொற் பதத்தைத்
தெரிசித்து நிற்பாரும்.

9. பார மவுலியுங் கையில் வெண்ணீறும்
பரமனே யென்பாரும்—இவர்க்(கு)
ஏரொன்று காளையும் சர்ப்பா பரணமும்
இல்லையே என்பாரும்.

10. எண்சேன ராகிய மாயனே வீசனே
என்றிசைக்குங் காமனே—நல்ல
நண்பால் வசிட்டனே தென்பால் விளங்கு
நலத்தா லகத்தியனே.

11. நலஞ்சேர் பிரமற்கு நாமகள் என்னவே
நாரணற் குச்சீதையும்—நண்(பு)
இலங்கும் வசிட்டற்குத் தெர்ப்பைழுங் நாலும்
அகத்தியர்க்கு மாயையும்.

12. கடல்சேர் புவியில் அடுத்தார் மனத்தைக்
கலக்கும் பெருங்கடலே—வெள்
விடையேறு கின்ற திருவருளே கனமெய்
ஞானமெய்ப் பொருளே.

---

22. குறிப்பு:

ஞானவேதியர் - ஆசாரியர், குரு.

இதிற் குறிக்கப்பட்ட மண்முனை, பெருந்துறை என்பன, மட்டக்களப்பில் மட்டக்களப்புப் பட்டினத்துக்குச் சமீபத்தில் உள்ள ஊர்கள். பெரியதுறையிலும், மண்முனையிலும் சிவாலயங்கள் உண்டு. சிவபெருமானை ஞாஞசாரியராகவும், அவர் வீதியிற் பவனி போந்ததாகவும் வைத்து அப் பவனிச்சிறப்பை வருணித்துக் கூறுவது இக் கவி. 11-ம் கண்ணி பாடம் சுத்தமில்லை.

10. சேனம் - பருந்து, கருடன். என்றிசைக்கும் - ஒளிபொருந்திய.

# Part III — பாகம் III

## 23. நரேந்திரசிங்கன் பள்ளு

### தரு

தானே தானேதந்த தானின தானதந்த
தானே தானேதந்த தானினதான

1. சீராருந் தென்னிலங்கை யாளவந்த வேள்நரேந்த்ர
சிங்கசாமி மேல்வசந்தன் சிந்துசொல்லவே
காராருஞ்சோனைமழைக் கால்விழுந்தபோல்வழிந்த
கன்னமதத் தண்ணல்பதங் காப்பதாமே.

2. காப்பழகுங் தாதகியின் பூப்பழகு மாலைமார்பன்
கண்டிவாழ்ந ரேந்த்ரசிங்க காவலன்மீது
நாப்பழகுஞ்செந்தமிழ்ச்சொல்வாய்ப்பிழைவாராமலென்றும்
நந்துதிருக் கோயில்வாழுங் கந்தர்துணையே.

3 கந்தநறுஞ் சண்பகப்பூ மாலைமார்பன் தென்னிலங்கை
காவலன்நீள் மாவலிகங் கைக்குடையோன்
சந்தனப்பு யாசலனைச் செந்தமிழி னல்வழுத்தத்
தம்பிலுவிற் கண்ணகைத்தாய் தஞ்சநமக்கே.

4. தஞ்சமென்ற மென்புறவை யஞ்சலென வேவழங்கித்
தன்றொடைச்ச தையரிந்து தானமீந்தவன்
கஞ்சமலர் மாதுவளர் செங்கடக லாதிபதி
கம்பனைக்கொண் டேயடப்பங் கட்டுவித்தவன்.

5. கட்டளைக விற்பரதன் வெட்டிவிடச் சுக்கிரீவன்
காமர்லீலை யிற்கிருட்ணன் பூமிக்கதிபன்
சிட்டர்தொழுஞ்சூரியவம்சன் அட்டாளதேசமாளுந்
தெய்வதம்பி ராநரேந்த்ர சிங்கபூபனே.

6. சிங்களவர் சேனபதி தென்னிலங்கை யாதிபதி
செகமன்னர் சேனபதி செயபூபதி

பொங்குபுகழ்த் திருச்செந்தூர் வேலவற்குச் சிங்காசனம்
பொன்னுகம்வைத் தேயெருத்திற் பூட்டிவிட்டவன்.

7. பூட்டியகல் யாணிபுரக் கோட்டையையி டித்துமீண்ணிற்
போட்டமத யானையுள்ள பொன்னிறைடன்
காட்டியசெந் தமிழ்க்காக வீரராக வனுக்கன்று
கன்னல்வள நாடும்யானைக் கன்றுமீந்தவன்.

8. கன்றையிழந் தேயழுது நின்றபசு வின்பழிக்குக்
காதன்மைந்த னைத்தன்றேர்க் காலிலூர்ந்தவன்
வென்றிநுவ ரைப்பதியி லிந்திரன் வரவிடுத்த
வெள்ளரசைப்பொற்கலத்தில்வேண்டிவைத்தவன்.

9. வைத்தவத னுலேசிறி சங்கபோதி சக்ரவர்த்தி
மன்னவனென் றேவிருது வாகைபடைத்தோன்
மெத்துபொற்சிங் காசனத்து முத்துவெண்கு டையிரட்ட
வெண்கவரி காலசைப்ப வீற்றிருப்பவன்.

10. வீற்றிருக்கும்வேண ரேந்த்ரசிங்கசாமிபல்லக்கேறி
வீதிவாற சேதிகண்டப் போதுமடவாள்
பார்த்துநின்றே மேகலையும் பாரழக முங்குலையப்
பாணமைந்து மூடுருவி நாணமிழந்தாள்.

11. நாணமிழந் தேதுசொல்வாள் நல்லிரவை யஞ்சுகென்பாள்
நான்சுகமென் றூேவினிது காணுவதென்பாள்
சேனுலவு திங்களுக்குஞ் சேடியராம் பெண்களுக்குஞ்
சீறிவாற் தென்றலுக்குஞ் செய்வதென்னென்பாள்.

12. செய்கைமறந் தாளாடும் பொய்கைமறந் தாளினிய
சித்ரமெத்தை மீதுறங்கு நித்திரைமறந்தாள்
மையைமறந்தாள்குளிக்கும்மஞ்சள்மறந்தாள்வாச
மாதவிக்கு ழற்குளாடும் வண்டைமறந்தாள்.

13. வண்டணைந்த பூவெனவே கண்டமட வாளவளும்
வாடியுன்மேல் நாடிமய லாகினள்மன்ன

மண்டலத்தி லுன்மேலிச்சை கொண்டவள் படும்பாட்டை
வாயினலெ டுத்துரைக்க மாளாதுமன்ன.

14. வன்னமுறு மார்பின்முத்து மாலைபதக் கமணிந்து
மாகனக வீதிவரும் ராசமன்னனே
கன்னனெனுங் கண்டிராசன் வாசவனேர் பூபன்நல்ல
காலமுகில் போல்பவன்ந ரேந்த்ரசிங்கனே.

15. வாசவனைச் சூழ்ந்திருக்குந் தேவர்போலு மந்தரத்தை
மன்னியேவ ளைந்திருக்கும் வாரைகள்போலும்
போசராச வேணரேந்த்ர பூபனும் வளைத்திருந்து
போற்றுதிசை மாரும்நிதம் வாழிதானே.

---

23. குறிப்பு:

இக்கவி **நரசிங்கப்பள்ளு** எனவும், **கண்டிராசன்பள்ளு** எனவும், **கண்டி நகர்ப்பள்ளு வசந்தன்** எனவும் சில சில ஊர்களில் வழங்கும்.

**கண்டி உடரட்டை** என்பது இப்போது கண்டி என வழங்கும் பகுதிக்கு வழங்கிய பழைய சிங்களப் பெயர். மேல்நாட்டுப்பகுதி என்பது அதன் பொருள். சிங்கள அரசர்கள் காலத்தில் இராசதானியாய் இருந்த நகரம் **செங்கடகல நுவரை** என வழங்கியது. அதுவே இப்போது கண்டி என வழங்கும் நகரம். இப்பெயர் ஐரோப்பியரால் 'கண்டி உடரட்டை' என்பதன் மரூஉச் சொல்லாக இட்டு வழங்கப் பட்டு வந்துள்ளது.

இக்கவி கண்டியில் கி. பி. 1706 முதல் 1739 வரை அரசாட்சி செய்திருந்த **நரேந்திர சிங்கன்** என்னும் சிங்கள அரசன்மேல் பாடப் பட்டது. அவனது சிறப்புக்களையும், வீரம், கொடைத்திறம் முதலிய வற்றையும் புகழ்ந்து சொல்வது. கண்டிச் சிங்கள அரசர்கள் இடை யிடையே மட்டக்களப்பைச் சார்ந்த பகுதிகளில் வந்து தங்கியிருந்து போவதும் உண்டு. மட்டக்களப்புக்கும் கண்டி நாட்டுக்கும் போக்குவரவு முதலியவற்றால் நெருங்கிய தொடர்பும் இருந்தது. மட்டக்களப்பு மக் கள் சிங்கள அரசர்கள்மேல் புகழ்ப் பாமாலைகள் சூடுவது இதனல் இயல்பாயிற்று.

இக்கவி பாடப்பட்ட வரலாருக ஊரில் ஒருகதை வழங்குவதுண்டு. அது வருமாறு: மட்டக்களப்புப் பட்டினத்திற்குத் தெற்கே 46 மைல் தூரத்தில் **திருக்கோயில்** என்னும் ஓர் ஊர் உண்டு. அது ஒரு சிறப்புவாய்ந்த சுப்பிரமணிய ஸ்தலம். இங்கு சமுத்திர ஓரத்தில் சுப் பிரமணிய சுவாமி ஆலயம் ஒன்று உண்டு. சுவாமிக்குப் பெயர் **சித்திர வேலாயுதர்** என்பது. இங்கு வசித்த ஒரு பிராமணன் கண்டி அரச

னுகிய நரேந்திரசிங்கனிடம் பரிசுபெற விரும்பி அங்குச்சென்று இராசசபையை அடைந்தான். **திசாவை** முதலிய பிரதானிகள் சூழ்ந்திருப்ப அரசன் கொலுவீற்றிருக்கும்போது போய் அரசனை ஆசிர்வதித்தான். அவனுடைய வரலாற்றை விசாரித்த திசாவைகள் அரசன்மேல் கவிபாட முடியுமா என வினவினார்கள். அவர்கள் ஆடுவதற்குச் சம்மதித்தால் தான் அதற்கேற்ற கவி பாடுவதாகப் பிராமணன் சொன்னான். அவர்கள் சம்மதஞ் சொல்லவே, கவி செய்யும் பழக்கமில்லாத பிராமணன் செய்வதின்னதென்று தெரியாது மனங்கலங்கிப் பின் தேறித் தன் வழிபடுகடவுளாகிய சித்திரவேலாயுதப் பெருமானைத் தியானித்து அவரருளால் உடனே இவ்வசந்தன் கவியைப் பாடிப் பரிசில் பெற்று மீண்டான் என்பது கர்ணபரம்பரையாக வழங்கிவருங் கதை.

நரேந்திரசிங்கனது தாய் தஞ்சாவூர்ச் சோழவமிசத்தவள். ஆதலின், அவள் மகனாகிய இவ்வரசனையுஞ் சூரிய வமிசத்தவன் என்றும், சோழ அரசர்களுக்குரிய சிறப்புக்களையெல்லாம் உபசாரமாக இவன் மேல் ஏற்றியும், இவனை மிகச் சிறப்பித்து இக் கவியில் பாடியிருத்தலைக் காணலாம். அரசன் பவனிபோகுஞ் சிறப்பையும் அப்போது அவனைக் கண்டு நங்கை ஒருத்தி மையல் கொண்டதையுஞ் சுவைபடக் கூறியிருத்தலையுங் காண்க.

1. கன்ன மதத்து அண்ணல் - விநாயகக்கடவுள்.

2. கா பழகும் - சோலையில் உள்ள, பூ பழகும் - பூக்கள் பொருந்திய, நந்து - வளர்ச்சியையுடைய. நந்தூர்த் திருக்கோயில் என்றும் பாடம்.

4. முதலிற் குறிப்பிட்டது **சிபி** என்னும் சூரிய வமிசத்து அரசன் ஒரு புறாவைக் காப்பாற்றுவதற்காக அதன் நிறை (எடை) க்குச் சமமாக ஊனைத் தன் தொடையிலிருந்து அரிந்து கொடுத்த சம்பவம். அவ்வித அஞ்சாமையும் இரக்கமும் கொடையும் உடையவன் இவன் என உபசாரமாகக் கூறப்பட்டது.

கஞ்சமலர்மாது - இலக்குமி, செங்கடகல - கண்டி.

குலோத்துங்க சோழனோடு முரண்பட்டுச் சென்றபோது கம்பர் செய்த சபதத்தை நிறைவேற்றுதற்காக அச்சோழனது சபையில் கம்பருக்குச் சேரதேசத்து அரசன் வெற்றிலை மடித்துக்கொடுத்து அடைப்பக்காரனாக இருந்தான் என்பது சாதாரணமாய் வழங்குங் கதை. அச்சம்பவத்தை இங்கு மாறுபாடாகக் கம்பர் சோழனுக்கு அடைப்பக்காரனாக இருந்ததாகக் கூறி, அப்பெருமையைக் கண்டியரசன்மேலேற்றினார் கவிசெய்தவர்.

5. கட்டளைகளிற் பாதன்......என்னும் அடி சுத்தமான பாடமாகக் காணப்படவில்லை. "கட்டளை கழிப்பவரை வெட்டிவிடும் சுக்கிரீவன்" என்றும் பாடம்.

அட்டாளதேசம் - உயர்ந்த தேசம், மலைப்பிரதேசம்.

6. திருச்செந்தூர்த் தலத்திருக்கும் முருகக்கடவுளுக்குப் பொற் சிங்காசனம் வழங்கியதும் சோழ அரசன் ஒருவனது செயலை இக் கண்டி அரசன்மேல் உபசாரமாக ஏற்றிச் சொல்லியதாம்.

கல்யாணிபுரம் என்பது களனி என இக்காலத்து வழங்கும் இடம். இது கொழும்புக்குச் சமீபத்திலுள்ளது. இங்கு சிங்கள அரசர் காலத்து ஒரு கோட்டையும் சிறு இராச்சியமும் இருந்து வேறொரு சிங்கள அரசனால் (இராசசிங்கனால்) அழிவெய்திய வெற்றியை இந் நரேந்திர சிங்கன்மேல் ஏற்றிச் சொல்லியவாறு காண்க. பொன்னின் நாடன் - ஈழநாடன்; ஈழம் - பொன். அந்தகக் கவி வீரராகவ முதலிக்குப் பரிசில் வழங்கியவன் பரராசசேகரன் என்னும் யாழ்ப்பாண ஆரியச்சக்கிரவர்த்தி களுள் ஒருவன். அக்கொடையை இவன்மேலேற்றியது உபசாரவழக்கு.

8. இதில் முற்பாதியிற் குறிப்பிட்ட கதை மநுநீதிச் சோழன் செய்ததாகவும் அனுரதபுரியில் அரசாண்ட எல்லாள மகாராசன் செய்த தாகவும் வழங்கிவரும் சம்பவத்தைப்பற்றியதாகும். முந்திய சோழ அர சர் செய்த இவ்வருஞ் செயலை இவன்மேலேற்றி இவனது நீதி பரி பாலனத்தைச் சிறப்பித்துக் கூறியவாறு காண்க.

நுவரை என்பது நகரம்; இது சிங்களச் சொல். வென்றி நுவ ரைப்பதி என்றது இலங்கையின் பழைய இராசதானியாகிய **அநுரத புரியை.** இந்திரன் என்பது, மகேந்திரன் என்பதன் குறைச்சொல்லாகி **மிகுந்தன்** என்னும் அசோகச் சக்கரவர்த்தியின் குமாரனைக் குறிப்பது. புத்த குருவாகிய மிகுந்தன் என்னுந் தன் மகனையும் வெள்ளரசங் கொம்பையும் புத்தசமய வளர்ச்சிக்காக அசோகன் இலங்கைக்கு அனுப் பினன். வெள்ளரசங் கொம்பைப் பத்தியோடு ஏற்று மகாமேகம் என் னும் ஆராமத்தில் நாட்டி வளர்த்தவன் தேவானம்பியதீசன் என்னும் சிங்கள அரசன். அவனுடைய செய்கையை இவன்மேல் வைத்து இவ னது புத்தசமய பரிபாலனச் சிறப்பைக் குறிப்பிட்டவாறு காண்க.

9. சிறி சங்கபோதி என்பது புத்தசமயக் கொள்கையில் மிக்க பற்றுடையனான ஒரு சிங்கள அரசனது பெயர். அது பின்பு ஏனைய அரசர்க்கும் ஒரு பட்டமாக இட்டு வழங்கப்படுவதாயிற்று.

10. மடவாள் - இளம்பெண். பாணம் ஐந்து - மன்மதனது புஷ்ப பாணம் ஐந்து; அரசன்மேல் மோகங்கொண்டாள் என்றபடி.

11. அஞ்சுகென்பாள் - அஞ்சுவேன் என்பாள்.

12. பொய்கை - நீர்நிலை, குளம்.

14. கன்னன் எனும் - கொடையில் கன்னனைப் போன்ற, வாச வுன் நேர் - இந்திரனுக்கு நிகரான. காலமுகில் - உரிய காலத்தில் தவ றாது மழையைப் பெய்து உதவுகின்ற முகில்.

15. மந்தரம் - மகாமேரு மலை. வாரை - மலை; வரை என்பதன் நீட்டல் விகாரம். திசை - திசாவை, பிரதானி. **திசாவை** என்பது நாட்டு அதிகாரி எனப் பொருள்படும் ஒரு சிங்களச் சொல். திசை என்பது அதன் மரூஉ.

# 24. இராஜசிங்கன் பள்ளு

## தரு

தானனத் தானை தானதந்தன தானை
தானனத் தானை தானதந்தனத் தானை

1. திருமேவும் புயசயிலச்
செல்வனெனவரும் ராசசிங்கன்
அருமேவும் அரசோங்க
ஆதிபரனே யுதவிசெய்வாய்.

2. ஆதியருள்பெற் றிராசசிங்கன்
அம்புவியோர்கள் மிகவாழ
வேதியர்சூழ் தென்கதிரை
வேலவர்நித்தந் துணையாமே.

3. நித்தகல்யாண தேவேந்த்ரன்
நீதிபுரக்கு மகாராசன்
முத்துச்சிவிகை தனிலேறி
மோகனவீதி பவனிவந்தான்.

4. வரமேவும் வாசவன்போல்
மாணிக்கரத்ந முடிபுனைந்து
திரள்பொன்னின் வாளணிந்து
திசைகளெட்டும்அட லிசைகொள்ள.

5. இசைவாணர் தமிழ்வாணர்
இங்கிதராகம் பாடிவர
திசைமாரும் வன்னியரும்
சேனைபடைமள்ளர் சேசெயென்.

6. இங்கிதநாடக சாலைகளும்
எண்ணவொண்ணாத படைத்திரளும்
பொங்குகடலொலி போலதிர
பேரிகைகொம்பு மிகமுழங்க.

7. முழங்கிடிங்கென் னப்பீரங்கியும்
மூன்றுலகார வெடித்துவக்கும்
இளங்குரும்பைத் தனமடவார்
ரத்நப்பொனாலத்தி யேந்திவர.

8. தானவர்வா னவரானோர்
சந்திரசூரிய, ரிந்திரரும்
வான்றிசைபாலக ரெண்மரும்
மங்களஞ்சொல்லி மலர்தூவ.

9. ராசராசதெய் வேந்திரனே
ராசர்புகழ்ந்திடு மிந்திரனே
பூசுரர்பால நரேந்த்ரா
புண்ணியராசசிங்க பூபதியே.

10. புரந்தபுகழ் ராசசிங்க
புண்ணியன்வாழி புகழ்வாழி
வரந்தரும்பொன் மந்திரவாள்
மங்காமலேநிதம் வாழியவே.

---

24. குறிப்பு:

இக்கவி கண்டியில் 1739 முதல் 1747 வரை அரசாண்ட இராஜ சிங்கன்மேற் பாடியது. இவ்வரசனது முழுப் பெயர் ஸ்ரீ விஜயராஜ சிங்கன் என்பது. இவன் மதுரை நாயக்க மன்னர் வமிசத்தவன். நரேந்திரசிங்கனது பட்டத்து ராணியின் சகோதரன். அரசன் பல்லக்கேறிப் பவனிவருஞ் சிறப்பை வருணித்துக் கூறுவது. இக்கவியில் பீரங்கி முதலிய வெடிக் கருவிகளைப்பற்றிய செய்தி வருதல் காண்க.

# 25. அநுமான் வசந்தன்

### தரு

தந்தனந்தன தாஞ—தன
தானதந்தனத்தாஞ

1. அந்தரத் தோர்புகழ்ந் தேத்த—அனு
மான்கடல் தாண்டியே பாய்ந்த
விந்தை வயந்தனைப் பாட
விநாயக னைத்துதிப் போமே.

2. அந்தமு மாதியு மான—அரி
கேசவன் றன்புகழ் பாட
செந்திரு வேயெந்த னவில்—தமிழ்
தந்துரெட் சித்தருள் வாயே.

3. வெற்பை யெடுத்திடு தோளான்—ஒரு
பத்துமு டியசு ரேசன்.
கற்புள்ள சானகி தன்னைக்—கவர்ந்
தப்புற மிலங்கையிற் செல்ல.

4. மானைத்து ரந்திடும் ராமர்—புவி
மானைக்கா ணமலே வாடி
சோனைப் புயல்நிற ராமர்—பெண்ணைத்
தேடச் சுவடெடுத் தாரே.

5. ஆரமி லங்கிய மார்பா—அனு
மானென்று சொல்லிய வீரா
சூரர் கெடச்செயுந் தீரா—எங்கள்
தோகையைத் தேடிவா என்ன.

6. அந்த விஷயத்தைக் கொண்டே—கணை
யாழியும் பெற்றனு மானும்
செந்திரு வைகிகர் சீதை—தனைச்
சென்றறி வேனென வந்தான்.

7. அந்தமில் லாவிஸ்வ ரூபம்—அனு
மந்த னெடுத்துநின் றார்ப்பச்
சுந்தர வெற்பொடு வேலை—முழு
துந்துய் ராகிய போது.

8. வாரிதிக் கப்புறம் போக—ம
யேந்திர மேறிப்பாய்ந் தானே
சீருறு மூவுல காளும்—செய
ராவண னுந்துயர் கொள்ள.

9. அச்சுதன் தூதனு மானும்—கடல்
அப்புறம் தாண்டியே பாய்ந்தான்
கச்சப முந்திடுக் கென்னக்—கரி
எட்டுந் திடுக்கிடப் பாய்ந்தான்.

10. வாசுகி யோடடல் வேலை
யாவும் அழுங்கிடப் பாய்ந்தான்
தேசுறு மேற்கடல் தாண்டிச்—சென்று
தென்னிலங் காபுரி பாய்ந்தான்.

11. பாய்ந்து சென்று னனுமான்—படி
மாதைத் துரந்தா னனுமான்
காய்ந்து நின்று னனுமான்—கரி
யோனை நினைந்தா னனுமான்.

12. சீதையைக் கண்டா னனுமான்—சில
செய்தி யுரைத்தா னனுமான்
காதை புகன்று னனுமான்—கணை
யாழி கொடுத்தா னனுமான்.

13\. இன்சொ லுரைத்தா னனுமான்—இ
லங்கையைச் சுட்டா னனுமான்
அஞ்சல் தவிர்த்தா னனுமான்—அடல்
கொண்டு குதித்தா னனுமான்.

---

25\. குறிப்பு :

இக்கவி இராமாயணக் காதையில் அனுமார் சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்ற செய்தியைக் கூறுவது.

3\. அசுரேசன் என்றது இராவணனை. சானகி - சீதை.

4\. புவிமானை - சீதையை. சுவடு - உபாயம்.

8\. வாரிதி - கடல்.

9\. அச்சுதன் - இராமன், திருமாலின் அவதாரமாதலின். கச்சபம்- ஆமை; இங்கு பூமியைத் தாங்கும் ஆதிகூர்மத்தைக் குறிப்பது. கரி எட்டு - எட்டுத்திக்கு யானைகள்.

10\. வாசுகி - அட்டமகா நாகங்களுள் ஒன்று. வேலை - சமுத்திரம்.

---

# 26. அனுமான் வசந்தன்

வேறொன்று

தரு

தாந்தனந் தனந்தான தன தாந்தனந் தனந்தான

1\. பாராழிக் கடன்மீதே
பள்ளிகொண்டான் பாய்ந்தான்—அனுமான்
ஆயிரமா முடிச்சேடன்
நடுங்கப் பாய்ந்தான்—அனுமான்

2\. இருந்துபாய்ந்தா னனுமான்
இலங்கையைச் சுட்டான்—அனுமான்
பருத்த மரத்துக்கொப்பை
ஒடித்துப் பாய்ந்துநின்றான்—அனுமான்

3. பற்றித்திரிந்தா னனுமான்
படைவெட்டிப் பொருதான்—அனுமான்
சுற்றித்திரிந்தா னனுமான்
சுளியாடி நின்ருன்—அனுமான்

4. குந்தியிருந்தா னனுமான்
குதிகொண்டான் பாய்ந்தான்—அனுமான்
இந்த்ரசித்துப் பிடிக்க
இடையைக் கொடுத்தான்—அனுமான்

5. ஆற்றைக்கடந்தா னனுமான்
அம்மையைக்கண்டா னனுமான்
எங்குந்திரிந்தா னனுமான்
எதிர்த்துப்பொருதா னனுமான்

6. பத்துத்தலையுள்ள ராவணன்மார்பைக்
குத்திப்பொருதா னனுமான்
சீதையைக்கண்டா னனுமான்
திரும்பிவந்தா னனுமான்.

---

# 27. இந்திரசித்து வசந்தன்

தரு

தந்தனத் தந்தாஞ தனந்தன தந்தனத் தந்தாஞ
தந்தனத் தந்தாஞ தனந்தன தந்தனத் தந்தாஞ

1. முந்திவி நாயகனே—யுமைக்கொரு
முன்மக வானவனே
தந்திமு கப்பொருளே—தமிழ்க்கவி
தந்தருள் செய்யுமையா.

2. இந்திர சித்துவென்பான்—அனுமானே
டெய்தி யமர்பொருத
செந்தமிழ் பாடுதற்கு—சதுர்முகன்
றேவி யருள்புரிவாய்.

3. சீதையைக் கண்டபின்பு—அனுமான்
சென்று நிசாசரரை
வாதை வருத்தியிட்டு—அசோக
வ்னமு மழித்தானே.

4. தோரண மீதிருந்து—அனுமான்
தோமர மொன்றதனல்
காரண சூட்சமதாய்—அரக்கர்
கலங்க அடித்தானே.

5. ஒற்றர்கள் ஓடிவந்து—ராவணேசா
உன்மகன் மாய்ந்தானெனத்
தெற்றென இந்த்ரசித்தே—குரங்கினைச்
சென்று பிடியுமென்றான்.

6. இந்திர சித்துடனே—அரக்கர்
ஏழ்கடல் சூழ்ந்ததென
வந்து வளைத்தாரே—அனுமனை
வாரிப் பிடிக்கவென்று.

7. தேரை ஒடித்தானே—சிலவரைச்
சினங்கொண் டடித்தானே
நேர்கொண் டிடித்தானே—உலக்கையால்
நெஞ்சி லடித்தானே.

8. ஆக்கிர மந்தணிந்து—அனுமான்
அகப்பட வேணுமென்று
சீக்கிர மிந்த்ரசித்தன்—கையிலவன்
சேர்ந்தன னேயனுமான்.

9. கட்டி யிழுத்துவந்து—பத்துச்சிரக்
காவலன் முன்புவிட
அட்டிப் புகழ்ந்தாரே—இருவரும்
ஆக்ரமங் கொண்டாரே.

27. குறிப்பு:

இந்திரசித்து என்றது இந்திரசித்தன் என்னும் இராவணனது மூத்த மகனை.

3. நிசாசரர் - அரக்கர்.

4. தோரணம் - வாயிலுக்குமேலாகக் கட்டியிருக்கும் வளைவு (arch), சிறு கோபுரம்.

5. உன்மகன் என்றது அட்சகுமாரனை.

8. ஆக்கிரமம் - ஆங்காரம், எதிர்ப்பு.

9. அட்டி - அணைந்து. இருவரும் - இராவணனும் இந்திரசித்தும்.

## 28. இந்திரசித்து வசந்தன்

வேறு சீர்

### தரு

தந்தனத் தந்தனத் தானு தானின
தனத்தந் தானின தனத்தானு

1. இந்திர சித்துவே வாடா—இக்குரங்கினை
எரியைக் கொழுத்திக் கொலை புரியுமெடா
தந்திரக் குரங்கின் வாலிற்—சீலையைச்சுற்றித்
தாமத மில்லாம லெரியக் கொழுத்துமடா.

2. கோட்டை கொத்தள மெரித்தான்—அனுமான்
கொங்குலவு நந்தவன மெங்கு மழித்தான்
நாட்டை முழுதும் அழித்தான்—அனுமான்
நட்டமுறச் சுட்டுவெளி வெட்டை யாக்கினன்.

3. சித்திர கூடங்களெரித்தான்—அனுமான்
சென்றசென்ற இடங்களை மண்டி யெரித்தான்
தத்திமி திமித்தி யெனவே—ராகவதூதன்
சாமியை நினைந்து எரிகொழுத்தினனே.

4. உத்தமி சீதையை நினைந்து—வாயுமகன்
உம்பர்கள் புகழ வெரிகொழுத் தினனே
வெற்றி வெற்றி யென்றுசொல்லி—ராகவதூதன்
வீறுடனே யெரிகொழுத் தினனே.

5. வாரிதனில் வாலைத் தோய்த்து—அனுமான்
வையமுண்ட ஐயனிட முய்ய வந்தான்
சூரிய குல திலகன்—தூதுவன்செய்த
சூட்சாதி சூட்சமென்ன லேத்த லாகுமோ.

---

## 29. அங்கதன் வசந்தன்

### தரு

தத்தனத் தந்தான தனதன
தத்தனத் தந்தான

1. சீர்செறி ராமச்சந்த்ர—துரையவர்
செப்பிடுங் கட்டளைக்குக்
கார்செறி அங்கதனுங்—களரியிற்
காதலித் தோடிவந்தான்.

2. மட்டுப் படாவாலி—தனக்கு
மகனென வந்துதித்தோன்
சட்டபட் டத்துடனே—சவைதனில்
அங்கதன் வந்தனனே.

3. இராவணன் றன்னிடத்தில்—தூதுசொல
இப்போ சமையமென்று
தாரையவ டன்மகனும்—சபைதனில்
அங்கதன் வந்தனனே.

4. பத்துத் தலையுடையான்—அவனுடை
பட்டினந் தானடுங்க
வித்தக வாலிமகன்—சபைதனில்
வீரத் துடனேவந்தான்.

இராவணன்

5. என்னைமதி யாமலென்—கோட்டைக்குள்
ஏன்வந்தாய் அங்கதனே
சின்னபின் னப்படவே—உன்மண்டை
சிதற அடிப்பெனெடா.

அங்கதன்

6. தாயான சீதையாரைத்—திருடின
நாயேநீ கேளுமெடா
வாயி லடிப்பெனெடா—மதிகெட்ட
மாடப்ப யலேபோடா.

இராவணன்

7. மாடனென ஏசுகின்றாய்—உனக்கு
மகத்துவந் தந்தவனார்
ஏடவிழ் பூங்குழலாள் — சனகியை
என்வச மாக்கிக்கொண்டேன்.

அங்கதன்

8. உன்வச மாகமாட்டாள்—சீதாதேவி
உன்குடிக் கோர்நெருப்பு
அன்னவள் தன்சிறையை—விடுவிடு
அல்லதை ழிந்திடுவாய்.

இராவணன்

9. இந்திரர் வானவர்கள்—மற்றுமுள்ள
சந்திரர் சூரியர்கள்
வந்து நெருங்கிடினும்—அந்த
மாதைவி டுவேனே.

அங்கதன்

10. மாதை விடுவதில்லை—யுனக்கு
மகத்துவ மேதுக்கடா
கோதை நறுங்குழலாள்—தன்னாலுன்
குலத்தொ டழிவாயடா.

---

## 30. தம்பாபிள்ளை வசந்தன்

தரு

தானா தனத்ததன தானா தனத்ததன
தானா தனத்ததன தானினா.
தானா தனத்ததன தானா தனத்ததன
தானா தனத்ததன தானினா.

1. திங்களைத் தரித்தசிவ னாருடைய மைந்தனெனுஞ்
சிந்துர முகனென்ன வந்தவனே
செல்வனே தம்பாபிள்ளை சீர்வசந்தன் றனைப்பாடச்
சிவசுத கணபதியே முன்னடவாய்.

2. மங்கையெனும்வள்ளிதெய்வ யானையைமணம்புரிந்து
மாயவன் மருகனென்ன வந்தமுருகன்
வாலைசர சோதியுமென் நாவிலேகு டியிருந்து
வாழ்த்துமம்மா வசந்தன்புகழ் பாட.

3. மாயவனார் தங்கையென வந்துதித்த கண்ணகையே
மன்னும துரைப்பதிய ழித்தவளே
மாஞ்கர் மகளாக வந்தமர்ந்த பத்தினியே
மாசாத்தர் மருகியே வந்துதவாய்.

4. காயமதா கக்கிடந்த கோவலரைக் கண்டுபேசிக்
கடுங்கோப மாகவேதா னெழுந்து
உவாயம தாகவஞ்சிப் பத்தனையுந் தானழித்த
மாதுகண் ணகையையான் மறவேனே.

5. சீர்மருவு தென்கோண ஈசர்தெரு வீதிதன்னிற்
செல்வனென வாறதிவ ரார்மின்னே?
தார்மருவு செங்குவளைத் தாமனென வந்துதித்த
தரணிபுகழ் தம்பாபிள்ளை காண்மின்னே.

6. சித்திரப்பொற் பந்தம்மானை சேடியர டித்துவரச்
செல்வனென வந்ததிவ ரார்மின்னே?
முத்துக்கு மாரற்கினிய முன்னவனாய் வந்துதித்த
மொய்மலர்சேர் தம்பாபிள்ளை காண்மின்னே.

7. சங்குதவில் தாரைசின்னம் எங்குமிக முழங்கச்
சங்கையுடன் வாறதிவ ரார்மின்னே?
திங்கள்முக மங்கையர்கள் துங்கமிகு மாரனெனுஞ்
செல்வன் தம்பாபிள்ளை காண்மின்னே.

---

30. குறிப்பு:

தம்பாபிள்ளை என்பவர் அந்நாளில் இருந்த ஒரு நாட்டு அதிகாரி போலும். இவர் யாவர் என்பது இப்போதுள்ள எவருக்கும் தெரியவில்லை. "கண்டிராசர் மெச்சும் மன்னன்" என்று இக்கவியிற் சிறப்பிக்கப்படுதலால் இவர் இப்பகுதியில் செல்வம், செல்வாக்கு, அதிகாரம் என்பவை பொருந்தி உயர்பதவியில் இருந்தாராதல்வேண்டும். 'தென் கோண ஈசர் தெருவீதியில் செல்வனென வருகிறவர்' என்னும் குறிப்பினால் இவர் திருக்கோணமலைப் பகுதியில் இருந்த ஒரு பிரபு என ஊகிக்கலாம்போலும்.

4. உவாயமதாக - உபாயமாக.

# 31. தம்பாபிள்ளை வசந்தன்

வேறொன்று

## தரு

தத்தன தனத்ததன தத்தன தனத்ததன
தத்தன தனத்ததன தானினா.

1. சீர்மருவுந் தென்கோண ஈசர்தெரு வீதிதனிற்
செல்வனென வாறதிவ ரார்மின்னே?
தார்மருவு செங்குவளை மார்பனென வேயுதித்த
தரணிபுகழ் தம்பாபிள்ளை காண்மின்னே.

2. ஆரமணி மார்பிலங்க அழகேச னைப்போல
அன்பினுடன் வாறதிவ ரார்மின்னே?
மாரனென வேயுதித்து மகிழும்கண்டி ராசர்மெச்சும்
மன்னன் தம்பாபிள்ளை காண்மின்னே.

3. வேந்தர்தமக் கஞ்சாமல் வீரமுள்ள புலிபோலே
வீதியினில் வாறதிவ ரார்மின்னே?
சாந்துபு னுகொழுகத் தையலர்ம னங்கலங்கத்
தம்பாபிள்ளை ராசனிவர் காண்மின்னே.

4. சந்தனவா சங்கமழ மங்கையர்ம னமகிழ
சங்கையுடன் வாறதிவ ரார்மின்னே?
சிந்தைவைத்து எங்கள்துயர் தீர்க்கநி னைந்துவரும்
செல்வன்தம்பா பிள்ளையிவர் காண்மின்னே.

5. மாற்றலர்க ளஞ்சிடவே வன்னிமைமார் கொண்டாட்
மாரனென வாறதிவ ரார்மின்னே?
சீற்றமுள்ள செங்கடக மாநகரி ராசர்மெச்சத்
தீயரேங்க நின்றதம்பா பிள்ளைகாண்.

6. தத்தா் திமித்தியெனக் கைத்தாள மேயடிக்கச்
சங்கையுடன் வாறதிவ ரார்மின்னே?
சித்திரப்பொற். பந்தம்மானே சேடியர டித்துவரச்
செல்வன்தம்பர பிள்ளைவாருர் காண்மின்னே.

7. எத்திசையு மனமகிழ இரண்டுவட்டக் குடைபிடிக்க
ஏந்தலென வாறதிவ ரார்மின்னே?
மூத்துக்குமா ரற்கினிய முன்னவனய் வந்துதித்த
மொய்மலர்சேர் தம்பாபிள்ளை காண்மின்னே.

---

# 32. அம்மன் பள்ளு

## தரு

தந்தா னந்தனம் தானத் தானின—தானத்தானின
தந்தா னந்தனம் தானத் தானின

1. சீர்கொண்ட புகழ்க் காரை நகரில்வாழ்—மாதாவின்புகழ்ச்
செந்தமிழ் வசந்தன் சிந்திசை பாடவே
கார்கொண்ட புகழ்க் கரட மும்மத—மருதூரைங்கரன்
கற்பகப் பொற்பத மேப்போதும் போற்றுவாம்.

2. வாமக்குழற்பெண்ணமிர்தக்கண்ணகை-மேல்காரணந்தன்னை
வசந்தன் பள்ளிசை யாகப் பாடவே.
காமற் கடிந்தோ னுகந்த பாலகன்—கதிரமலையிற்
கந்த ரிருபொற் சரணம் வழுத்துவாம்.

3. வழுவில் லாத காட்சி கொடுப்பவள்—ஈரேழுலகு
மாதாப் புகழை நாவாற் றுதிக்கவே
பழுதில் லாத தமிழ்தந் தருள்செய்—சரசுவதியாம்
பங்கயன் மாது பதந்தந் தருள்கவே.

4. அருள்கொண்டினியகண்ணகைத்தாயார்-மேற்காரணந்தன்னை
அமிர்தஞ் சேர்சின்னப் புலவன் பாடவே
பொருள்தங்கும்வெள்ளிக் கயிலை மூர்த்தியும்—மாலயனுடன்
புரந்தர னித்தம் வரந்தந் தருள்கவே.

5. வரந்த ரும்புகழ் மதுரை நகர்தனில்—மீனவனுடன்
மகுட வரசர் வன்னியர் சூழவே
புரந்தரன் செல்வச் சண்முகன் மாமனும்—பலமன்னவரும்
புடைப ரந்தினி திருக்கும் வேளையில்.

6. வேளைய றிந்தே இனிய மாதவி— காற்சிலம்பிட்டு
வீரத் தண்டைபொற் பாடக மணிந்து
வாளை யனைய விழிக்குமை எழுதிக்—குழைக்குத்தோடிட்டு
மைக்குழல் வார்ந்து மலர்கள் சொருகியே.

7. சொரிமுத் துமாலை பதக்கஞ் சவடியும்—மார்பிலணிந்து
துணைமு லைக்குப்பொற் கச்சுக ளிறுக்கியே
பரிபுர சித்திரக் கடையம் பூட்டியே—விரல்கடோறும்
பசும்பொன் மோதிரம் பரிந்தி ணக்கியே.

8. இணக்க மான துகில்கள் புனைந்துதான்—வழுதிசபையில்
இரதி யென்னவே வடிவ மிலங்கவே
மணக்குங் குங்குமக் களபம் பூசியே—யினியதோகை
மயில்கள் போலவே மாதவி யாடினள்.

9. ஆடும் பரதந் தனைக்கண் டரசனும்—வழுத்திச்சபையில்
அகம் கிழ்ந்தினி தாகந கைத்தனன்
நீடு மரசன் நகைத்த நகைகண்டு— பரமேஸ்வரியும்
நிறைச பைதனி லுருப்ப டாமலே.

10. உருவில் லாத மாய மாகியே—நுதல்விழிதனில்
ஒருபொ றிகவிழ்ந் துறக்க மானதே
விருத ரசர்கள் புகழ்தென் பாண்டியன்—வீற்றிருக்கிற
வேளை யன்னதில் மாங்கனி யானதே.

11. மாங்கனி தன்னை யெடுத்துப் பாண்டியன்—புதுமையாக
வளர்பொற் குடத்தில் வைத்தே மூடினன்
தாங்குங் கணிதர் தம்மை வரச்சொல்லிக்—காரணமீது
தன்னை யூராயந் துரைமின் நீரென்ருன்.

12. உரைமின் நீரென்று வழுதி கூறவே—கணிதர்கூடி
உள்ள மறைகள் தமைத்தெளிந் தனரே
வரைநேர் புயனே மாங்கனிப் பொருட்டால்—நீபுரந்திடும்
மதுரை யழியும் மன்ன கேளென்ருர்.

13. என்று கணித ரியம்ப மீனவன்—மனதுகலங்கி
இனிய மாங்கனி யிருந்தபொற் குடத்தை
தொன்றில் லாத பேழையில் வைத்து-மலர்கள்சொரிந்து
துய்ய சாந்து பன்னீருந் தெளித்து.

14. தெளித்துப் பேழை தன்னை மூடியே—வெள்ளைவிரித்து
திருமண முரசு நவுரி முழங்கவே.

15. முழங்கு கடலிற் காராளர் கொடுபோய்த்—திரையின்மூழ்கி
முதுபெட் டகத்தைத் திரையில் விட்டனர்
வழங்கு பேழை தன்னைத் தள்ளியே—கடலில்விட்ட
வளமை மாற னுரைக்க வறிந்தான்.

16. அறிந்த பினந்தப் பேழைமி தந்துபோய்க்-கடல்கடந்து
ஆனக றுப்புக் கடலிற் சேர்ந்ததே.
செறிந்த வருண ராசன துகண்டு—பாற்கடற்பள்ளிச்
செங்கண் மால்பதந் தொழுது போற்றியே.

17. வாழ்த்துங் கறுப்புக் கடற்றென் புறத்தே—நெடியபேழை
வருகு தடியேன் கண்டேன் யானென்ருன்
ஆழ்தி றமுள்ள துளசி ராமனும்—அம்மொழிகேட்டு
அரும்பெட் டகத்தின் அதிசயங் கேளென்ருர்.

18. கேளா யினிய வருண ராசனே—முதுபெட்டகத்தின்
கிளிமொ ழியொரு வனிதை யாகவும்
ஆளா தபுவி முழுதும் ஆளவும்—ஈரேழுலகில்
அதிகக் காரணக் காட்சி தொடுக்கவும்.

19. கொடுக்கும் வரமும் தவமும் அருளவும்—மனுவில்லாத்
குலதெய் வமந்தப் பேழைதா னென்றூர்
எடுக்கும் படிக்கு நீநினைந் திட்டா-யெனவுரைத்திட
எழில்சேர் வருண ராச னறிந்தனன்.

20. அறிந்த பினந்தப் பேழைமி தந்துபோய்—அக்கடல்கடந்து
ஆனகா வேரிப் பூம்பட் டினஞ்சேர்
துறையில் மைத்துன ரிருவர் நிற்கையில்-பேழைமிதந்ததும்
துய்ய மாநாகர் மாசாத்தர்க் கென்சொல்வார்.

21. சொல்லற் கரிய பேழைக்கு ளிருக்கு-முதலெனக்கென்றும்
துலங்கும் பேழைமா சாத்தர்க் கென்றும்
நல்ல திதுவென் றிருவரு மெடுத்துப்—பேழைதன்னை
நாடி மனையி லுகந்து கொடுபோய்.

22. உகந்துபெட்டகந்தனைத் திறக்கவே—கதிரொளியெனமதலை
ஒன்றிருந்து வரிசை யாகவே.

23. வரிசையானதேவிக் கிணையென்ன—வருமதலையை
மாநா கரினி தாகவ ளர்த்தனர்
அரசர்மாநாகர்வளர்க்குங்காரணம்—பூலோகந்தனில்
ஆயிரம் புலவர் பாடத் தொலையுமோ.

24. தொலைவில் லாத புகழ்சேர் வனிதைக்குக்-கண்ணகைத்
துய்ய நாமமுஞ் சாற்றி வளர்த்தனர் [தாயென்று
அலைவில் லாதமா சாத்தர் தனக்கே—கோவலனென்னும்
ஆண்பிள் ளைபதி னறுவய துள்ளோன்.

25. உள்ளமகிழ்ந்து மாநாகரிடத்தே-மாசாத்தர்கொடுபோய்
உமது மகளை நமது மகனுக்கே
எள்ளெனவேமணம்முடித் திடுவோம்—எனவுரைத்திட
இந்திர லோகம் போலலங் கரித்தார்.

26. அலங்க ரித்துப்பின் மாநாகர் நினைந்து—மீகாமன்றன்னை
அழைத்து இனிய ஆசாரத் துடனே
இலங்குமெங்கள் கண்ணகைவனிதைக்கும்-மாசாத்தர்தனயன்
இனிய கோவலன் தனக்கும் மணஞ்செய்ய.

27. செய்ய கனகச் சிலம்பின் அரிக்கு—மீகாமாநீயும்
சிறக்க நாக மணிகொண் டணைகென்றார்
உய்யும் படிக்கு மீகாமன் தனக்கே—ஆயிரங்கப்பல்
உதவி யாகவே நாகமணியு மழைப்பித்து.

28. நாக மணிகள் அரிய தாகவே—சிலம்புசமைத்து
நாரி பாதத்திற் பூட்டி னரையா
ஆகமகிழ்ந்துகோவலர்தனக்கே—கண்ணகைத்தாபை
அருள மணமுடித் தினிது வாழ்ந்தனர்.

---

## 33. மாதவி நடனம்

### தரு

தானனே தன தானனே
தான தந்தனத் தானனே

1. வாழும் மணவறை வீடுதன்னில்
மன்னனு மாதுமி ருக்கையிலே
நீடும் மணப்பந்தர் தன்னில்வந்து
நேரிழை மாதவி ஆடினளே.

2. ஆடும் பரதந் தனைப்பார்த்து
ஆணழ கரெனுங் கோவலனார்
கூடும் படியொரு தூதுவிடக்
கோவல னரங்கு வந்தனரே.

3. வந்த வணிகன் றனைப்பார்த்து
மாதுநல் லாளெனு மாதவியும்
சிந்தை கலங்கி யறிவழிந்து
செய்யும் பரதந் தனைமறந்தாள்.

4. மறந்து பின்னுமு டன்தெளிந்து
வணிகே சன்றனை வெல்லவென்று
சிறந்த ராகமி கப்பாடிச்
செங்கண் மலர்த்தொடை கையேந்தி.

5. கைகாட் டிக்கை விரல்நீட்டிக்
கலைகாட் டித்தன் முலைகாட்டி
மெய்யுறக் காட்டிக்கோ வலனுரை
மெத்தவு மாசையைப் பூட்டினளே.

6. பூட்டிய ஆபர ணமுலையாள்
போதும் பரத மெனத்திரும்பி
வீட்டில் நடந்தாள் மாதவியாள்
மெல்லியர் தன்பிற கேகிடவே.

7. ஏகமு தாகியே மாதவியும்
இங்கித மாகிய கோவலரும்
ஆகமுஞ் சிவனும் போலிருந்தார்
அம்புவி யோர்கள் மிகவறிய.

8. அறிவில் லாதந்தோ மாதவிக்கு
ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னைச்
செறிவ தாகவே கைக்கொடுத்துச்
சிறந்தி ருந்தனர் கோவலனார்.

9. அரைமாப் பொன்கு றைந்ததென்று
அன்னையர் சொன்ன மொழிகேட்டு
வரைசேர் புயக்கோ வலனுரை
மறித்து வைத்தனள் மாதவியும்.

10. மறித்து வைத்த வகையறிந்து
மங்கையர் கண்ணகை மன்னனுக்காய்
வெறுப்பி லாது கழுத்திலிட்ட
மின்னொளித் தாலிப்பின் கொக்கிலையும்.

11. பின்கொக்கில் தன்னைமு றித்தெறிந்து
பேசாம லுள்ளதெல் லாங்கொடுக்க
அன்புக்கி ணங்கிய கோவலரும்
ஆயிழை தன்னரு காகவந்தார்.

12. வந்த வணிகன் றனைப்பார்த்து
வார்த்தை பலவு மிகப்பறைந்தாள்
இந்த நகரிலிருந் தோமாகில்
இன்னமுந் தூறு வருமெமக்கு.

13. வருவீர் காணெம் மன்னவனே
வராமல் மீளந டந்திடுவோம்
சுரும்பார் தொடையன் மன்னவனே
சொன்ன நகரிலி ருப்போமென்றாள்.

# Part IV — பாகம் IV

## 34. வேளாண்மை வசந்தன்

தரு

தெந்தென்ன தென்ன தினை
தெந்தென்ன தென்ன தெய்தெய்
தெந்தென்ன தென்ன தினை
தெந்தென்ன தென்ன தெய்தெய்

1. சீருலவு மத்தகய மாமுகனை நாமகளைச்
சிந்தைசெய்து செந்நெல்வசந்தன் இசைபாட
ஏருலவு மீசனே டிமயவரை மங்கையுடன்
எங்குமுள்ள தேவர்பதம் என்றுமறவேன்.

2. மள்ளர்களெல் லோருமறை யோரிடஞ்சென் றூர்விதைக்க
மாபெரிய ஏர்முகூர்த்தம் பார்த்துச்சொலுமென்றூர்
பள்ளர்களே யோணமுடன் பஞ்சமி யின்றும்நல்ல
பானுவிற்ப கடுகள்விட் டேவிதையுமென்றூர்.

3. பத்தியுட னேவரம்பு முற்றுந்தி ருத்திநல்ல
பாரக்கடா வானவைக ளாலேமிதித்துத்
தெத்தியநில் லாவரம்பைத் தீத்தடாமள் ளாபின்பு
செந்நெல்முளை விதைத்திடச் செப்பனிடடா.

4. சத்திகண்ணகையைப்புகழ்ந்தேத்தடாமள்ளாவயலில்
தண்ணீரைக் கடத்திப்புறந் தள்ளடாமள்ளா
எத்தலத்தி னுமிகுந்த வித்துநெற்க ளாய்த்தேடி
எல்லவரு மேவிதைக்க எத்தனித்தாரே.

5. பச்சைப்பெருமாள்கறுப்பன் பாலைமுக வன்செழும்
பன்றிக்கூரன் வெள்ளைவாலன் பவளச்சம்பா

மெச்சியேப லரும்விரும்பும் வெள்ளைவாணன்இந்த
மேதினியெல் லாம்புகழும் முத்துச்சம்பா.

6. சம்புச்சம்பா செம்பவளச் சம்பாவால் சம்பாநல்ல
சாம்பற்கறுப் பன்குறவன் சம்பாவிதைத்தார்
எங்கள்வயற் பங்குகளெல் லாம்விதைத் தோமினி
ஏனம்மாடு வாராமல் வேலிவைப்போம்.

7. முத்துச்சம்பா நெல்முளையை முன்னேவிதைப்போம்நல்ல
மொறுங்கன் கறுப்பன்களை மேட்டில்விதைப்போம்
சித்தியுடன்செந்நெல் வயல்முற்றும் விதைத்தோம்-பயிர்
செழித்தபின்பு வேலிகாவல் செப்புனிடுவோம்.

8. அட்டதிக்கும் புகழவே யிட்டபயிர்க ளிந்த
ஆழிசூழுலகி லனைவோருக்கும் விளைந்தே
இட்டமுடன் மள்ளர்களெல் லோருங்கூடியேஎங்கள்
ஈசுபரி தன்புகழைப் பாடியாடியே.

9. கத்தியடிக்குங்கம்மாளன் தன்னிடஞ்சென்றேகரும்பொன்
கைக்கொடுத்துக் கத்திசெய்து தாரும்நீ ரென்றார்
மெத்தியஇ ரும்பினாலே கத்தியுஞ்செய் துகொல்லன்
வேலையாளர் கைக்கொடுக்க வாங்கிவந்தனர்.

---

34. குறிப்பு:

2. ஓணம் - திருவோண நக்ஷத்திரம். பானு - சூரியன், ஞாயிற்றுக்கிழமை.

3. தெத்திய - வரம்புக்கு மண் அணைத்துக் காலால் மிதித்த. நில்லா வரம்பு - மண் பிடியாமல் வழிந்து சொரியும் வரம்பு. தீத்துதல் - மண்ணைக் குழைத்து அப்புதல்.

செப்பனிடுதல் - பரம்படித்தல், பலகை அடித்தல்.

6. ஏனம் - பன்றி.

9. கரும்பொன் - இரும்பு.

# 35. வேளாண்மை வெட்டு வசந்தன்

1. வேலையாளர் மேலுமொரு நாள்முகூர்த் தத்தில்நங்கள்
வேளாண்மை யையறுக்க வேதொடங் கினார்
காலமே யெழுந்துகதி ரானவைகொய் வாரிந்தக்
கத்திவெட்டு தில்லையென்று காட்டிப் பறைவார்.

2. வெட்டுதில்லை இந்தக்கத்தி மொட்டைதானென்பாரந்த
வேலையறி யாதகொல்லன் தன்னிடம் போவோம்
எட்டுச்சல்லிகத்திக்கிர யம்வாங்கிடும்கொல்லன் அவன்
எங்கொளித்துப் போனானென்று தேடுவம் வாரீர்.

3. அட்டதிக்கும் புகழவேயி ராச்சியம்செய் யும்எங்கள்
ஆண்டவ னிடத்திலிதை யறைகுவம் வாரும்
கெட்டகொல்லனைப்பிடித்துக்குட்டியேயிழுப்போம்காசு
கேட்டுவாங்க முன்னவனைத் திட்டியே யுதைப்போம்.

4. இப்படிப்ப றைந்துசெந்நெல் யாவுமறுத் தேகதிர்
எல்லா மடுக்குவதற் கேதுவாய் வந்தார்
உப்பட்டியெல் லாமெடுத்துக் கட்டுவோம் வாரும்நாம்
உப்பரிகை போலேசூ டுயர்த்துவோம் வாரும்.

---

35. குறிப்பு:

3. ஆண்டவன் - போடியார், கமக்காரன்.
4. உப்பரிகை - மேல்வீடு.

# 36. உப்பட்டி கட்டு வசந்தன்

தரு

தந்தனாதன தந்தன தந்தன
தந்தனாதன தந்தனத் தானா

1. கொண்ட லாலே மழையு மிருளுது
கூடுங்கோ மள்ள ருப்பட்டி கட்ட
தென்றல் வந்திடுந் தெற்குத் திசையினில்
சென்று காரிருள் மண்டி முழங்குது.

2. கோடை யாலே மழையு மிருளுது
கூட்டுங் கோகதி ரானவை யெல்லாம்
வாடை யாலே மழையு மிருளுது
வாருங்கோ மள்ளர் உப்பட்டி கட்ட.

3. தேடு நாரில் ஒடுக்கி யடுக்குங்கள்
சென்று நாங்களெல் லோரும் சுமப்போம்
வாடுகின்ற பசியும் வருகுது
மள்ளரே பள்ளி எங்கடா போனாள்.

4. ஓடியே மள்ளப் பெண்களெல் லோரையும்
உண்டி கொண்டூரச் சொல்லடா, மள்ளா
கேடில்லாச் செந்நெற் கட்டுகள் யாவையும்
கெட்டி யாய்ச்சுமந் திப்படி வையடி.

5. பள்ளிச்சி கஞ்சி, காய்ச்சலுண் ணுதடி
பாரடி யுந்தன் பல்லை யுடைக்கிறேன்
அள்ளிச் சேதப்ப டாமலிக் கட்டுகள்
யாவு முங்க தலையிற் சுமவுங்கள்.

வேறு

6. பள்ளிச்சி பள்ளன் எங்கடி போனான்
பள்ளம் பார்த்துப் படிவெட்டப் போனான்
கள்ளனே இவன் பள்ளனே தானே
காரியக் கார னயிருப் பானே.

7. முள்ளிப் பூப்போலே முப்பட்டுச் சால்வையும்
மூலை சாய்ந்த கடகமுங் கொண்டு
தள்ளித் தள்ளியே சாய்ந்த நடைகளும்
சாடை யும்பல கேலிகளும் பேசி.

8. கொட்டப் போனன்குழ லூதப் போனன்
கோழிக் கூட்டுக்கு மண்வைக்கப் போனன்

வட்டுக் காய்போலே குட்டை வயிறனை
வாவெடா வென்று கூப்பிடப் போனான்.

9. காலத் தாலே பாலுங் கறந்து
கமுகம் பூப்போல் அரிசியுந் தீட்டி
காலத் தாலே காய்ச்சின பாற்கஞ்சி
காலாலே தட்டிப் போனான்காண் ஆண்டே.

10. இப்படிக் கொத்த கன்னெஞ்சப் பள்ளனுக்
கெப்படிக் கஞ்சி காய்ச்சுவன் ஆண்டே
துப்புர வாகக் காய்ச்சின கஞ்சியைத்
தூக்கி னன்பல சாதிக்குங் காட்ட.

---

## 37. சூட்டு வசந்தன்

(சூடு வைத்தல்)

தரு

தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தனத் தானன தெய்தான
தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தனத் தானன தெய்தான.

1. சிந்தையுடன் மள்ளர் செந்நெல்போ ரேற்றிய
செந்தமிழ் பாடவென் றேதுணிந்தேன்
கந்தனின் முன்வருங் கற்பக மேயெனைக்
காத்து ரெட்சித்தருள் வாயெப்போதும்.

2. சுந்தர மாகிய மங்கையே வாணியே
தூய தமிழுதவ வாயென்னாவில்
தந்தி யுரியை யணிந்தவன் மைந்தனே
சண்முக னேயருள் தாவெப்போதும்.

3. தென்றிசை சூழ்ந்திடு மண்டல மீதிலே
சேர்ந்திடு மள்ளரெல் லாம்வந்தாரே
வென்றிகொள் மெல்லிநல் லாரொடு தங்கள்
வெளிவயல் தன்னில்வந் தார்சூடேற்ற.

4. வான முழங்கி மழையு மிருளுது
வாருங்கோ சூடுவைப் போமெல்லோரும்
ஊனம் பொதிந்த உடம்புள்ள மள்ளரே
ஓடியே வாருமெ டாபோரேற்ற.

5. மங்கைய ரேயெங்கள் நங்கைய ரேமழை
வாறது பாரும டீயென்தோழி
சங்கையில் லாமலிக் கட்டுகள் தம்மைச்
சடுதியு டன்சுமப் பீரெல்லோரும்.

6. மந்தர மாமலை போலவிச் சூடுகள்
வான மளாவுத டாவென்தோழா
சுந்தர மாகவிச் சூட்டினை வேய்ந்து
துலங்க முடிகவிப் பீரெல்லோரும்.

---

## 38 சூட்டு வசந்தன்

(சில பிரதியின்படி)

7. என்னடா பள்ளாவிப் பாடுகள் பேசி
இடைஞ்சற் படுத்துகி றாய்சண்டாளா
நானடா வேறுமோ ராடவ னேடே
நளினம் புரிந்தெனே டாசண்டாளா.

8. கச்சைப் பொருது கதித்துப் பணைத்த
கனதனஞ் சேர்ந்தபெண் ணேயிப்போது
கொச்சைக் குதலை மொழியுரைத் தென்னைக்
கோவித்துப் பேசாதே யென்பெண்ணே.

9. மாரனைப் போலே வடிவுள்ள மள்ளரே
வைது பறையா தேயென்னேடே
சூரனைப் போலெங்கள் துன்பத்தை மாற்றிச்
சூட்டை யுயர்த்திடு வீரெல்லோரும்.

10. மந்தர மாமலை போலேயிச் சூடுகள்
வானம ளாவுத டாவென் தோழா
சுந்தர மாகவிச் சூட்டினை வேய்ந்து
துலங்க முடிகவிப் பீரிப் போது.

11. தந்திமி தாமென வேயெங்கள் கண்ணகைத்
தாயை வணங்கிடு வீரெல்லோரும்
அந்தி நிறத்தனை ஆனை முகத்தனை
ஆரண னைப்பணிந் தேதுதிப்பீர்.

12. கந்தனை யாயிரங் கண்ணியை யென்றுங்கை
கூப்பி நமஸ்கரித் தாலெந்நாளும்
பந்தனை யாவும் பறந்து பவுஷா
பணைத்துச் சிறந்திருப் பீரெல்லோரும்.

13. திந்தத் திங்கிண தித்திமி தாதகு
தித்திமி தாமென வேமிதித்துக்
கொந்து நிறைந்தகு ழன்மட வாரொடு
கூடி நடம்புரி வோமகிழ்ந்தே.

# 39. மாடு பிடித்தல் வசந்தன்

தரு

தானதந்தத் தான—தனந்தன—தானதந்தத் தான
தானதந்தத் தான—தனந்தன—தானதந்தத் தான

1. மூந்தியே துதிக்கும் மூக்கணனை
வந்தனை புரிந்தே
பந்திபந் தியதாய்ப் பகடுகள்
மள்ளர்கள், தான்பிணைத்தார்.

2. கந்திலே யடுத்தார் கடாக்களைக்
காலியோடு சாய்த்தே
வெந்துவோடு வந்தே விநாயகத்
தந்திபூசை செய்தார்.

3. வரவைமீ தினிலே களவெட்டி
வளமையாய்த் திருத்திப்
பரவிநே ரிட்டார் வயலினிற்
பசியமண் ணெடுத்தார்.

4. எடுத்தமண் ணதனலோர் பிள்ளையார்
இங்கே வையுமடா
தொடுத்த தந்திமுகன் தனக்கிப்போ
தடுத்த பூசைசெய்வோம்.

5. பூசை செய்யுமடா பள்ளிச்சியைப்
போகச் சொல்லுமடா
ஆசை வையாமல் பெண்கள்தமை
யகலச் சொல்லுமடா.

6. ஏனடா கெடுவாய் மள்ளர்களே
என்னை வைவதென்ன
வானமீ னதுபோலப் பெண்களெல்லாம்
வந்து நிற்கையிலே.

7. பாகுபோல மொழியும் அன்னநடைப்
பள்ளி யானவரே
ஏகபோ கமதாய் எல்லோருநாம்
ஈசனைத் துதிப்போம்.

---

39. குறிப்பு:

இது **களவெட்டி வெட்டுதல் வசந்தன்** எனவும்படும். மேய்ச்சலுக்காகக் காட்டில் விடப்பட்ட மாடுகளைத் தேடிக் கொணர்ந்து பிணைத்தலும் சூடு போடும் நிலத்தைச் செப்பஞ் செய்தலும் ஆகிய ஆயத்த வேலைகளைப்பற்றிச் சொல்வது இக்கவி என்பதறிக. களவெட்டி - களம், சூடு போடுதற்காகிய உயர்ந்த நிலம்.

2. வெந்து - பெந்து, சுற்றத்தார்; பலம் என்பது பெலம் என்று வருவதுபோல் பந்து என்பது பெந்து என்றாய்ப் பின் வெந்து என நாட்டு வழக்காயிற்று. இனசனம் என்பது பொருள். விநாயகத்தந்தி - யானை முகத்தையுடைய விநாயகக் கடவுள்; தந்தி - யானை.

3. வரவை - பாத்தி, நாலு வரம்புக்குட்பட்ட வயற்கூறு. பரவி நேரிட்டார் - நிலத்தை மட்டம்பண்ணிச் செப்பமாக்கினர்.

4. அடுத்த பூசை - தக்கவிதமான பூசை.

---

# 40. சூடுபோடல் வசந்தன்

தரு

தான தானின தான தானின
தான தானின தானினா

[தானினந்தன தானினந்தன
தானினந்தன தானினா:—என்பதுமாம்]

1. சூட்டைத் தள்ளடா மாட்டை யேத்தடா
சோம்பல் தனத்தைத் துடையடா
பாட்டைப் பாடடா மாட்டைச் சாயடா
பள்ள ரானவ ரனைவரும்.

2. போரைக் கல்லடா பொலியைக் கீறடா
பொழுது விடியு முன்னமே
பாரைப் பழித்து வளர்ந்த தனத்துப்
பள்ளிகள் யாரையு மழையெடா.

3. தாந்த திங்கிண தத்திமி தித்திமி
தாமெனச் சொல்லிச் சாயெடா
காந்திடும் பொழு தேறுதே பள்ளர்
கந்திலே மாட்டைத் துரத்தடா.

4. மாட்டைத் துரத்திப் பொலியைக் கூட்டி
மலைபோ லுயரக் குவியெடா
சேட்டைத் தனத்தை நிறுத்தி யிந்தச்
செந்நெலைத் தூற்றி யள்வடா.

5. அளக்குஞ் சேரினை யெடுத்துப் பாச்சடா
அவணக் கணக்கைப் பாரடா
பளக்குங் கும்பியிற் சுமத்தி யேகம்
பதியிற் சென்றனை வோருமாய்.

6. சத்தி கவுரி யத்தி முகனைத்
தந்து புவன முய்ந்திடப்
பத்தி யோடரன் பங்கி லுறையும்
பார்ப்ப தியைப் பணிகுவோம்.

---

40. குறிப்பு:

1. மாட்டைச் சாய்த்தல் - மாடுகளை வளைந்து சுற்றிவரும்படி ஓட்டுதல்.

3. காந்திடும் பொழுது - எரிக்கின்ற வெய்யில்.

5. சேர் - கொத்து, மரக்கால். அவணம் - நெல்லின் அளவு; சில இடத்தில் அது $7\frac{1}{2}$ புசலும் (பறையும்), சில இடத்தில் 12 புசலும் கொண்டதாக வழங்கும்.

பளக்கும் கும்பி - பழக்கப்பட்ட (பொதி) மாடு; கொம்பி (கொம்பை யுடையது) என்பது கும்பி என நாட்டில் வழங்கும்.

# 41. பொலி காவுகிற வசந்தன்

தரு

தானுன தானுன தானதந்தனத் தானுன
தானுன தானுன தானதந்தனத் தானுன

1. சூடஞ்சு கடாவேழு சூடுபோட்டுக் கட்டலாச்சுப்
போடியார் வீட்டுக்குப் புதிர்காவி யேபோறேம்.
2. போடியார்முன்னேபோகமுல்லைக்காரன்பின்னேவர
காணியில்விளைந்தநெல்லைக்காவிக்கொண்டுபோறேம்.
3. நெல்லு மொருகடகம் வைக்கோலு மறுபக்கம்
இருபக்க மும்பாரச் சுமை யேத்தினரே.
4. முத்தட்டுக் கூலிக்காரன் மூன்றுவாழைக் குலையும்
முல்லைவயற் கூலிக்காரன் மூன்றுதயிர்ப் பானை
5. ஆகஏழு காக்கொண்டு இறக்கினே மண்ணே
அவரெங்க ளுக்குச்செய்த பிறசண்டைக் கேளும்.
6. போடியார் ஒருசோறு முல்லைக்கார னிருசோறு
போதுமள வுந்தந்து போகவே சொன்னர்.
7. கல்லிருக்குக் கட்டையில்லைச் சந்தணம் பூசக்
காசுதாறேன் கட்டைவாங்கி வாருங்கோ வென்றூர்.
8. இப்படிக் கொத்தபோடி யாருக்கு நாங்கள்
என்னபிற சண்டுசெய்யப் போகின்றே மண்ணே.

---

41. குறிப்பு:

1. போடியார் - வயற்சொந்தக்காரன்; இது மட்டக்களப்பில் வழங்குஞ் சொல்; யாழ்ப்பாணத்தில் **கமக்காரன்** என்பது வழக்கு. முல்லைக்காரன் - செய்கைக்காரன்.

5. கா - சுமை; உபகாரமாகக் கொடுத்தற்கு எடுத்துக்கொண்டு போகும் பொருள். பிறசண்டு - Present (உபகாரம்) என்னும் ஆங்கிலச் சொல்.

6. ஒரு சோறு - ஒருநேர உணவு, விருந்து.

7. கல் - சந்தனக் கல்.

# 42. கள்ளியங் கூத்து

தரு

தானனே தான தந்த — தானனே தன தானினன

1. முந்திவி நாயகனே முன்
முதற்பொரு ளாகிய முக்கணனே
தந்திமு கப்பொருளே தமிழ்
தந்தருள் செய்யுந் தயாபரனே.

2. பரனேப ரப்பொருளே நல்ல
பார்வதி பெற்றருள் பாலகனே
சரணம லர்பணிந் தேத்தவே
சந்தத முந்தமிழ் தந்தருளே.

3. அருளான அம்பிகையே யெங்கள்
அம்புயன் தேவியே ஆரமுதே
இருளான வேளையென் னவினில்
இன்னிசை பாட இருந்தருளே.

4. வனமேவு கிராதரெல்லாம் வந்து
மான்வேட்டை யாட மனத்திலெண்ணி
இனமோடு வந்துறைந்தா ரந்த
ஏய்ப்பாடி யென்னு மிடந்தனிலே.

5. பன்றிவ லையெடடா அந்தப்
பாரவில் லம்பையும் பார்த்தெடடா
வென்றிபு னைந்திடு மீட்டியை
மெல்லியர் கையிற் கொடுத்திடடா.

6. ஆளிக ரடிபுலி யத்தி
அகப்படு மந்த வலையெடடா
கோழிக்கொடி வேலரைப் போற்றியே
கூட்டமாய் வேட்டைக்குப் போய்வருவோம்.

7. நாயைப்பி ணையுமடா நம்ம
நங்கையர்ப் பின்வரச் சொல்லுமடா
காயத்தெ ழூந்தபசிக் கிந்தக்
காட்டினில் வேட்டைக்குப் போய்வருவோம்

8. வரையோரம் வாருமடா அங்கு
மானடி பார்த்து மதியுமடா
இரையாமல் நில்லுமடா இங்கு
யாளியுஞ் சிங்கமு மேகுதடா.

9. வலையைவ ளைந்துகட்டி யந்த
மானைப் பிடித்திட வாருமடா
கலையைப்பி டியுமடா அதைக்
கைச்சித் திரமாக அடியுமடா.

10. இங்குங் கரடிபுலி நல்ல
எய்யுட ஞம்பலிங் கேகுதடா
சங்கைத் தொனித்துநின்றே யதைத்
தாமத மில்லாமற் குத்துமடா.

11. ஓங்கிக்குத்தா யீட்டியின லங்கே
ஓடியே குத்தாய் கூட்டமதாய்
வாங்கிக்குத்தாய் மாமழுவால் வலு
வாகக் குத்தாய் மாண்டிடவே.

12. தும்பியைக்குத்தடா தம்பியரே யெங்கள்
சுப்பிர மணியரைப் போற்றிக்கொண்டே
வெம்புழுழுவை யுளிய முதலிய
விலங்குச் சாதியை வதையுமடா.

13. வாருங்கி ராதர்களே நாங்கள்
வந்து நெடுநேரஞ் செல்லுதுபார்
சேரும்பதி யமர்ந்தே நாங்கள்
செவ்வடி வேலரைப் போற்றிசெய்வோம்.

14. அய்யா அறுமுகனே யுன்.
அடைக்கல மான அடியவர்தம்
வெய்யவி னையகற்றி யுந்தன்
மெய்ப்பதந் தந்தருள் வித்தகனே.

42. குறிப்பு.

இது **கள்ளியம்** எனவும், **கள்ளியங் குத்து** எனவும் சிற்சில பிரதிகளிற் காணப்படும். இதன் பெயர்க் காரணம் விளங்கவில்லை. நாட்டிற் பலரிடத்தில் விசாரித்தும் ஒருவராவது பொருத்தமான பொருள் கூறினரல்லர். இது இன்னும் ஆராய்தற் குரியது.

4. கிராதர் - வேடர்.

6. அத்தி - யானை. ஆளி - சிங்கம்.

7. காயம் - உடல்; இங்கே வயிறு.

10. எய் - முட்பன்றி. ஆம்பல் - யானை.

12. தும்பி - யானை. உழுவை - புலி. உளியம் - காடி. வெம்பும் - கோபிக்கின்ற.

# 43. கள்ளியங் குத்து

வேறு

தரு

தந்தானின தான தானின, தான தானின தானினன

1. வந்தேபுன வேடரெல் லாம்வடி
வேலரைப் போற்றி மகிழ்ச்சிகொண்டு
சிந்தாகுல மான தகன்று
தினைப்புன மீதொரு செய்திகண்டார்.

2. ஏதோவொரு மாய்கைய டாதம்பி
இம்மர மேதோ ரதிசயங்காண்
வேதாவு மறிவரி தாகிய
வேங்கைம ரத்தினைப் பாருமடா.

3. இந்தம ரம்புதி தாகவிருக்குது
இத்தைய ழித்திட வேணுமடா
கந்தொடுபா ரில்விழும் படிவெட்டக்
கணிச்சியை யிங்குகொ ணர்ந்திடடா.

4. தூரோடு கெல்லுகி னுந்தம்பி
தொந்தரை யாகஇ ருக்குதடா
வேரோடே சாய்த்திட வேயிந்த
வேடர்கள் யாவரும் வாருமடா.

5. கேளும்வன வேடர்க ளேநல்ல
கெம்பீர மானநி ழல்மரத்தை
ஆழம்அ்றி யாமல் தறிப்ப(து)
அழகல்ல வேயெங்கள் தம்பியரே.

6. இந்தநி ழல்மரம் நல்லதடாதம்பி
எங்கு மிதுபோலே கண்டதில்லை
சந்தங் கமழுமர மிதுதன்னைத்
தறிப்ப தழகல்லத் தம்பியரே.

---

43. குறிப்பு :

இக் கவியில் கந்தசுவாமி தினைப்புனத்தில் வேங்கைமரமாகி நின்றதும் அங்குச் சென்ற வேடர்கள் அம் மரத்தைக் கண்டு அதிசயங் கொண்டதும் ஆகிய சம்பவம் குறிப்பிட்டிருப்பது காண்க.

2. வேதா - பிரமதேவர்.

3. கந்து - கொப்பு, பெருங்கிளை. கணிச்சி - கோடரி.

4. தூர் - வேர். கெல்லுகினும் - கல்லுகினும், பறித்தாலும் ; கெல்லுதல் என்பது மட்டக்களப்பு வழக்கு.

6. சந்தம் - வாசம், நறுமணம்.

# 44. கள்ளியங் . குத்து

வேறு

தரு

தந்தானின தான தானின
தான தானின தானினஞ

1. குருவான வெம் மைங்கரனைக்
கும்பிட் டிருகையிற் கோலெடுத்து
வளைவாகவே நின்று வசந்தன்
மன்றினி லாடி யடிப்போமே!

2. மலையோரம் வேட்டைக்குப் போய்
மானடி பார்த்து வருகையிலே
கலையோ கலைமானே
காடேறி மேய்ந்ததோர் புல்மானே

3. பையமி தித்தது பன்றியடி
பதறமி தித்தது மானினடி
இந்தஅ டிப்பிற கேபோனல்
இக்கணங் காணலாம் வேடனடி.

4. புல்லாந்தி யிப்பற் றைக்குள்ளே
புலிகி டந்து உறுமுகுது
ஓங்கிக் குத்தாய் புல்லாந்தி
ஒருகுத்தாய்க் குத்தாய் புல்லாந்தி.

---

44. குறிப்பு :

1. மன்று - சபை. குருவான, வளைவாக என்பவற்றில் (இடை) இன எதுகை வந்தது காண்க.

4. புல்லாந்தி என்பது இங்கே ஒரு வேடனது பெயர்.

# Part V — பாகம் V

## 45. குறவஞ்சி வசந்தன்

தரு

நன்னனே நன்னனே நானநன்ன நன்னனே.

1. சீர்புகழுந் தென்வெருகற்
சேயிழையே செய்தியைக்கேள்
பார்புகழும் புலிமீதிற்.
பசுவிருக்கக் கண்டேனே!

2. கோதைசெறி தென்வெருகற்
கோதையேயோர் 'செய்தியைக்கேள்
காதலித்துச் செம்பருந்தோர்
கருமானை எடுத்ததடீ!

3. செம்பவள வாயாரே
சேயிழையே செய்தியைக்கேள்
சம்பதனிற் சம்பிருந்து
சண்டைசெய்யக் கண்டேனே!

4. மானனைய வள்ளிபங்கன்
வாழ்நகரில் மங்கையேகேள்
ஆனைதனைப் பூனைதின்ற
அதிசயத்தைக் கண்டேனே!

5. தித்தியென வேநடிக்கும்
தென்வெருகல் மங்கையேகேள்
அத்திதனை அத்திதின்ற
அதிசயத்தைக் கண்டேனே!

6. மத்தகத்தின் கோடுகொண்டு
மதியரவு துடிசிலைவேல்
இத்தனையுஞ் சுமந்தொருமின்
எதிரில்வரக் கண்டேனே!

---

## 45. குறிப்பு:

இது **தோங்கல் வசந்தன்** என்றும், **தோங்கற் சவனிக்கை** வசந்தன் என்றும் வழங்கும். இப்பெயர்களின் காரணம் நன்கு விளங்கவில்லை. சவனிக்கை என்பது ஒருவகை மத்தளத்திற்குப் பெயராக மட்டக்களப்பில் வழங்குவது. சவனிக்கை என்று திரைச்சீலைக்கும் பெயர். (ஜவனிகா என்பது வடமொழி.) சீலைத் தொங்கலைக் கையிற் பிடித்து ஆடுவதனால் இப்பெயர் பெற்றதுபோலும்.

இக்கவி மிக்க நகைச்சுவை உடையது. படிப்பவருங் கேட்பவரும் மிக்க மனக்களிப்பை அடைந்து ரஸிக்கும்படியான விநோதக் கவி. இயல்பான ஒரு பொருள் மறைந்து இருக்க இயல்பு அல்லாத முரண் பொருள் வெளியாகத் தொனிக்கும்படி அமைந்திருப்பது காண்க. இவ்வகையான கவியைப் **பிரகேளிகை** என்பர் புலவர்.

வெருகல் ஆற்றங்கரையில் உள்ள **வெருகல்** என்னுந் தலத்தில் இருக்கும் **சித்திரவேலாயுதர்** என்னும் முருகக்கடவுள் மேல் பாடப் பட்டது இக்கவி. ஒரு பெண் தனது தோழிக்குத் தான் வெருகலிற் கண்ட அதிசயங்களை ஒன்றொன்றாகச் சொல்வதை நோக்குக.

1. **புலி** மேல் **பசு** இருக்கக் கண்டது இயல்பில்லாத பொருள். இதில் மறைந்திருக்கும் இயல்பான பொருளை அறிதலே சுவை தருவது. சித்திர (வேல்) ஆயுதர் என்னும் பெயரும், வல்லியம்மா என்னும் பெயரும், இங்கு மறைத்துக் குறிப்பிட்டிருப்பன. சித்திரம் - புலி; அதன்மேல், ஆ - பசு, யுதர் - சேர்ந்திருப்பவர் என்பதும்: வல்லியம் - புலி, ஆ - பசு என்பதும் நோக்குக. வெருகலில் சித்திரவேலாயுதரையும் வல்லியம்மாவையும் கண்டேன் என்பது பொருளாமாறு காண்க.

2. கோதைசெறி - மாலையை அணிந்த; மொய்த்த கூந்தலையுடைய எனினுமாம். கோதையே - பெண்ணே. இச் செய்யுளில் ஒரு பருந்து ஒரு கலைமானை (கொல்லனை) த் தூக்கிக்கொண்டு போனது என்னும் விநோதமான ஒரு பொருள் தொனிக்கின்றது. இயல்பான பொருள் கருடன் (வாகனம்) திருமாலைச் சுமந்து சென்றது என்பது; அறிந்தின்புறுக.

3. சம்பு அதனில் சம்பு இருந்து சண்டையிட்டது எனப் பொருத்தமற்றதுபோன்ற ஒரு பொருள் தொனிக்கின்றது. சம்பு - ஒருவகைப் புல்; நாவல்மரமெனினுமாம். சம்பு - நரி. சம்புப் புல்லுக்குள் நரி இருந்து சண்டையிட்டது என்பது இயல்பான பொருள்.

4. இச் செய்யுளில் ஆனையை ஒரு பூனை தின்றது என அசம்பாவிதமான ஒரு பொருள் தொனிக்கின்றது. ஆநெய் என்பது ஆனையெனப் போலியாய் நின்றது. ஆ - பசு; பசு நெய்யைப் பூனை தின்றது என்னும் இயல்பான பொருள் மறைந்திருத்தலை அறிந்தின்புற்று மகிழ்க.

5. இதில் அத்தியை அத்தி தின்றது எனப் பொருத்தமில்லாத பொருள் தோற்றுவது ஒரு விநோதம். உண்மையான பொருள், அத்தி மரத்தின் இலைகளை ஒரு யானை தின்றது என்பதாம்.

6. இச் செய்யுளில், ஒரு மின் (மின்னல்) யானைக்கொம்பு, பிறை, பாம்பு, உடுக்கு, வில், அம்பு என்னும் இவற்றைத் தாங்கிக்கொண்டு எதிரே வந்ததாகச் சொல்வது நகைச்சுவை தரும் ஒரு விநோதக் கூற்று. உண்மையான பொருள், ஒரு பெண் எதிரே வந்தாள்; அவளது தனம், நெற்றி, (முகம் எனினுமாம்) அரை, இடை, புருவங்கள், கண்கள் ஆகிய உறுப்புக்கள் மிக்க அழகுவாய்ந்தவை என்பதாம். மின் - மின்னல், பெண். உவமானப் பொருட்களைக் கூறி அவற்றுக்குரிய உவமேயமாகிய உறுப்புக்களைக் குறிப்பிட்டார் என அறிக.

---

## 46. குறத்தி வசந்தன்

### தரு

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினனு
தென்னுதெந் தென்னுதெந் தினதெந்தின தினனு

1. சீர்புகழுந் தென்கதிரைச் சேவலனைப் போற்றி
தேசமெங்குங் குறிசொலவே சேயிழைவந் தனளே.
பார்புகழும் பார்வதிதன் பங்கர்பதம் போற்றி
பாவலர்கள் பாடநடந் தோவியம்போல் வந்தாள்.

2. இச்சகமெல் லாம்புகழும் பச்சைமலைக் குறத்தி
ஏருலவு சங்குவளை தானணிந்து கொண்டு
பச்சைமணி பவளமணி பைம்பொன்மணி குலவ
பாடகமுஞ் சூடகமும் பாவையவ ளணிந்தே.

3. கொங்குலவு கோதையொடு கோதையது புரளக்
குவளையது பரிமளிக்க குறமகள்வந் தனளே

பங்கயம்போல் முகங்களின மங்கையர்கள் பரவ
பார்வதித னைப்புகழ்ந்து பாடுவிச்சி வந்தாள்.

4. கொக்கிறகு மயிலிறகு கோதைதனிற் சூடிக்
குஞ்சரனை முன்னிறுத்திக் குறிசொலவே வந்தாள்
சக்ரகிரி தனிலிருந்து இப்புவியில் வந்தோம்
சடுதியில்நெல் முறத்திலிடு சல்லியொன்று கொடுவா.

5. பூனைதின்னேம் அழுங்குதின்னேம்புற்றிலுடும்பருந்தோம்
புனுகுசம்பா தினையருந்தும் புனக்குறவர் நாங்கள்
மானனைய வள்ளிமண வாளனெங்கள் மருகன்
வள்ளியம்மைதானுமெங்கள்மகளலவோசொல்லில்.

---

46. குறிப்பு:

குறத்தி வசந்தன் என்பது குறத்திப் பாட்டு. ஒரு குறத்தி குறி கூறுவதாக அமைந்துள்ளது. பாட்டுடைத் தலைவனைக் காமுற்ற தலைவி ஒருத்தியைக் கண்டு குறத்தி குறிகூறுகிறுள். இங்கே பாட்டுடைத் தலைவன் முருகக்கடவுள். இவ்வசந்தனில் குறத்தியின் வரவும் அவளது அலங்காரத் தோற்றமும் சொல்லப்படுகின்றன. தான் சக்ரகிரியில் வாழுங் குறத்தி என்பதைச் சொல்லித் தங்கள் ஒழுக்கத்தின் உயர்வையுங் குறிப்பிடுகின்ருள். அப்பால் ஆறுமுகவேலருக்குத் தங்கள் மகளைக் கொடுத்து அவரைத் தங்கள் மருமகனுகப் பெற்ற தங்கள் குலப்பெருமையைக் கூறுகின்ருள். பிள்ளையாரை வைத்து வேண்டிப் பின், முறத்திலே நெல்லைக் கொணரச்செய்து அதை எண்ணிப் பார்த்துக் குறி கூறுகிருள்.

1. ஓவியம் - சித்திரம்.

2. பாடகம் - காலில் அணிவது. சூடகம் - கையில் அணியுங் காப்பு.

3. கோதை - மலர்மாலையும், கூந்தலும்; மாலையணிந்த கூந்தல் புரள என்றபடி. குவளை - கருநெய்தற் பூ. பாடுவிச்சி - குறிசொல்பவள்.

# 47. குறத்தி வசந்தன்

இன்னொருவகை

### தாழிசை

ஐங்கர னைப்பணிந் ததிசய மாகவே
யதட்டிக் குறிசொன்னவள்
அருமைய தாகிய வள்ளிதன் முன்போய்
அறிவுடன் குறிசொன்னவள்
கைவச மாமென்று அல்லியர் முன்போய்
கருதிய குறிசொன்னவள்
கன்னி யுருக்மிணி யம்மைதன் துயரைக்
கண்டே குறிசொன்னவள்
மையுறு கண்ணில் அழகுட னெழுதி
வடிவுறக் குழல்முடித்து
வங்கண மாகிய கூடையுந் தலையில்
வாகுட னேவைத்து
கையது தன்னில் கடக மணிந்து
கருமைத் துகிலுடுத்துக்
கண்டவர் மயங்க ஒயிலுடன் களரியில்
குறத்திவந் தனளே.

### தரு

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினன
தென்னதெந் தென்ன தெந்தினதெந்தின தினன

1. 'முந்திமுந்தியுனைத்தொழுவேன்முருகர்சகோதரனே
முத்தளந்தோன் திருமருகா மூஷிக வாகனனே'.

2. ஐங்கரனை முன்னிறுத்தி ஆனகுறி சொல்ல
அடைகாயும் வெள்ளிலையும் அரிசியுமே கொடுவா.

3. கந்தமலை யுகந்தமலை கதிரைமலைச் சாரல்
கனகமலை யெங்கள்மலை கழுகுமலை காணும்.

4. விந்தைசெறி திருமருதூர் திருவாரூர் நகரும்
விளம்புமற்று மாலயமும் வேலருறை நகரும்.

5. கன்றெடுத்துக் கனியெறிந்த கரியதிரு மாயன்
கருதரிய மருகனென முருகனெனும் வீரன்.

6. தண்டமிழ்சேர் விளங்குதில்லை தழைக்கவரு முருகன்
சரணமலர் பணியுங்குறத் தையலடி நாங்கள்.

7. மானனைய வள்ளிமண வாளரெங்கள் மருகன்
வள்ளியம்மைதானுமெங்கள் மகளலவோசொல்லில்

8. சக்கரக்கை மாயனெங்கள் மைத்துனனே யாகும்
சங்கரிதன் பங்கனெங்கள் தமயனடி யம்மே.

---

47. குறிப்பு:

இதில், முதற்பாட்டில் குறத்தி இன்னாரின்னாருக்கு முன் குறிகூறியவள் என்பதும், அவள் வரவுங் கூறப்பட்டிருக்கின்றன. குறத்தி தான் இருப்பது **கதிரைமலை**யைச் சார்ந்த கனகமலை என்கின்றாள். தங்கள் வழிபடு தெய்வம் முருகன் என்கிறாள். இலங்கையில் சுப்பிரமணியக் கடவுளுக்கு உரிய மலைகள் சொல்லப்படுகின்றன. குறத்தி திருமாலைத் தங்கள் மைத்துனராகவும், சிவபெருமானைத் தங்கள் அண்ணனாகவுஞ் சொல்கின்றாள்.

1. (தாழிசை) வங்கணம் - விரும்பத்தக்க.
2. அடைகாய் - பாக்கு.

# 48. குறத்தி வசந்தன்

வேற்றுருவகை

தரு

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினன

1. முந்திமுந்தியுனைத்தொழுவேன் முருகர்சகோதரனே
முத்தளந்தோன் திருமருகா மூஷிக வாகனனே.

2. மூத்தபிள்ளைக்கொருதேங்காய்முடியோடேகொடுவா
அடைகாயும்வெள்ளிலையும் அடைவுடனே கொடுவா.

3. ஐங்கரனை முன்னிறுத்தி யானகுறி சொல்வேன்
அன்பாக முன்னிருந்து செவிகொடுத்துக் கேட்பாய்.

4. வருமனமே தாடிகையை வாய்த்தகுறி சொல்ல
வடக்குமுக மாயிருந்துன் வலதுகையைத் தாரும்.

5. வாசற்படிப் பல்லிவந்து நேசத்துடன் சொல்லும்
வருவாரெடி யுன்கணவன் வள்ளிமண வாளன்.

6. எக்குறிகள்பொய்த்தாலுமென்கைக்குறிபொய்யாது
இருந்தருளும்போறேனென்றுஎந்திழையும்நடந்தாள்.

வேறு

1. கொங்குமலை யாழமெல்லாந் திரிந்துகுறி சொல்லி
கொடியிடையாள்குறமாது கொலுவினிலேவந்தாள்.

2. குண்டிடுக்கிக் குடுகிடுக்கிக் கூடைகையி லேந்தி.
குனிந்துநின்றுபழம்பொறுக்கும் குறத்தியடியம்மே.

3. இடுக்குப்பெட்டி தனையிடுக்கிச் சங்குவடம் பூண்டு
இருகாதுந் தோடணிந்து வாறகுற மகளே.

4. காட்டெருமைக் கொம்பெடுத்து மூகட்டுவளை யேற்றிக்
கவரிமான் மயிர்பிடுங்கி கத்தைகட்டி வேய்ந்து.

5. தாளைமடல்லோலைகொண்டுதனித்தனியேகுடில்வளைந்து
பாளைமணம் வீசுகின்ற பரிமளப்பூஞ் சோலை.

6. பச்சைமலை பவளமலை எங்களது நாடு
பரமசிவ தேவர்வந்து இருந்ததந்த நாடு.

7. கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு
கொடியிடையாய்போறேனென்றுகூறிநடந்தனளே

---

48. குறிப்பு:

குறத்தி, நெற்குறி, பல்லிசொற்குறி, கைக்குறி என்பவற்றை ஆராய்ந்து குறி சொல்லத் தொடங்குகிருள்.

2. மூத்தபிள்ளை - பிள்ளையார்.

4. வரும் அன்னமே! கையைத் தாடி எனப் பிரித்துக்கொள்க.

## 49. செல்லப்பிள்ளை வசந்தன்

### தரு

நன்ன நன்ன நானே நானு—நானே நன்ன நானே நன்னு

1. செல்லப்பிள்ளைவந்தானையாதெள்ளுதமிழ்ஓதவென்று
சொல்லவல்லஏடெடுத்துத் தும்பிமுகன்றனைப்பணிந்து.

2. வல்லவரந் தந்தானென வாரணன்றனைத்துதித்து
நல்லசங் கீதம்படித்து நாமகளைப் பூசைசெய்து.

3. சில்லுப்போலே காதுங்குத்தி சில்லோலைத் தோடும்வைத்து
கல்லைக்குடையாய்ப்பிடித்தகண்ணரைப்பாராட்டிக்கொண்டு

4. குண்டலங் காதிலணிந்து குவளைமாலை கழுத்திலிட்டு
மண்டலமா வளைந்ததண்டை மாரனெனக் காலிலிட்டு

5. கச்சையும்புனைந்திறுக்கிக் கன்னமாலை தானணிந்து
செச்சைமாலையும்புனைந்துசெல்லப்பிள்ளைதோன்றினனே.

.1

6. சித்திரக்கட சந்தரித்துச் செங்கைவளை தானணிந்து
குத்திரமில் லாதநெஞ்சன் கொந்துலவு மாலைமார்பன்

7. முத்துவன்னச்சட்டையிட்டு முன்கைமூதாரியணிந்து
நெத்திதனிற்பொட்டுமிட்டு நிருத்தமிடத்தோன்றினனே

## மறுதரு (சிந்து)

1. உல்லாச நடையழகன்—செல்லப்பிள்ளை
ஒருகையி லேயெழுத் தாணியுடன்
கையார மையல்கொள்ள—செல்லப்பிள்ளை
களரியிலே வந்து ஆடுவனும்.

2. பள்ளிக்குப் போறேனென்று—செல்லப்பிள்ளை
பழஞ்சோறுந் தயிரும்மா யுண்டுபோட்டு
கள்ளத்தன மடித்துக்கொண்டு—கம்பெடுத்துக்
களரியிலே வந்து ஆடுவனும்.

3. பாலைப்பழமெடா செல்லப்பிள்ளை—யுனக்குப்
பாலும் பழமுமெடா செல்லப்பிள்ளை
நாவற்பழமெடா செல்லப்பிள்ளை—யுனக்கு
நாவுக் கிரசமெடா செல்லப்பிள்ளை.

4. சந்தனங்கஸ் தூரிகமழச்—செல்லப்பிள்ளை
சத்திகண் ணகையைப்புகழ்ந் தாடுவனும்
தெந்தின தினவெனவே—செல்லப்பிள்ளை
தேவிகண் ணகையைத்துதித் தாடுவனும்
இந்திராதியர் மகிழ—செல்லப்பிள்ளை
ஈஸ்வரியைத் துதித் தாடுவனும்.

---

49. குறிப்பு:

4-ம் பாட்டில் 'குவளைமாலை கழுத்திலிட்டு' என்பது சில பிரதிகளில் "கோலவன்னப் பொட்டுமிட்டு" எனவும், 7-ம் பாட்டில் நெத்திதனிற் 'பொட்டுமிட்டு' என்பது 'சுட்டியிட்டு' எனவும் பாடபேதமாகக் காணப்படும்.

7. நெற்றி என்பது எதுகை நோக்கி நெத்தி என நின்றது உலக வழக்கு.

# 50. செல்லப்பிள்ளை துரிதம்

1. தித்தா திமித்தி யெனவே—செல்லப்பிள்ளை
தெந்தின தினவெனவந் தாடுவனும்.

2. சத்திகண் ணகையைப் புகழ்ந்து—செல்லப்பிள்ளை
தத்தா திமித்தியென்று ஆடுவனும்.

3. பத்தினி யம்மையைத் துதித்தே—செல்லப்பிள்ளை
பத்தர்கள் பரவவந்து ஆடுவனும்.

4. சந்தனங் கஸ்தூரி கமழச்—செல்லப்பிள்ளை
சங்கரி தனைத்துதித்து ஆடுவனும்.

5. தெந்தின தின வெனவே—செல்லப்பிள்ளை
தேவிகண் ணகையைப்புகழ்ந் தாடுவனும்.

6. இந்தி ராதியர் மகிழச்—செல்லப்பிள்ளை
ஏகபர மேஸ்வரியைத்துதித் தாடுவனும்.

# 51. மண்டி வசந்தன்

தரு

தெய்குதத்த தெய்குதத்த

1. மானும்மானுந் தோப்பிலே
வயித்தியநாதன் வயலுள்ளே.

2. காட்டுக்கோழியுங் கானங்கோழியும்
உள்ளானும்படக் கண்ணிகுத்தி.

3. கானங்கோழியும் உள்ளானும்படக்
கலந்துகண்ணியைக் குத்தெடா.

4. ஆமையோடாம் சேர்வைக்காலாம்
அத்திமலையாம் கங்காளமாம்.

5. கறுத்தப்பள்ளனுஞ் சிவத்தப்பள்ளனுங்
கழுகடிவய லுழுகையிலே.

6. தெய்குதத்த தெய்குதத்த
தெய்குதத்த தெய்குதத்த
தெய்தாம், தெய்குதத்த தெய்குதத்த.

---

51. குறிப்பு :

இது **மண்டு** வசந்தன் எனவும்படும். மண்டியிட்டு நின்று ஆடுத லால் இது இப்பெயர் பெற்றது போலும். மண்டு என்பது ஒரு மரத் துக்கும் பெயர். இம்மரம் மட்டக்களப்பில் உண்டு. மண்டூர் என்னும் தலப்பெயர் இம் மரங் காரணமாக வந்தது என்பதறிக. இது வெறும் வேடிக்கைப்பாட்டு.

4. சேர்வைக்கால் - உண்ணுங் கலத்தை வைத்து உண்ணுவதற்கு ஆதாரமானகால். பித்தளையாற் செய்யப்படுவது. இது மட்டக்களப் பில் எல்லார் வீடுகளிலும் உள்ளது. இப்பாட்டின் பிற்பாதி சுத்தமான பாடமாய்க் காணப்படவில்லை.

5. 'உழுகையிலே' என்பது 'உழுதக்கே' எனவும் சில பிரதி யிற் காணப்படும். இங்ஙனம் — **க்கே** என்னும் ஈற்றை வைத்துச் சொல்வது மட்டக்களப்பு வழக்கு.

## 52. செவ்வாய் வசந்தன்

தரு

தின்னை தென்னை—தின்ன தெந்தனத் தென்னை

1. சீரி லங்கிய தென்கதிரைச்
செவ்வடி வேலர்த மைப்புகழக்
காரி லங்கிய தந்திமுகவன்
கற்பகப் பொற்பதங் காப்பாமே.

2. காப்பணி மங்கையர் மன்மதவேள் நெற்றிக்
கண்ணன் குமார னதிபாலன்
சீப்புடன் மல்லிகைப் பூமாலைதந்து
சேர்வனென் றனெடி மானரே.

3. மானே குலக்கொழுந் தேநல்ல
வன்னவி ரலுக்கு மோதிரமும்
நானே தருகுவ னென்றென்னை
நழுப்பி னைடி நல்லன்னமே.

4. தையலர் கிண்டங்கிச் சேலைகளாம் – நல்ல
தாலியுட் கட்டுவ ளையலுடன்
வைய மதிக்கவே முத்துச் சரப்பளி
மாலை தருவாண்டி மானரே.

5. வஞ்சி யிலைபிள காம்நல்ல
மார்புழுகு பன்னீர் சந்தனமாம்
இஞ்சிய கற்பூரந் தந்தெனைமேவ
என்ன தவஞ்செய்தோ மானரே.

6. சொன்ன விசுவாசம் மெத்தவுண்டு – தம்பி
தோதகக் காரன் மதனகலை
தன்னை யறிந்தவ னென்றனை மேவ
என்ன தவஞ்செய்தோ மெல்லியரே.

வேறு

7. மஞ்சற் குருவி போலே
மடிநிறைந்ததோர் மல்லிகைப்பூ
சிந்தித் தெருவில் வாற
சிறுக்கனல்லடி தென்சேரியான்.

8. ஆற்றுக்குள்ளே சிரும்பி கட்டி
அங்கேநின்று படைபொருது
வேர்த்து வாருன் வடசேரியான் – நல்ல
வெள்ளி மடல்கொண்டு வீசுங்கடி.

9. ஆற்ருேரம் போற மயில்
ஆண்மயிலோ பெண்மயிலோ
பார்த்து வாடா வடசேரியான்
பாகல் பழம்போன் மாலைதாறேன்.

10. நத்தை மிதந்தாற் போல
நாவற்சருகு பறந்தாற்போல
பாவட்டம் பத்தைக் குள்ளிருந்து – பயல்
பாய்ந்து கரத்தைப் பிடித்தானடி.

11. ஈச விறகு போலே
இந்திரவர்ணக் கிண்டாங்கி
வீசி நடந்தா லுமும்மை
வேண்டுவ தாரடி மின்னுரே.

12. மலைக் குறத்திக்கு மையல்கொண்டு
மன்னும்வளையல் விற்பவர்போல்
வாற குறவரைக் கண்டவுடன்
வடிவேலவர்வேங்கை மரமானுர்.

---

52. குறிப்பு:

இக்கவி தலைவி ஒருத்தி கதிர்காமத்தையன் மேல் மோகங் கொண்டதாகவும் அவர் தன்னைச் சந்தித்துப் பேசியதாகவும் அவள் தன் தோழிக்குச் சொல்லி மகிழ்ந்து பாராட்டியது.

2. மங்கையர் - மங்கையர்க்கு. மன்மதவேள் - மன்மதன் போன்ற வேள் என்க. வேள், குமாரன், நதிபாலன் என்பன கந்தசாமியாரைக் குறிக்கும் பெயர்கள். நதி - இங்கு கங்கை.

3. நழுப்பினுன் - ஆசைகாட்டி மயக்கினுன்; மயங்கச்செய்தான்.

4. கிண்டங்கி - ஒருவகைப் புடவை, சாயமூட்டிய பருக்கன் சீலை. உட்கட்டு - கழுத்தில் அணியும் ஒருவகை ஆபரணம். சரப்பளி மாலை - முத்துமாலை, கழுத்திலணிவது.

5. இஞ்சிய - இறுகிய, கட்டியான.

6. விசுவாசம் - நம்பிக்கை வார்த்தை. தோதகக்காரன் - ஏய்ப்பவன்.

7. இச் செய்யுள் முதல் 10 - வரையும் வடசேரியானைச் சில தென்சேரிப் பெண்கள் பழிப்பாகப் பேசுவது காண்க.

12. மலைக்குறத்தி - வள்ளியம்மை.

# 53. முயிற்று வசந்தன்

தரு

தனம்தனம் தனதானு—தன—தானதனுதன தானினதானு.

1. கனந் தருங்குழ லாரே—யெங்கள்
காரிகை யேயொரு கதைசொலக் கேளும்
தனந்த னுதன வெனவே—நல்ல
தந்தி முகன்றனை வந்தனை செய்வோம்.

2. சதங்கை தண்டைக ளார்ப்பச்—செய
சண்முக வேலர் தமைத்துதி கூறித்
ததிங் ததிங்திமி யெனவே—என
தாழ்குழ லேபணிந் தாடிட வாரும்.

3. மதங்கி சுந்தரி தேவி—மக
மாரிப தந்தனை யேதொழு தேத்தி
விதம்வி தம்புகழ் பாடி—எங்கண்
மெல்லிய ரேபணிந் தாடிட வாரீர்.

4. அத்திர வேல்விழி யாரே—எங்க
ளாரமு தேபசி யாகுது நாங்கள்
மெத்திய காவினி லேகி—அங்கு
மேவிய கனிவகை தான்கொய்யப் போவோம்

5. அண்டமு லாவிய மாவில்—ஏறி
அங்குறு கனிகளை ஆய்ந்திடப் போனேன்.
சென்றெதிர் வருகுது முயிறு—என்
சிரசைத் துறையடி சேயிழை யாரே.

6. வம்பவிழ் சம்புவி லேறி—அங்கு
வயங்கிய கனிகளை ஆய்ந்திடப் போனேன்.
கம்பிபேர்ல் வருகுது முயிறு—என்
கண்ணைத் துறையடி காரிகை யாரே.

7. முடுகிய எகினம தேறி—யானும்
கடுகியேகனிகளைக் கவர்ந்திடப்போனேன்.
கடுகியே வருகுது முயிறு—என்
கழுத்தைத் துறையடி கார்க்குழ லாரே.

8. வண்டணை மாமலர் கொய்ய—நல்ல
தண்டலை மீதுத யங்கியே போனேன்
சென்றெதிர் வருகுது முயிறு—என்
செவியைத் துறையடி தேமொழி யாரே.

9. மந்தியெ னும்படி. சென்றே—நல்ல
முந்திரி கைக்கனி யாய்ந்திடப் போனேன்.
பந்தியாய் வருகுது முயிறு—என்
பழுவைத் துறையடி பைந்தொடி யாரே.

10. அந்தர மாகிய பசியால்—நானும்
அரம்பையின் கனிபறித் தருந்தவே போனேன்.
வந்தெதிர் முடுகுது முயிறு—என்
வயிற்றைத் துறையடி மாதுநல் லாரே.

11. பற்றி யெழுந்திடு பசியால்—நானும்
பாகலி லேறிப் பழங்கொய்யப் போனேன்
தொற்றியே வருகுது முயிறு—என்
துடையைத் துறையடி தோகைநல் லாரே.

12. தந்திர மாகவே நடந்து—நானும்
கந்தியி லேறியே கனிகொய்யப் போனேன்
எந்தன்முன் வருகுது முயிறு—இரு
காலைத் துறையடி ஏந்திழை யாரே.

---

53. குறிப்பு :

இது **முயிறுகடி வசந்தன்** என்றும் வழங்கும். முயிறு என்பது செந்நிறமுள்ள எறும்பு. இச்சொல் முசிறு, முசுறு, முசுடு என்றும் வழங்கப்படும். இக்கவி மிக்க நகைச்சுவை பயப்பது. சோலைக்குப் போய் அங்குள்ள கனிமரங்களில் பழம் பறித்து உண்பதற்காக ஏறினவனை முயிற்றெறும்புகள் சூழ்ந்து கடிக்க, அதனால் அவன் துன்பப்பட்டதைக் கூறுவது.

இதில் வந்த **துறையடி** என்பது மட்டக்களப்பு நாட்டு வழக்குச் சொல்; துடைத்தல் என்பது துறைத்தல் எனத் திரித்து வழங்கப் படுவது காண்க.

1. கனந்தருங் குழலாரே - மேகத்தை ஒத்த கூந்தலையுடைய தோழியே; கனம் - மேகம்.

4. அத்திரம் - கையினால் விடுக்கப்படும் படை; அத்திரமாகிய வேல் என்க.

6. வம்பு - வாசனை. சம்பு - நாவல்மரம். கம்பிபோல் - நிரை நிரையாக.

7. முடுகிய - பக்கத்தில் (சமீபத்தில்) உள்ள; முடுகு, முடுகடி என்பன **சமீபம்** என்னும் பொருளில் மட்டக்களப்பில் வழங்குஞ் சொற்கள். எகினம் - எகின்; எகின் என்பது புளியமரம். கடுகி - விரைந்து.

8. தண்டலை - சோலை, பூந்தோட்டம்.

9. பழு - விலா, உடலின் பக்கம்.

10. அரம்பை - வாழை.

11. பாகல் - பலாமரம்.

12. கந்தி - கமுகு.

---

# 54. சவனிக்கை வசந்தன்

### தரு

நன்னானே நன்னானே நானநன்ன நன்னானே

### I

1. சீருலவு கண்ணகைதன் செங்கமலத் தாள்பணிந்து
ஏருலவு மிசைவசந்தன் இன்பமுடன் யானுரைக்கக்
காருலவு கரடதடக் கற்பகமே காத்தருள்வாய்!
தாருலவுஞ் சரசுபதித் தாயேநீ தமிழுதவாய்!

2. உதவிசெயும் உமைமகனே உம்பர்கடம் பெருமானே!
இதமுடனே இசைபகர ஏகபரன் துணையாமே.

3. துணைசெய்வடி வேலவனே! தூயமக மாரியம்மே!
இணையொருவ ரில்லாத ஏகபர சோதியம்மே!

4. அம்மையெனு மாதிசத்தி அகி(ல)லோக காரணியே!
இம்மைதனில் நோய்பிணிக ளெய்தாம லருள்புரிவாய்!

### II

5. பாகனைய மொழிமாதே பாவையரே பகர்ந்திடக்கேள்
நாகமதி லொருநாகம் நடிக்குதுபார் நாயகியே!

6. நாயகியே இவ்வுலகில் நானுமொரு கதைசொலக்கேள்
பாயசத்தை யீயருந்தும் பண்புதனைப் பார்தோழீ!

7. தித்தியென நடனமிடுஞ் சேயிழையே செப்பிடக்கேள்
அத்திதனை அத்திதின்ற அதிசயத்தைப் பார்தோழீ!

8. நாவியொடு மாலைதுன்னும் நங்கையரே நான்சொலக்கேள்
மாவதனை மாவருந்தும் வண்மைதனைப் பார்தோழீ!

9. சொல்லரிய பெண்ணரசே தோகையரே சொல்லிடக்கேள்
கல்லதனைச் செல்லருந்தும் காரியத்தைப் பார்தோழீ!

## 54. குறிப்பு :

இக் கவியும் 45-ம் வசந்தன் கவியைப் போன்றது. சவனிக்கை வசந்தன் என்னும் பெயரின் காரணம் நன்கு விளங்கவில்லை. **சவனிக்கை** என்பது மட்டக்களப்பில் ஒருவகை மத்தளத்துக்குப் பெயராக வழங்குவது. இம் மத்தளத்துக்கு ஒரு முகம் மாத்திரம் உண்டு. அதுவும் கைவிரல்களால் அடித்து வாசிக்கப்படுவதில்லை. ஒரு கயிற்றை அதில் பொருந்தக் கட்டி அக்கயிற்றைத் தெறிப்பதனுல், ஒலி உண்டாக்கப்படுவது என அறிக. இவ்வித சவனிக்கை மேளம் கோயிலிலும் வேறு பூசைச் சடங்குகளிலுந்தான் வாசிக்கப்படுவது. இந்த மத்தளம் இந்த ஆட்டத்தில் வாசிக்கப்படுவதால் இது இப்பெயர் பெற்றது எனக் கொள்ளலாம்போலும்.

இக்கவியில் முற்பாகம் தோத்திரமும் பிற்பாகம் விநோத சித்திரப் பாவும் ஆக அமைந்திருத்தல் காண்க. விநோதப் பகுதியில் வெளிப்படையாகப் பொருத்தமற்ற ஒரு பொருள் தொனிப்பதும் உண்மையான பொருள் மறைந்திருப்பதும் படித்து அறிந்து இன்புறத்தக்கன.

5. நாகத்தில் வேருெரு நாகம் நடிக்கிறது என்பது வேடிக்கையாகத் தோற்றும் பொருள். புன்னை மரத்தில் குரங்கு இருந்து ஆடுகிறது என்றுவது வேறும் வகையாக ஆவது பொருள் கொள்ளலாம்.

6. இந்தச் செய்யுளில் அமைத்த விநோதம் அவ்வளவு சிறக்கவில்லை; காரணம் இதில் விநோதம் மறைந்தும் இயல்பான பொருள் வெளியாயும் இருப்பதுதான். பாய் அசத்தை ஈ அருந்துவதுதான் விநோதப் பொருள்; அதாவது பாய்கின்ற ஆடு ஒன்றை ஈ (இலையான்) தின்னும் என்பது. இயல்பான பொருள், **பாயசம்** என்னும் உணவை ஈ தின்னும் என்பது. இது மிக வெளிப்படையாய் அமைந்தது நகைச்சுவையைக் குறைப்பதாயிற்று.

7. இது முன் 45-ம் கவியிலும் வந்தது.

8. இதில் மாவை மா அருந்துதல் என்பது வேடிக்கையாகத் தோற்றுவது. மா என்பது விலங்கு, மாமரம், அரிசி முதலியவற்றின் மா என்பவற்றைக் குறிக்குஞ் சொல். மாவை ஒரு மிருகம் தின்றது என்றுவது, மாமரத்தைத் தின்றது என்றுவது பொருள் கொள்ளலாம்.

9. கல்லைச் செல் அரிக்காது; செல் - கறையான். கல்லைச் செல் அருந்துவதாகச் சொன்னது ஒரு விநோதம். கல்லை என்பது இலைகளைச் சேர்த்துத் தைத்த உண்கலத்துக்கும் பெயர். (இலைகளாலாய) கல்லையைக் கறையான் தின்றது என்பது உண்மைப் பொருளாமாறு கண்டு இன்புறுக.

## 55. கள்ளியங் குத்து

வேறொன்று

தரு

தானனே தானதந்த
தானனே தானினனு.

1. முருகா முருகையனே
மூத்ததம்பி விநாயகனே
முடியோடே மூன்றுதேங்காய்
படியோ டுடைப்பேனே.

2. உடைப்பேன் படைப்பேனே
உமக்குத் தராமல்நான் தின்பேனே
வழிநீளந் தின்பேனே
வாயிலே தாம்பூலம் போடுவேனே

3. சாந்து வாரியே பொட்டு மிட்டுத்
தண்ணீர்க் குடமுந் தலையில்வைத்து
சாந்தி லேதுளி தண்ணீர் பட்டால்
சாவேன் தண்ணீர்க் குடத்தோடே

4. கறுத்தச் சட்டையும் போட்டுக் கொண்டு
கையிலே வாளும் பிடித்துக்கொண்டு
புறத்தி லஞ்சாறு பேரையுங் கூட்டிப்
புறப்பட் டாராம் பாதிரியார்.

5. கூப்பிடக் கூப்பிடப் போறீரோ வண்டே
குளிர்ந்த நிழல்தேடிப் போறீரோ
நானும் வரவரப் போறீரோ வண்டே
நல்ல நிழல்தேடிப் போறீரோ.

6. கறுத்த சட்டையும் போட்டுக் கொண்டு
கையிலே வாளும் பிடித்துக்கொண்டு
புறத்தி லஞ்சாறு பேரையுங் கூட்டிப்
போனவர் மீண்டும் வருவாரோ.

# Part VI — பாகம் VI

## 56. தாய் மகள் ஏசல் வசந்தன்

தரு

நன்னநன்ன நானநன்ன நானநன்ன நானநன்ன நாஞ—நன்ன
நன்னநன்ன நானநன்ன நானநன்ன நானநன்ன—நாஞ.

1. சீருலவு ச்ரீராமச் செங்கணெடு மாலவனைப்
போற்றி—ஒரு
சிற்றடி யேன்வசந் தன்புகழ் பாடச்
சிந்துர மாமுகத் தைகர னேதுணை—செய்வாய்.

ஏருலவு மீசனுட னெவ்வுலகு மீன்றவுமை
தானும்-நல்ல
ஏர்பெறு வெற்றிவே லாயுத ரோடுதெய்
வானை வள்ளியு மென்மனத் திற்குடி—கொள்வீர்.

2. படியளந்த நெடியோனே பங்கயனே யென்வினைக
டீர்த்தே—உந்தன்
பாதமலர் எப்போது முதவிநற்
பாக்கிய முஞ்சுக போக்கிய முந்தரு—வாயே.

கடிகமழும் மாலையணி கண்ணகையே யெண்ணரிய
தாயே-உந்தன்
கஞ்சமலர்ப் பாதந்தந் தெனையாளும்
கலைமக ளேகவி பாடக் க்ருபைசெய்—வாயே.

3. பாகினிய மொழிமானே பங்கயம்போல் வதனமுறு
மகளே-இந்தப்
பாரமுகில் போலே யாரமிலங்கிடப்
பஞ்சா யுதத்துடன் வந்திங்கே நின்றவ—ராரோ ?

மாகமுறு வடிவுடைய மஞ்சுலவு நிறத்தவரைச்
சொல்வேன்-முன்பு
மாவலிதன்னிடம் வாமனமாகிப்போய்
மண்கவர்ந் தேயவர் வாழ்வை யழித்தவர்—தாமே.

4. வேயூதி யாவழைத்தும் வீடுதொறும் வெண்ணெய்
கவர்ந்துண்டும்—அந்த
மெய்ச்சிய பெண்கள்தங் கச்சைத் திருடியே
மெல்ல விருட்சத்தில் மல்கியிருந்தவர்—தானே?
வாயூது பாம்பணையான் மாயைசெய் மாயவனாய்
வந்தே—முன்பு
வாரிதி மேவிய சோமுகாசூரனை
மச்சாவ தாரமாய் வந்து வதைத்தவன்—தாயே.

5. மங்கையரைக் கற்பழித்து மாலயசெய் தேயாயர்
மனைதோறும்-வந்து
வலியதாம் பாலுரலிற் கட்டுண்டு
வல்லசு கடுமருதும் உதைத்தவர்—தானே?
எங்கணுந்தன் ஆணைசெல்ல எவ்வுலகுமாளு
மிரணியனை—முன்பு
எங்கும் புகழ் நரசிங்கம தாயவன்
அங்கம்பிழந் தடல்கொள்ளும் அரியராமர்—தாயே.

6. பூதனையின் பாலோடவள் ஆவியும் அருந்திமுன்பு
பேர்ந்து—சென்று
புங்கமோ டேபசுக் கன்றெறிந் தேவிளா
வின்கனி யும்விழச் செய்த மாதவன்—தானே?
ஆதிசிவன்றனக்கா யாழிபுவி அசரசரம்
யாவும்-முன்பு
ஆசனம் பண்ணி அற்புதமாயோர்
ஆலிலைமீதி லமர்ந்து துயின்றவர்—அம்மா.

7. ஆழிதனிற் கமடமதாய் அன்றுமந் தரகிரியைத்
தாங்கிப்—பின்பு
அண்டருக்கா யமிர்தம் பகிர்ந்தூட்டியவர்
அனைவரும் போற்ற அடல்பெற்றவ ரிவர்—தானோ?
காளியனில் நிருத்தமிட்டுங் கல்லெடுத்து மழைதடுத்தா
னன்று—பின்பு
கல்லைப் பெண்ணாக்கியே வல்லையிற் சீதையைக்
கண்டுசென்றேமணங்கொண்டகடவுள்காண்—அம்மா.

---

56. குறிப்பு:

6. புங்கம் - உயர்ச்சி. ஆசனம் அசனம் என்பதன் நீட்டல் விகாரம். அசனம் - போசனம்.

7. கமடம் - ஆமை. வல்லை - வலிமை.

---

# 57. கும்மி வசந்தன்

### தரு

நன்னன்ன நானன்ன நானனை நன்ன
நானன்ன நானன நானநா

1. சிற்பர வத்துவெ னும்வடி வேலவர்
செந்தமிழ்க் கும்மியைச் செப்புதற்குக்
கற்பக மாகிய தந்திமு கத்துக்
கணபதி பாதம் மறவேனே.

2. செந்திவே லாயுதர் தன்புகழ் பாடவே
செங்கம லத்தி லுயர்ந்திருக்கும்
சுந்தர மாகிய முண்டகன் றேவியே
தூயவ ளேதமிழ் தந்தருள்வாய்.

3. சண்டனை மண்டி யுதைத்திடும் பாதனே
தக்கன் மருக னெனும்பரனே

அண்டர்கள் தேடற் கருவுரு வாகிய
ஐயனே யுந்தன் அருள்புரிவாய்.

4. அம்பிகை சூலி சவுந்தரி யேயரி
ராமன் சகோதரி யானவளே
தும்பி முகனை யருள்புரி தேவியே
சோதியே யுந்தன் அருள்புரிவாய்.

5. வாரியில் வாரணம் ஓலமி டும்பொழு
தாதர வாக அருள்புரியும்
நாரண னேசெய காரண னேயுனை
நம்பினே னுன்பதந் தஞ்சமையா.

6. சூரனைச் சிங்கனைத் தாரகனை மற்றும்
துட்ட அசுரரை வேரறுத்த
மாரனை மாய்த்தவன் மைந்தனென்றே நாங்கள்
வாழ்த்திக் கும்மி யடித்திடுவோம்.

7. வள்ளி தனக்காத் தினைப்புனந் தன்னிலோர்
மானிட னாகவே வந்துநின்று
துள்ளி மயிலேறுஞ் சுப்ர மண்யனைத்
துதித்துக் கும்மி யடித்திடுவோம்.

8. வள்ளி தெய்வானை மணாளனென் றும்வடி
வேலவ னென்றும் மனத்திலுன்னி
தெள்ளிய கோழிக் கொடியனென் றுந்துயர்
தீரக் கும்மி யடித்திடுவோம்.

9. அய்யனை யெங்க ளறுமு கனையம
ரர்பதி காத்த அருமருந்தை
துய்ய பிரமற் சிறைவை முருகனைத்
துதித்துக் கும்மி யடித்திடுவோம்.

10. குன்றுகள் தோறும் நடம்புரியுங் கொற்றக்
குமர குருபர நாதனென்றே
கன்றை யெறிந்திடு கண்ணன் மருகனைக்
கருதிக் கும்மி யடித்திடுவோம்.

# 58. கும்மி வசந்தன்

வேறு வகை

தரு

*தந்தனத் தான தனதாலு தன்ன*
*தானதன தன தாலுலு.*

1. சரச மோகனப் பெண்ணுரே நல்ல
சல்லாபத் தோழிக் கரும்பாரே
பரமர் தென்கோண நாயகர் வீதியிற்
பவனி வாறதைப் பாருங்கடீ.

2. நாரண தேவர் முதலனை வோரும்
நற்பத பூசை புரிந்தருளும்
சீர்வளர் கோணேசர் வீதியில் வாற
சிங்காரம் பாரடி மங்கையரே.

3. சிங்கார மாதரே ஆதித்தென் கோணேசர்
திருமுன் பாக மனமகிழ்ந்தே
மங்கள சோபனம் பாடிக்கொண் டேகூடி
வசந்த ஞடுவம் வாருங்கடீ.

4. தாடாண்மை மாலயன் போற்றிசெயுந் திருச்
சரண வேதியர் கோணேசர்
மாடேறி வீதியில் வாறதைக் கண்டு
வளைந்து கும்மி யடியுங்கடீ.

5. பாடகத் தாட்சிலம் போசையிட நல்ல
பங்கய மாமுகம் வேர்வரும்பச்
சூடகச் செங்கை விரித்தாடிப் புடை
சூழ்ந்து கும்மி யடியுங்கடீ.

6. ஆடகச் செம்பொற் பணியாடக் குழை
ஆட மருங்கிற் கலையாடச்
சூடகச் செங்கை வளைகுலுங்கப் புடை
சூழ்ந்துநின் றேவிளை யாடுமடீ.

7. விளையு மிங்கித மிஞ்சிட வேயொளி
மேவிய வெண்ணகை தான்துலங்கப்
புளக மிஞ்சிய மனோ ரஞ்சிதப்
பூவைய ரேபுகழ்ந் தாடுமடீ.

---

58. குறிப்பு:

4. தாடாண்மை; சலிப்பற்ற முயற்சி. சரணம் - பாதம்.

7. இங்கிதம் - குறிப்பு, இனிமை.

---

## 59. ஊஞ்சல் வசந்தன்

தரு

*தந்தனத்தோம் தானதன்னதன — தானத்தோம் தனதான*

கோச்சகம்

சீர்புகழுஞ்செட்டிநகர்ச் செல்வியெனுங்கண்ணகைமேல்
ஏர்புகழும் ஊஞ்சலிசை யின்பமுடன் பாடுதற்குப்
பார்புகழும் பாறுவதி பங்கனருள் செய்துதவும்
கார்புகழும் மத்தசலக் கற்பகத்தோன் காப்பாமே.

கண்ணிகள்

1. காத்தருள்வாய் ஆறுமுகக் காரணனே பூரணனே
நாத்தனிலே பாத்தருவாய் நங்கைசர சோதியம்மே.

2. அம்மையெனு மம்பிகையே யாலமுண்டோன்மங்கையரே
இம்மையிலேநன்மைபுரிந் தென்னையாட்கொண்டருள்வாய்.

3. ஆயருடை சேரிவளர் ஆரணனே காரணனே
தூயரகு ராமனெனும் சுவாமியருள் தந்திடுவாய்.

4. அருள்செறியுந்தேவகன்னியானவர்கள்யாவருமாய்
மருளகல ஊஞ்சலிட்டு வாழ்த்தவென்று வந்தனரே.

5. வச்சிரத்தாற் கால்நாட்டி மரகதத்தால் விட்டமிட்டு
மெச்சரிய பொற்கயிறு மேதகைய மேற்போட்டு.

6. ரத்தினவைடூரியத்தால் இட்டதொருபலகைவைத்து
சத்தகன்னியானவர்கள் தகவுறுபொன்னூஞ்சலின்மேல்

7. மஞ்சுலவுகேசமுடைவணிகர்குலக்கண்ணகையைப்
பஞ்சணைசேர்பலகையின்மேற்பாவையர்கள்வைத்தனரே

8. வைத்தபின்புகன்னியர்கள்வாழ்த்தொலிசெய்தேத்தினரே
சுத்தகுண சுந்தரியே தோகையபி ராமியம்மே.

9. அந்தரியே சுந்தரியே ஆயனுடை தங்கையரே
கந்தனைமுன் பெற்றெடுத்தகன்னியெமைக்காத்தருள்வாய்.

10. முத்துமக மாரியம்மே மொய்குழலே மூவுலகம்
ஆத்தனையும் ஈன்றருளும் ஆதிசத்திகாத்தருள்வாய்.

11. தக்கனுடைவேள்விதனில்சார்ந்திருந்தவானவர்கள்
துக்கமுற வேயழித்த தூயவளே காத்தருள்வாய்.

12. அண்டரிடர் தீர்ப்பதற்கு ஆறுமுகனைப்பயந்த
சண்டிகையே சங்கரியே தாயேநீ காத்தருள்வாய்.

13. மட்டில்வள மாநகர் மாமகளா வந்துதித்த
செட்டிகுலக்கண்ணகையேதேவியெமைக்காத்தருள்வாய்.

14. வேம்பலங்கன் மார்பனெனு மீனவனை யீடழித்த
காம்பனையதோளணங்கேகண்ணகையே காத்தருள்வாய்.

15. நாகமணி நூபுரஞ்சேர் நாரணியே பூரணியே
ஏகபர மானவம்மே எங்கள்துயர் தீர்த்தருள்வாய்.

16. எப்பிழைகள் செய்தாலும் எங்களம்மே காத்தருள்வாய்
தப்பிதங்கள் வாராமற் சங்கரியே காத்தருள்வாய்.

17. சொற்பெரிய தேவிபுகழ் சொல்லறியா தேனுரைத்தேன்
எப்பிழைவந்துற்றாலும்எங்களம்மேகாத்தருள்வாய்.

---

## 60. ஊஞ்சல் வசந்தன்

வேறொன்று

### தரு

தந்தனத்தோம் தானத்தோம்—தன
தந்தனத்தோம் தானத்தோம்

1. சந்தனத்தாற் கால்நாட்டி—நல்ல
தங்கவளை தான்போட்டு
அந்தரத்தே ஊஞ்சல்கட்டி—உதைத்
தாடிடுவோம் வாதோழி

2. வாருமடி தோழியரே—ஊஞ்சல்
வாகுடனே வீசுதடி
பாருமடி செம்பருந்து—ஒரு
பன்றியைக்கொண் டோடுதடி

3. வாள்விழிசேர் மங்கையரே—நானும்
பாடல்சொலக் கேட்டருளும்
வீறுபுகழ் ஐங்கரனைப்—போற்றி
மெல்லிநல்லா ராடினரே

# 61. ஊஞ்சல் வசந்தன்

வேறென்று

1. உகந்தெடுத்த சந்தனத்தால்
ஒளிர்வயிரக் கால்நாட்டிப்
பகர்வரிய பளிங்கினல்
பாங்கான பலகையிட்டு.

2. பாங்கான சித்ரவர்ணப்
பண்பான கலையுடுத்து
இசைந்ததொரு ஊஞ்சலிலே
ஏந்திழைமார் தானேறி.

3. ஏறியிருந்தம் மணிபந்து
ஏந்திழையார் அடித்தாடி
ஆறியிருந் தோசைகண்டு
ஆனதொரு நாகமணி.

4. நாகமணி யோசையிட
நல்லதண்டை கலகலென
மேகவர்ணக் கண்ணியர்கள்
வெஞ்சா மரைபோட

5. கலைசோரக் குழல்குலையக்
கன்னியர்கள் ஆடினரே.

# 62. கப்பல் வசந்தன்

ஏலேலோ—ஏலேலோ—தத்தெய்யா
ஏலம்மா ஏலேலோ.

## விருத்தம்

திருவளரும் செட்டிநகர் தன்னிற்
றிகழுங்கண் ணகைமேல்
தருவளரும் அம்மா வெனும்வசந்தன்
தமிழ்பாட வந்துதவாய்
உருவளரும் ஒருமருப்பு முக்கண்ணு
முடையகரி முகவனென்றுங்
கருவளரும் கரடதட மதவென்றிக்
கணபதியே காப்பாமே.

## தரு

1. காத்தருளி யேவையம் பூத்தமுக் கண்ணி
காரணி பூரணி நித்யகல் யாணி
பார்த்தனுக்குப் பாசு பதம்வரங் கொடுக்கும்
பரனிடப் பாகம் பரிந்தினி திருந்தே
கார்த்திகே சனைமுன் பயந்தசிவ சத்தி
கம்பர்கா மாட்சியெனு மம்பிகைதன் மீது
ஏற்றமுட னம்மா வெனுங்கவிதை யோதவே
'இசையுதவு கலைமகளை மனதில்மற வேனே
— ஏலேலோ.

வேறு

2. மறையுடனே அரிபிரமர் — மற்றும்
வானவர்கள் தேடரிய
நறைகமழும் இமயம்கள் — என்னு
நாரணியைப் பாடுதற்குப்

பிறைமுடியோ னுடனுமையு — மற்றும்
பேசரிய வேலவரும்
அறைகழல்சேர் அரிதிருவும் — என்றும்
அரியமலர்ப் பதமருள்வீர் — ஏலேலோ.

வேறு

3. அருள்புரிந் திடுகவுரி அரியின்ச கோதரி
அரலோக பரலோக நவகோண வீரி
திருவுலவு செஞ்சண்டச் செல்வியபி ராமி
திரிலோக முழுதாழும் அரியா சனத்தி
மருவுலவு மாலையணி வழுதிநுதல் விழியை
மறைத்துமே மாங்கனி யதாகமு னுதித்து
உருமருவு மதுரைநகர் தனையெரி கொழுத்தும்
ஓதரிய கண்ணகையை நாவில்மற வேனே
--ஏலேலோ.

வேறு

4. மறத்துட னேவரு திசையும்—மற்றும்
மதுரை நகரத் தினையும்—அன்று
திறலுட னேஎரி கொழுத்தி—பின்பு
சேர்ந்த நுதல்விழி மறைத்தாள்
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
—ஏலேலோ.

---